www.padippakam.com

-31 மார்ச் '93


ரூ.3.00

# புதிய ஜனநாயகம்

ாங்.-ஜெயா.-பா.ஜ.க.

## பாசிஸ்டுகளுக்குள் ஜோடி மாற்றம்






படிப்பகம்

www.padippakam.com

# சுடுகாட்டையும் பட்டா போட்ட பாதகர்கள்! மக்கள் போராட்டம்!

ஊத்தங்கரை வட்டத்திலுள்ள கல்லூர் எனும் கிராமத்தில் வசிக்கும் 350 குடும்பத்தினருக்கு அருகில் ஒரு சுடுகாடு 3 ஏக்கர் பரப்பளவில் இருந்தது. இதை அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின் உள்ளூர் கட்சிப் பிரமுகர் தாதா கவுண்டர் மற்றும் நகர அ.தி.மு.க. செயலாளர் தேவராஜன் ஆகியோர் இணைந்து குடியிருப்பு மனை எனக் கூறி 1 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய்க்கு விற்றுவிட்டார்கள். வட்டாட்சித் தலைவர், வருவாய்த்துறை அதிகாரி, கிராம நிர்வாக அதிகாரி ஆகியோர் உடந்தையுடன் தனக்கு சொந்தமான நிலமென பாட்டாவும் போட்டுள்ளார். தாதா கவுண்டர் 3 ஏக்கரில் 45 சென்ட் தான் புறம் போக்கு என ஏய்த்து வருகிறார்கள்.

கடந்த 19-1-93 அன்று கிராமத்தின் கோவில் தர்மகர்த்தா இறந்ததைத் தொடர்ந்து அச்சுடுகாட்டில் புதைக்க ஊர் மக்கள் முடிவெடுத்தனர். தாதா கவுண்டர் 3 ஆண்டுகாலமாக தனக்கு பாத்தியப்பட்ட இடமென வளைத்து பிடித்துக் கொண்டு பிணங்களை புதைக்க விடாததால் ஏரிக்கு எடுத்துச் சென்றனர். தர்மகர்த்தா பிணத்தையும் அங்கு புதைக்கவிடாமல் தடுக்கப்பட்டதால் அதிகாரிகளிடம் மனுகொடுத்து அவர்கள் அனுமதி பேரில் போலீசு காவலுடன் புதைக்க ஏற்பாடானது. அக்கும்பல் கணக்குப்படியே 3 ஏக்கர் நிலத்தில் புறம்போக்கு நிலம் இருக்கிறது என்ற காரணத்தினால் அதிகாரிகள் புதைக்க அனுமதித்தனர். அதிகாரிகள் அளந்து கொடுத்த பகுதியில் புதைக்க குழிதோண்டிக் கொண்டிருந்த போது தாதா கவுண்டர் 25க்கும் மேற்பட்ட அடியாட்களுடன் வந்து தாக்கியதில் 15 பேர் படுகாயமடைந்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். தாக்குதல் நடக்கும் தருணத்தில் பாதுகாப்புக்கு வந்த போலீசு ''தண்ணீர் தாகம்'' என ஓடிப்போனதிலிருந்து அவர்களின் திட்டமிட்ட கூட்டு சதி அம்பலமானது. சம்பவம் ஓய்ந்தபின் போலீசு வந்து சமாதானம் பேசி நாடகமாடியது. பின்னர் பெண்களே பிணத்தை எடுத்துக்கொண்டு போய் புதைத்தது குறிப்பிடத்தக்கது.




இச்சம்பவத்திற்குப்பின் பலநாட்கள் ஆகியும் அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை. எவ்வளவு செலவானாலும் இடத்தை விடமாட்டோம் என ஆக்கிரமித்த கும்பல் திமிறோடு பேசி திரிகிறார்கள். ஆத்திரமுற்ற பகுதி மக்கள் சர்வ கட்சி சார்பாக தோழர் அ.ராதாகிருஷ்ணன் என்பவர் தலைமையில் 12.2.93 அன்று ஊத்தங்கரை அண்ணாசிலை அருகில் 500 பேர் அளவில் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதற்குப் பின்னும் அதிகாரிகள் மெத்தனமாக இருப்பதால் அடுத்த கட்டப் போராட்டத்திற்கு தயாராகி வருகிறார்கள்.

# தலித்துகளை தாக்கியவர்களுக்கு போலீசும், எம்.எல்.ஏ.யும் உடந்தை!

**தாழ்த்தப்பட்டவர் துணை ஜனாதிபதியானால் என்ன? தொகுதி எம்.எல்.ஏ. - மந்திரி ஆனால் என்ன? தாழ்த்தப்பட்டவர்கள் மீதான அடக்குமுறை, சுரண்டல், தாக்குதல், சமூகப்புறக்கணிப்பு ஒழிந்தபாடில்லை. தொடர்கின்றன. அமைச்சர் ஆனந்தன் தொகுதியில் பிப்ரவரி முதல்வாரத்தில் நடந்த சம்பவம் இது.**

**கல்லை வட்டம் சங்கராபுரத்திற்கு அருகே உள்ள புதுபாலப்பட்டு கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் சிறுபான்மையினர். பெருபான்மை சாதிக்காரர்கள் வன்னியர்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் தொழில், அருகில் உள்ள கல்வராயன் மலையில் கருவேப்பிலை ஒடித்து மொத்த வியாபாரியின் ஏஜெண்டுகளிடம் குறைந்த விலைக்கு விற்றுப் பிழைக்கும் தினக் கூலிகள். இவர்களுக்கு அரசு, அண்மையில் ஆதி திராவிடர் குடியிருப்பு - வீட்டுமனை பட்டா போட்டுத் தந்தது. ஆனால், அந்தமனை வன்னியர்களால் சொந்தம் கொண்டாடப்பட்டு எதிர்ப்பு கிளம்பியது. வன்னிய சாதி வெறியர்கள் ஒன்று திரண்டு காலணிக்குள் புகுந்து தாக்கி ஆட்டம் போட்டனர்.** ''பறப்பசங்களா! என்ன தைரியமிருந்தால் எங்க இடத்தில காலணிக்கு இடம் கேட்பீங்க?'' என்று சாதிவெறியைக் கக்கி தாக்கினர். வீட்டுக் கதவுகள், கூரைகள், வெளியில் கிடந்த உரல், உலக்கை போன்ற பொருட்களை நொறுக்கினர். தீ வைத்தும் கொளுத்தினர். சின்னப்பையன் என்பவரது பெட்டிக்கடையையும் நாசமாக்கினர். தாழ்த்தப்பட்ட மக்களை அடித்து விரட்டினர்.

உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலையில் தாழ்த்தப்பட்டவர்கள், மலை காடுகளிலும் குச்சி கிழங்கு காடுகளிலும் தஞ்சம் புகுந்தனர். வீராச்சாமி என்ற இளைஞர் அன்று இரவு சங்கராபுரம் போலீசு நிலையத்தில் புகார் கொடுத்தார். எஸ்.ஐ.மனோகரனோ ''குடித்துவிட்டு வீட்டுக்கு தீ வைத்து விட்டு புகார்வேற கொடுக்கிறியா?'' என அடித்து உள்ளே தள்ளினார். இரவு முழுவதும் வைத்துவிட்டு பிறகே வீராச்சாமி விடுவிக்கப்பட்டார். மறுநாள் தாழ்த்தப்பட்ட மக்கள் திரண்டு வந்து முறையிட்டபோது எஸ்.ஐ. மனோகரன் ''காலணி வீடு வேண்டாம் என எழுதி கொடுத்துவிட்டுப் போங்கடா, இல்லை உங்க மேல, வீட்டிற்கு தீ வைத்ததாக கேஸ் போடுவேன்'' என்று மிரட்டினார். இவர் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. இராமசாமியின் வலதுகரம் போன்றவர்.

இச்சம்பவத்தில் தொகுதி எம்.எல்.ஏ.வும் மேல் சாதிகாரர்களுக்கு உடந்தை. எம்.எல்.ஏ. முறையிட்ட தலித்மக்களை ''ஏன்டா, அவன் நிலத்தில் நீங்க வீடு கட்டிக்கொண்டால் அவனுக்கு நிலம் நீங்க கொடுக்க முடியுமா?'' என்று திட்டி அனுப்பியுள்ளார். காலணி வீடுகள் அம்மக்களுக்கு கிடைக்காததோடு எந்நேரத்திலும் தாக்கப்படலாம் என்ற அச்சத்திலேயே மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்,

அந்த எஸ்.ஐ.க்கும். எம்.எல்.ஏ.க்கும் எங்கிருந்து வந்தது இந்தத் திமிர்? நாம குட்ட குட்ட குனிவதால்தானே?! இவர்கள் வன்னிய உழைக்கும் மக்களுக்கும் எதிரானவர்கள் என்பதை உணர்ந்து சாதிவேறுபாடு இன்றி உழைப்பவர்கள் ஒன்றிணைய வேண்டும். சாதிவெறியர்களைத் தனிமைப்படுத்தி அவர்களோடு அவர்களுக்குத் துணைபோகும் மேற்படி கும்பலையும் எதிர்த்துப் போராடி முறியடிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

எட்டாம் ஆண்டு

8–9

1 - 31 மார்ச் '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# கிரிமினல்மயமான தமிழகம்

நாளும் தொடரும் வழிப்பறி, கொலை, கொள்ளை, கற்பழிப்புகளால் தமிழகமே கிரிமினல்களின் ராஜ்ஜியமாகிவிட்டது. தெருவில் நடந்து செல்லும் பெண்களிடம் தாலிபறிப்பு, பட்டப்பகலில் வீடு புகுந்து கொள்ளை, வழிப்பறி, பேருந்துகளை வழிமறித்து பயணிகளிடம் கொள்ளை, லாரி ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்களை அடித்துப் போட்டுவிட்டு பணத்தையும், வாகனத்தையும் களவாடிச் செல்வது, ஓடும் பேருந்திலேயே கற்பழிப்பு, வியாபாரிகளிடம் கொள்ளை, மாமூல் கேட்டு ரௌடித்தனம், கள்ளச் சாராய குண்டர்களின் அட்டகாசம் - என தமிழகம் முழுவதும் ரௌடிகளும் கிரிமினல்களும் கொட்டமடித்து வருகின்றனர். தலைநகர் சென்னையிலேயே நாளொன்றுக்கு 15-க்கும் மேற்பட்ட வழிப்பறி, கொள்ளைகள் நடக்கின்றன.

வழிப்பறி கொள்ளைகள் மட்டுமல்ல, கள்ளச்சாராயம், விபச்சாரம், கூலிக்குக் கொலை செய்வது, கட்டைப் பஞ்சாயத்து நடத்துவது, சாட்சி சொல்ல வருபவர்களை உயர்நீதி மன்றத்திலேயே வெட்டிக் கொல்வது, போலீசாரைத் தாக்குவது, போலீசு நிலையத்தையே முற்றுகையிட்டு கைதிகளை மீட்டு வருவது, ஓட்டுக் கட்சிகளின் குண்டர் படையாகச் செயல்படுவது என்பதாக கிரிமினல்களின் அட்டகாசங்கள் பெருத்துப் போய்விட்டன. அப்படியாராவது கைது செய்யப்பட்டாலும் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்களே தமது தொண்டர்களான இக்கிரிமினல்களை மீட்டுக் கொண்டுவந்து விடுகின்றனர். கிரிமினல்களாக இருப்பது தவறல்ல; அதுவும் ஒரு தொழில் என்கிற முறையில் சமூக அங்கீகாரம் பெருமளவுக்கு வளர்ந்துவிட்டது. பம்பாயின் தாவூத்.இப்ராஹிம், கலானி முதலான மாஃபியாக்களைப் போல, இன்று வடசென்னைக்கு பாக்சர் வடிவேலு, தென்சென்னைக்கு வீரமணி, கோவைக்கு ஈஸ்வர மூர்த்தி, தருமபுரிக்கு சந்தனக் கடத்தல் வீரப்பன் என கிரிமினல் - மாஃபியாக்கள் ஆட்டிப் படைக்கிறார்கள். சீரழிவுக் கலாச்சாரத்துக்குப் பலியான வேலையில்லா இளைஞர்களும், உதிரிப் பாட்டாளிகளும் அவர்களது கிரிமினல் தொழிலுக்கான சமூக அடித்தளமாகிவிட்டார்கள். இந்தக் கிரிமினல் கும்பல்களுக்கிடையே தொழில் போட்டியின் காரணமாக மோதல் வந்துவிட்டால் அந்தப் பகுதியே சூறையாடப்பட்டு ரணகளமாகிறது. அண்மையில் சென்னை எம்.ஜி.ஆர். நகரில் அ.தி.மு.க.காரன் கொல்லப்பட்டதற்கு - கண்ணம்மா பேட்டையில் பழிவாங்கும் வெறியோடு கிளம்பிய ஒரு ரௌடிக்கும்பல் தெருவில் வருவோர் போவோரையெல்லாம் பயங்கர ஆயுதங்களுடன் கண்மூடித்தனமாக தாக்கியதில், பஞ்சம் பிழைக்க வந்த கூலித் தொழிலாளி ஒருவர் அங்கேயே மாண்டு போனார். அதிகரித்து விட்ட ரௌடிகள் - கிரிமினல்களின் அட்டகாசத்தால் மக்கள் தெருவில் நடமாடும் உரிமை கூட மறுக்கப்பட்டு பயபீதியில் தள்ளப்பட்டுள்ளனர்.

கொள்ளையர்களைக் கண்டதும் சுட உத்திரவிட்டும், முன்னாள் ராணுவத்தினரைக் கொண்டு ''ஒயர்லெஸ் ஜீப்''புகளில் ரோந்து சுற்றியும், நெடுந்தொலைவுப் பேருந்துகளில் திடீர் சோதனை நடத்தியும் கொள்ளையர்களைப் பிடிக்க அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக போலீசார் கூறும்போதே, சென்னையில் ஒரேநாளில் பல குற்றங்கள் நடந்துள்ளன. மாநிலத்தின் பல பகுதிகளில் லாரி, பேருந்துக் கொள்ளைகள் தொடர்கின்றன. அதேசமயம், கிரிமினல்களின் தாக்குதல் நடந்த பகுதிகளில் திடீரென ''ஜீப்'' பில் வந்து தெருவில் செல்வோரை அடித்துவிரட்டி பீதியூட்டுவது நெடுந்தொலைவுப் பேருந்துகளில் திடீர் சோதனை என்ற பெயரில் பயணிகளை அச்சுறுத்தி தொல்லைப் படுத்துவது, அப்பாவிமக்களைப் பிடித்துச் சென்று பொய் வழக்கு போடுவது என்பதாகப் போலீசார் தமது சூரத்தனங்களைக் காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

அடிதடி, கொலை, ஆந்திர சாராயம் கடத்தல் என சமூக விரோத கிரிமினல் தலைவனாக வளர்ந்த சென்னை - அயோத்தியா குப்பத்தைச் சேர்ந்த வீரமணி சென்னை கடற்கரைச் சாலையில் பாசிச ஜெயாவுக்குக் ''கட் - அவுட்''டுகள் வைத்து புதிய சாதனை படைத்தான். அவனது சகோதரனும் ரௌடியுமான வீரக்குமார் கொல்லப்பட்ட பிறகு அத்'தியாகி'க்கு சிலைவைத்து மந்திரி சோமசுந்தரம் திறப்புவிழா செய்துள்ளார். போலீசு-கிரிமினல்கள்- அரசியல்வாதிகள் சமூகவிரோதக் கூட்டணிக்கு சான்று கூற இதுவொன்றே போதுமானது.

வடமாநில அரசியலில் இத்தகைய கிரிமினல்களின் ஆதிக்கம் ஏற்கனவே வேரூன்றிவிட்டது. பணபலமும் குண்டர் பலமும்தான் அங்கே தேர்தல் வெற்றிக்கான முக்கிய அடித்தளமாகிவிட்டது. தமிழகத்தில் பிழைப்புவாத பொறுக்கி அரசியல் வேரூன்றியுள்ள அதேசமயம், பாசிச ஜெயாவின் ஆட்சியில் கிரிமினல் அரசியலின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. அவரே ஒரு கிரிமினல் அரசியல் நாயகி. பாசிச ராஜீவின் சாவைத் தொடர்ந்து நடந்த ரௌடித்தனத்திலும் சூறையாடலிலும் ஈடுபட்டுக் கைதான அ.தி.மு.க. குண்டர்கள் மீது எந்த வழக்குமின்றி விடுதலை செய்தார். மதுசூதனன் முதலான குண்டர்களையே மந்திரியாக்கி, சட்ட மன்றத்திலேயே எதிர்க் கட்சியினர் மீதும், தனக்கு கொத்தடிமை சேவகம் செய்யாத எம்.எல்.ஏ.க்கள் மீதும் அதிகாரிகள் மீதும் குண்டர்களை ஏவித் தாக்கி குரூர இன்பம் காண்பவர்தான் அவர். அ.தி.மு.க. என்பதே பிழைப்பு வாதிகள், கள்ளச்சாராய கிரிமினல்கள், ரௌடிகள், குண்டர்களைக் கொண்ட கூடாரம். இத்தகைய பாசிச குண்டர்களின் ஆட்சியில் ரௌடிகள் - கொள்ளையர்களைத் துடைத்தொழிப்பது மட்டுமல்ல; கட்டுப்படுத்தி வைக்கக்கூட முடியாது. பெருகிவரும் ரௌடிகள் - கிரிமினல்களின் அட்டூழியங்களுக்கு எதிராக சென்னை - முகப்பேர் பகுதியைச் சேர்ந்த வியாபாரிகளும் பொதுமக்களும் திடீர் சாலை மறியலில் இறங்கி போர்க்குணத்துடன் தமது எதிர்ப்பை அண்மையில் வெளிப்படுத்தியுள்ளனர். இத்தகைய தன்னெழுச்சியான போராட்டங்கள் புரட்சிகர அரசியல் தலைமையின் கீழ் அணிதிரட்டப்பட வேண்டும்.

படிப்பகம்

# காங் - ஜெயா - பா.ஜ.க பாசிஸ்டுகளுக்குள் ஜோடி மாற்றம்

"இவங்க நாளைக்கு சேர்ந்து கும்புடு போட்டு ஓட்டுக் கேட்டு வரட்டும், அப்ப வச்சுக்கிறேன்'' என்று சாதாரண மக்களே வெறுப்பை உமிழும் அளவிற்கு அ.தி.மு.க., காங். கட்சிகளுக்கிடையே அறிக்கைப் போர் நடந்து கொண்டிருக்கிறது. நாயே, பன்றியே என்று பரஸ்பரம் நேரடியாக திட்டாத குறைதான்! ''அ.தி.மு.க.விற்கு வந்துள்ளது சித்த பிரமை; குணப்படுத்தவே முடியாது'', ''நேற்று முளைத்த காளான் அ.தி.மு.க'', ''அ.தி.மு.க. தலைவர்களிடம் அரசியல் முதிர்ச்சி இல்லை'', ''மந்திரி கண்ணப்பன் ஒரு மக்கு'', இப்படி காங்கிரசு தரப்பினர் பாய்ந்தனர். பதிலுக்கு அ.தி.மு.க. தரப்பிலோ ''காங்கிரசில் எல்லாம் வெத்து வேட்டு அரசியல்வாதிகள்'', ''பிச்சைக்காரர்கள்'', ''காங். தயவு தேவையில்லை; தி.மு.க.வுடன் கூட்டு வைத்தாலும் கவலை யில்லை'', ''வாழப்பாடி வாழாவெட்டி'' இவ்வாறு குரைத்தார்கள்.

பதவியை ராஜினாமா செய்துவிட்டு, ஆட்சியைக் கலைத்துவிட்டு எங்களுடன் தேர்தலில் போட்டியிட தயாரா என இரு தரப்பினரும் தோள்தட்டி சவால் விட்டார்கள். திருச்சியிலோ இந்த சவால், அடைக்கலராஜ் கும்பலுக்கும் கு.ப.கிருஷ்ணன் கும்பலுக்குமிடையே சுவரொட்டி யுத்தமாக பரிணமித்து பிப்ரவரி முதல்வாரத்தில் நகரை கலக்கியது.

யார் அரிசி விலையை ஏற்றியது என்று புரியாமல் பாமர மக்கள் குழம்பும் வண்ணம் அ.தி.மு.க.-வும், காங்கிரசும் முறையே மத்திய, மாநில அரசுகளை குற்றம்சாட்டி அறிக்கைவிட்டார்கள். அ.தி.மு.க.வோ ரயில் மறியல், கப்பல் மறியல், விமான மறியல் போராட்டமெல்லாம் நடத்தியது. காங்கிரசும் பிப். 4-ந் தேதி இரா. அன்பரசு தலைமையில் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

விழுப்புரம் - காந்தி சிலை தகர்ப்பைக் காட்டி சட்டமன்றத்தில் ''கலகம்'' செய்த காங்கிரசுக்காரர்கள் சபைக் காவலர்களால் தூக்கியெறியப்பட்டார்கள். அ.தி.மு.க. விற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரசு எம்.எல்.ஏக்கள் அனைவரும் சட்டமன்றத்தினைப் புறக்கணித்தனர். பாராளுமன்றத்திலோ அ.தி.மு.க. எம்.பிக்கள் இந்தி திணிப்பை எதிர்த்து வெளிநடப்பு செய்தார்கள்.

இவ்வளவு நடந்தாலும் இடையிடையே நரசிம்மராவ்வும் ஜெயலலிதாவும் சந்தித்துக் கொள்கிறார்கள்; விருந்து சாப்பிடுகிறார்கள்; விழா நடத்துகிறார்கள் கூட்டணி நீடிக்கும் என்று அவ்வப்போது அறிக்கை விடுகிறார் ராவ். பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிராக - காங்கிரசுக்கு ஆதரவாக ஓட்டளிக்கிறார்கள் அ.தி.மு.க. எம்.பிக்கள். மத்திய பட்ஜெட்டை வரவேற்று ஜெயலலிதா அறிக்கை விடுகிறார்.

ஒருபுறம் அடிதடி; மறுபுறம் கை குலுக்கல். என்ன நாடகம் இது? என்னதான் அரசியல் நடத்துகிறார்கள்? இதன் பின்னணி என்ன? இதுவன்றி பா.ஜ.க.-வுடன் அ.தி.மு.க. கூட்டணி ஏற்படும் என்பது போன்ற செய்திகள் உண்மைதானா? - இப்படி ஏராளமான கேள்விகளால் குழப்பங்களால் தமிழக ''டீ'' கடைகளில் - பெட்டி கடைகளில் அரசியல் விவாதங்கள் சூடாக நடக்கின்றன.

**பாசிச 'ஜெ'யோடு யாரும் ஒட்டி உறவாட முடியாது!**

ஜெயலலிதா தன்னகங்காரம் - ஆணவம் பிடித்த ஒரு சர்வாதிகாரி - ஒரு பாசிஸ்டு. என்றைக்குமே பாசிஸ்டுகள் பிறரை தங்களுக்கு சமமாக பாவித்ததில்லை. பிறர் தங்களுக்கு அடிமைகளாக - சேவகர்களாக இருப்பதையே விரும்புபவர்கள். இதனால்தான் ஜெயலலிதாவுடன் யாரும் வெகுநாளைக்கு ஒட்டி உறவாட முடியவில்லை. பதவிக்காக - பணத்திற்காக சூடு, சொரணை, தன்மானம், சுய மரியாதையை எல்லாம் விற்றவர்களாலேயே ஜெயலலிதாவுடன் இருக்க முடியவில்லை. சு.சாமி, ராஜாராம், சந்திரலேகா, எதிர்ப்பிலிருந்து சங்கராச்சாரி, சசிகலா - நடராஜன் ஊடல் வரை இதற்கு உதாரணங்கள். இந்த அணிவரிசையின் சிறந்த இலக்கணமாக சேர்ந்திருப்பவர்தான் வாழப்பாடி.

பாசிஸ்டுகளால் ஒரு நிமிடம் கூட நிம்மதியாக இருக்க முடியாது. ஜெயலலிதாவும் அப்படித்தான். விடுதலைப்புலிகளை ஒடுக்கியதால் பழிவாங்கப்படுவோமோ என்ற அச்சத்தோடு, கூட இருந்தவர்கள் எல்லாம் குழிபறிக்கத் தொடங்கிவிட்டதால், எந்நேரத்திலும் வீதிக்கு வீசப்படலாம் என்ற நிம்மதியின்மையும் சேர்ந்து ஜெயலலிதாவை ஆட்டுவிக்கிறது. முன்பு, சசிகலா - நடராஜன் தகராறில் பைத்தியம் பிடித்தது போல் உழன்றவரும் கவர்னரிடம் ராஜினாமா மனு கொடுத்தவரும்தானே ஜெயலலிதா?!

> **அ.தி.மு.க., பா.ஜ.க. உறவு தமிழக மக்களுக்கு விடப்பட்டிருக்கும் சவால்! விசுவரூபம் எடுக்கும் பார்ப்பன இந்துமத ஆதிக்கம் - அடக்குமுறை - சுரண்டலுக்கான அபாயக் கொடி!**

சு.சாமி குறித்த, ஜனவரி 31-ல் எங்கே ஆட்சி கலைக்கப் பட்டுவிடுமோ என்ற பீதியில் முன்னேற்பாடாக அந்த ஒருவார காலம் ஹைதராபாத்திற்கு சொந்த பயணம் என ஓடி ஒளிந்து, பின் வந்தார். சாமி கொடுத்த தொந்தரவிற்கும் ஆடிய ஆட்டத்திற்கும் ஒருவாறாக பதிலடி கொடுத்து முடக்கிய ஜெயலலிதா, நிம்மதி பெருமூச்சு விடுவதற்குள் காங்கிரசு - வாழப்பாடி கோஷ்டியின் எதிர்ப்பு பூதம் கிளம்பிவிட்டது. இது பாசிஸ்டுகளுக்கே உரிய 'தலைவிதி'; மாற்ற முடியாது! அவர்களது நிழல்களே அவர்களை அச்சுறுத்தும்.

நரசிம்மராவ் நரித்தனமாக, தன்னை அவமானப்படுத்தும் ஜெயலலிதாவிற்கு மூப்பனார் கோஷ்டி மூலமும் சு.சாமி மூலமும் நெருக்கடி கொடுத்தார். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஜெயலலிதாவோ தமது 'கொத்தடிமைகள்' மூலம் காங்கிரசுக்கு எதிராக அறிக்கை விட்டும் தரக்குறைவாகப் பேசியும் தாக்கினார். தமது காலடியில் வாழப்பாடி வீழ்ந்து கிடந்தாலும் தம்மை எதிர்க்கும் மூப்பனார் கோஷ்டி மீது நடவடிக்கை எடுத்து அடக்க முடியாத கையாலாகாதனத்தைக் கண்டு ஆத்திரமுற்ற ஜெயலலிதா வாழப்பாடியை அவமானப்படுத்தி ஓரங்கட்டினார். வாழப்பாடி பதவியில் நீடிப்பதற்கு தான்தான் காரணம் எனவும் கூட்டணி பற்றி மத்திய தலைமையுடன் மட்டுமே பேசுவோம் என்றெல்லாம் வாழப்பாடியை இழிவுபடுத்தி மந்திரிகளை அறிக்கைவிட வைத்தார். இதன் உச்சகட்டமாக டிசம்பரில் நடந்த அ.தி.மு.க. செயற்குழு - பொதுக்குழு கூட்டத்தில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்களைக் கொண்டு காங்கிரசை 'மானவாரியாக' திட்டவிட்டு ரசித்தார்.

என்னுடன் கூட்டணி சேர்ந்தால், அக்கூட்டணி கட்சிக்கும் நான்தான் தலைவி என்பது ஜெயலலிதாவின் அகராதி! முதலில் தன்னை எதிர்த்த சுப்புவை கட்சியை விட்டு நீக்கச் சொன்னார். தற்போது வாழப்பாடி தலைமையை மாற்ற வேண்டும் என்கிறார். நரசிம்மராவ் தலைமையே மாற வேண்டும் என்று கோருகிறார்கள் 'ஜெ'யின் துதிபாடிகள். நரசிம்மராவ், ''உறவு நீடிக்கும் நீடிக்கும்'' என்று கூறினாலும், மூப்பனார் - வாழப்பாடி கோஷ்டிகளின் எதிர்ப்பும் சாமியின் வழக்கு அச்சுறுத்தலும் குறையாததைக் கண்டு மனம் குழம்பி ''முதுகில் குத்துகிறார்கள்'' என ஒப்பாரி வைக்கிறார் ஜெயலலிதா.

மத்திய அமைச்சர்கள் தமிழகம் வந்தால் கண்டு கொள்ளாமல் இருந்தும், சந்திக்க வாய்ப்பு கேட்பவர்களுக்கு மறுத்தும் அலட்சியப்படுத்தி வெறுப்பேற்றினார் ஜெயலலிதா. ராஜீவ் சிலை திறப்பு விழாவிற்கு முதலில் வர மறுத்து கடைசி நேரத்தி



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

லேயே வேறு வழியில்லாமல் கலந்து கொள்ள இசைந்தார். கூட்டணியில் ஏற் பட்ட பிளவுக்கு சமரசம் பேச வந்த காங்கி சு பிரதிநிதிகள் வோரா, தங்கபாலுவை சந் திக்க ஜெயலலிதா மறுத்ததாக பின்னர் வோராவும் தங்கபாலுவுமே அறிக்கை விட்டு தமது ஆத்திரத்தைக் கொட்டினார் கள்.

சட்டசபையில் காங்கிரசை இருகட் சியா என எள்ளி நகையாடி வெறுப்பேற்றி னார், எதிர்கட்சி தலைவர் என்றும் பாராமல் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியத்தையும் சட்டச பையிலிருந்து வெளியேற்றியது காங்கிர சுக்கு பெருத்த தலைகுனிவாகியது. நேரு சிலை திறப்பு விழாவிற்கு வரமுடியாத வண்ணம் தம் கட்சிக்காரர்களுக்கு ஜெயல லிதா தொல்லை கொடுத்ததாகவும் காங்கி சு குற்றம் சாட்டுகிறது. மேற்கண்ட நடவ டிக்கைகள் எல்லாம் ஜெயலலிதாவின் பாசிச குணாம்சங்களை வெளிப்படுத்து கின்றன.

### வாழப்பாடிக்கு சொரணை வந்த கதை!

ஜெயலலிதாவை எதிர்க்கத் தொடங்கி யதும் வாழப்பாடிக்கு சொரணை வந்துவிட் டதாக காங்கிரசுக்காரர்கள் குதிக்கிறார்கள். ஜெயலலிதாவின் 'வாழ்த்துப்பாடி' என்று வாழப்பாடியை வர்ணித்த மூப்பனார் கோஷ்டியினர் தற்போது வாழ்த்திப்பாடி வரவேற்று குதூகலமடைகிறார்கள். வாழப் பாடிக்கு சொரணை வந்த கதையே வேடிக் கைதான்!

''வாழப்பாடி தலைமையை மாற்று'', ''வாழப்பாடி பத வியில் நீடித்ததே 'ஜெ'யின் கருணை யில்தான்'' என்றெல் லாம் அ.தி.மு.க.வி னர் அறிக்கைவிட்டு இழிவுபடுத்திக் கொண்டிருந்த நேரத் திலும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வங்கா ளத்து வாங்கினார் வாழப்பாடி. சட்டம் ஒழுங்கு கெட்டுவிட் டதாக குற்றம் சாட்டி 'ஜெ' ஆட்சியில் நீடிப்பதற்கு அருக தையில்லை என்று மூப்பனார் கோஷ்டியி னர் கோரியபோதும், .சாமியின் புகாரை தேர்தல் கமிஷனுக்கு அனுப்பாத கவர்னர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று ஜெயந்தி நடராஜன் முதலானோர் அறிக்கை விட்டபோதும் எதிர்ப்பு தெரிவித்து 'ஜெ'க்கு வக்காலத்து வாங்கிப் பேசினார் வாழப்பாடி. அப்படியாவது 'ஜெ'யின் 'அருள்' பழையபடி கிடைக்காதா என வாழப்பாடி ஏங்கினார் என்பதே உண்மை. ஆனால் ஜெயலலிதா, சிறிதும் சீண்டாத தோடு மேலும் மேலும் அவமானப்படுத் தவே (சந்திக்க பலமுறை மனுபோட்டும் மறுத்ததைக் குறிப்பிடலாம்) பிறகே வாழப் பாடிக்கு புத்தி வந்தது எனலாம்.

இதற்கும்கூட வேறுசில காரணங்கள் உண்டு. வாழப்பாடிக்கு ஜெயலலிதாவால் அவமானம் மட்டுமல்ல; இன்னொருபுறம் மூப்பனார் கோஷ்டியின் தாக்குதலும், கொடுக்கும் நெருக்கடியும் கட்சியில் வாழப் பாடியை தனிமைப்படுத்தியது. மேலும், ஊழல், ஆடம்பர, வக்கிர விளம்பரங்கள், அடக்குமுறைகள், விலையேற்றம் போன்ற வற்றால் மக்களின் நம்பிக்கையிழந்த 'ஜெ' ஆட்சிக்கு ''ஜால்ரா'' போட்டுக்கொண்டே இருந்தால் காங்கிரசும் மக்களின் வெறுப் பைதான் சம்பாதிக்கும். எனவே 'ஜெ'யின் அக்கிரமங்களை எதிர்த்தால்தான் ஏதோ காங்கிரசுக்கு இருக்கும் அற்ப வாழ்வையா வது தக்க வைத்துக் கொள்ளமுடியும் என்ற நிலை.

இதை முன்னமே உணர்ந்து மூப்ப னார் கோஷ்டி 'ஜெ'யை எதிர்க்கத் தொடங் கியதும் காங்கிரசின் அணிகள் எல்லாம் மூப்பனார் பக்கமே நின்றார்கள். கட்சியில் வாழப்பாடியின் தி.மு.க. எதிர்ப்பு கோஷம் எடுபடவில்லை. 'ஜெ' எதிர்ப்புணர்வே மேலோங்கியிருந்தது. காங்கிரசு உட்கட்சி தேர்தல் நாடகத்திற்காக உறுப்பினர்களை புதுப்பித்த போதும் மூப்பனார் கையே ஓங் கியிருந்தது. கட்சியிலேயே வாழப்பாடி யின் அஸ்திவாரம் ஆட்டங்கண்டது. இனி யும் ஜெயலலிதாவின் முந்தானையில் தலை யைக் கொடுத்துக் கொண்டிருந்தால் தலைக்கே ஆபத்து வந்துவிடும் என்ற நிலையில்தான் வாழப்பாடி, எதிர்ப்பணி யில் சேர்ந்தார். மற்றபடி வாழப்பாடிக்கு சொரணை, 'தன்மானம்' எல்லாம் வந்ததாக நம்புவதற்கு அடிப்படையே இல்லை.

### 'ஜெ'யின் பீதியும் 'ராவ்'வின் நரித்தனமும்

வாழப்பாடியையும் எதிர்ப்பணியில் தள்ளியதற்கும் காங்கிரசு கோஷ்டிகளை இணைத்ததற்கும் ஜெயலலிதாவிற்குத்தான் காங்கிரசுக்காரர்கள் நன்றி சொல்ல வேண் டும்! சட்டசபையில் வாழப்பாடி கோஷ்டியி னர் முதல்நாள் வெளிநடப்பு செய்தபோது மூப்பனார் கோஷ்டியினர் உள்ளே இருந் ததை ஜெயலலிதா நக்கலாக ''காங்கிரசு இரண்டு கட்சியா?'' என்று குத்திக்காட் டவே அன்று மாலையே இரு கோஷ்டியின ரும் சத்தியமூர்த்தி பவனில் சேர்ந்து கூட்டம் நடத்தி உடன்பாடானார்கள். மறுநாள் - பிப். 10-ந் தேதி கவர்னர் உரையை இரு கோஷ்டியினரும் சேர்ந்து புறக்கணித்தனர். பிறகு மூப்பனாரும் வாழப்பாடியுமே சந் தித்து சமரசமானதும் இனி இணைந்து 'ஜெ'-வை எதிர்ப்பதாக முடிவெடுத்ததும் அ.தி.மு.க. - காங். கூட்டணி வேண்டாம் என, சமரசம் பேசவந்த ராவ்வின் பிரதிநிதி களான வோரா, தங்கபாலுவை முற்றுகை யிட்டு முழக்கமெழுப்பியதும் குறிப்பிடத் தக்கது.

இரு கோஷ்டிகள் இணைந்ததால் காங் கிரசு யானை பலம் பெற்று விட்டதாகவும் இனி கர்ஜிக்கப் போவதாகவும் ஜெயலலி தாவால் தாக்கு பிடிக்க முடியாது என்றும் பூரிப்படைகிறார்கள், காங்கிரசுக்காரர்கள். ஆனால் முன்னமே குறிப்பிட்டபடி 'ஜெ'வை எதிர்த்தால்தான் காங்கிரசு தமிழ கத்தில் தனது இருப்பை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்ற பின்னணியிலேயே மூப்பனாரும், வாழப்பாடியும் தற்காலிக மாக சமரசமாகியுள்ளனர். மற்றபடி கோஷ்டி பூசல் நீறு பூத்த நெருப்புதான்! அதே சமயம், காங்கிரசு கோஷ்டி பூசல்க ளால் ஜெயலலிதா குளிர்காய்ந்தார் என்ப தும் தற்போதைய இணைவைக்கண்டு பீதியடைந்துள்ளார் என்பதும் உண் மையே.

''அ.தி.மு.க. கூட்டணி நடைமு றையில் முறிந்துவிட் டது; நரசிம்மராவ் அறிவிக்க வேண்டிய துதான் பாக்கி'' என கூறிவிட்டு கூட்ட ணிக்கு எதிராக கொடி பிடிப்பதோடு நில்லாமல் தி.மு.க., பா.ம.க-வுடன் கூட்டு வைத்துக் கொள்வதற்கான முயற்சியிலும் இறங் கிவிட்டது. தமிழக காங். தலைமை. ஆனால் வோரா, தங் கபாலு, ஜனார்த்தன ரெட்டி என மாறிமாறி கூட்டணி நீடிப்பதற் காக சமாதான தூது அனுப்புகிறார் ராவ். ஏனெனில் மத்தியில் அ.தி.மு.க.வின் 11 எம்.பி.க்கள் ஆதரவு இல்லாமல்கூட ஆட்சி நீடிக்கும் என்றாலும் காங்கிரசு கோஷ்டி பூசல்களாலும் அஜித்சிங் கோஷ்டி ஜார் கண்ட் முக்தி மோர்ச்சா, முஸ்லீம்.லிக் முத லானோரின் ஆதரவும் கேள்விக்குறி யோடே நீடிப்பதாலும் அ.தி.மு.க.வின் 11 எம்.பி.க்களை அனாவசியமாக இழக்க ராவ் விரும்பவில்லை.



விவாகரத்தான ஜோடி; தலைமுறை இடைவெளியின் வெறுப்பு

படிப்பகம்

www.padippakam.com


மேலும் தமிழகத்தில் ஜெயலலிதாவின் செல்வாக்கு குறைந்துவிட்டதா இல்லையா என்ற தமது குழப்பத்திலும்; தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தாலும் ஆட்சியைப் பிடிக்க முடியுமா என்ற கேள்வியிலும்; அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணி உருவாகினால் பா.ஜ.க. பலப்படும் என்ற அச்சம் காரணமாகவும் காங்கிரசில் உள்ள மூத்த தலைவர்கள் அ.தி.மு.க. கூட்டணி முறிவதை விரும்பவில்லை. எனினும் இவர்களின் விருப்பமும் ராவ்வின் சமரச முயற்சியும் கூட தற்காலிகமானதாக இருப்பதால் அரசியலில் மாற்றம் எதுவும் நடக்கலாம். மேலும் கூட்டணி நீடிக்க சமரச முயற்சி செய்தாலும் ராவ்வின் உண்மையான நோக்கம்: நெருக்கடி தாளாமல் ஜெயலலிதா தானாகவே ஓட வேண்டும் என்பதாக இருப்பதால் தமிழக காங்கிரசின் எதிர்ப்பை கட்டுப்படுத்த முடியாதவர் போல் காட்டி மறைமுகமாக ஆதரித்தும் வருகிறார் நரசிம்மராவ்!

### அ.தி.மு.க. - பா.ஜ.க. சகோதரக் கூட்டு!

இந்நிலையில். அ.தி.மு.க. பா.ஜ.க. உறவு. கூட்டணி பற்றிய செய்திகள் பத்திரிக்கைகளில் அடிபட்ட வண்ணம் இருக்கின்றன. பார்ப்பன தினமலர், தினமணி, இந்தியின் எக்ஸ்பிரஸ் முதலான பத்திரிக்கைகளோ ஒருபடி மேலேபோய் கருத்து கணிப்பு நாடகம் நடத்தி தமிழக மக்கள் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியையே விரும்புவதாக பிரமையை ஏற்படுத்தி வருகின்றன. உண்மையில் தற்போது நிலவும் அ.தி.மு.க., பா.ஜ.க. ரகசிய கூட்டணியை மூடிமறைத்து ஏய்த்து வருகின்றன.

ஜெயலலிதா கடந்த நவம்பர் மாதத்தில் டில்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சில் கூட்டத்தில் பா.ஜ.க.வின் கரசேவைக்கு ஆதரவு தெரிவித்துப் பேசி தனது கள்ளக் கூட்டையும் வெளிப்படுத்திக் காட்டினர். இதற்குப் பிறகே காங்கிரசு அ.தி.மு.க. கூட்டணியில் பிளவு ஏற்பட்டது. கரசேவைக்கு ஜெயலலிதா ஆள் அனுப்பிய திலிருந்து, தடைசெய்யப் பட்ட இந்துவெறி அமைப்பினருக்கு தமிழகத்தில் புகலிடமளித்தது. அவர்கள் பகிரங்கமாக பொதுக்கூட்டம், மாநாடு, ஊர்வலம் என உலாவர அனுமதித்துக் கொண்டிருப்பது வரை தமது இந்து வெறி ஆதரவு நடவடிக்கைகள் மூலம் காங்கிரசுடன் உள்ள முரண்பாட்டை கூர்மைப்படுத்தினார்; பா.ஜ.க.வுடனான உறவை வலுப்படுத்தினார். டில்லியில் நடந்த பா.ஜ.க.வின் பேரணியை தடுக்க காங்கிரசு, நடவடிக்கையிலிறங்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில் ஜெயலலிதாவோ தமிழகத்தில் கோவையில் அக்கும்பலின் ''இந்து வெறியுணர்வு மாநாட்டிற்கு'' அனுமதியளித்து உதவியும் புரிந்தார். இதற்கு காங்கிரசார் தெரிவித்த கண்டனத்தை அலட்சியப்படுத்தி அவமானப்படுத்தினார்.

பாபர் மசூதியை இடித்த குரங்குப்படைத் தலைவன் அசோக் சிங்கால் ஜெயலலிதா கொடுக்கும் தைரியத்தால்தான் சுதந்திரமாக வந்து சென்னையில் பொதுக்கூட்டம்



நிச்சயிக்கப்பட்ட ஜோடி; ஒரே இன நெருக்கத்தின் மகிழ்ச்சி

நடத்தி இந்துமத வெறியை கக்கிவிட்டு செல்ல முடிகிறது. கோவையில் 'இந்து வெறியுணர்வு மாநாட்டை' வெற்றிகரமாக நடத்திமுடித்த தைரியத்தில் மார்ச் 21-ந் தேதி அத்வானி தலைமையில் பா.ஜ.க.-வின் ஊர்வலம் ஒன்றும் சென்னையில் நடக்கும் என அறிவித்துள்ளார்கள்.

சனாதன சமஸ்கிருதத்திற்குப் பல்கலைக்கழகம், இந்து கோயில்களுக்கு தனி வாரியம் - தனிச் சலுகை, பூசாரிகளுக்கும் சங்கராச்சாரிகளுக்கும் சலுகைகள் - சன்மானங்கள். மகாமகம் போன்ற இந்துமத விழாக்கள் நடத்துதல் முதலானவற்றின் மூலம் ஜெயலலிதா சனாதன - பார்ப்பன இந்து மத ஆட்சியை மீட்டெடுத்து வருகிறார். ஏன் அண்மையில்கூட சிறுபான்மை மதத்தினருக்கான கல்விச் சலுகையை ரத்து செய்வதென சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி தனது இந்து மதவெறியை அடையாளங்காட்டினார். (சிறுபான்மை மதச் சலுகையை ரத்து செய்வதற்கு எதிராக எதிர்ப்புகள் கிளம்பியதும் அவர்களுடன் பேரம் நடத்தி பிறகு திரும்பப்பெற்றுக் கொண்டார்.) ஜெயலலிதாவின் பார்ப்பனீய - இந்துமத விசுவாச நடவடிக்கைகளைக் கண்டு தமது தமிழகத்தின் பிரதிநிதியாக தேர்ந்தெடுத்தார்கள், ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள். ஜெயலலிதாவின் ஊழல், சுயவிளம்பரம் - ஆடம்பரங்களை மட்டுமே தாம் ஏற்றுக் கொள்வதில்லை (கவனிக்க; எதிர்க்கவில்லை) என்றும் மற்ற அனைத்திலும் ஜெயலலிதாவுடன் உடன்படுவதாக பா.ஜ.க. கூறுகிறது. அ.தி.மு.க.வின் இடஒதுக்கீடு தீர்மானம், ஹிந்தி எதிர்ப்பு தீர்மானம் போன்றவை பா.ஜ.க.விற்கு எதிரானதாக இருந்தாலும் அவை தமிழக மக்களை ஏய்ப்பதற்காகத்தான் என்று அவர்களுக்குத் தெரியும்! இதை அவர்கள் ஒரு பிரச்சினையாகவே கருதுவதில்லை. எப்படியோ ஜெயலலிதா மூலம் தமிழகத்தில் காலூன்றுவதுதான் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் திட்டம்.

மத்தியில் காங்கிரசை தனது 11 எம்.பிக்களை காட்டியே மிரட்டி காரியம் சாதித்து வந்த ஜெயா, இனியும் அது பலிக்காமல் போய்விடும் என்பதை உணர்ந்து பா.ஜ.க.வுடனான உறவை பலப்படுத்த முனைந்தார். மத்தியில் அடுத்து ஆட்சியைப் பிடிப்பதற்கான 'பிரகாசம்' பா.ஜ.க.-விடம் தெரிந்ததாலும் தமது பார்ப்பன - இந்துமத உணர்வோடு ஒத்துபோகக்கூடிய அகில இந்திய பிரதிநிதியாக இருப்பதாலும் ஒருவேளை ஆட்சிக் கவிழ்க்கப்பட்டாலும் பாராளுமன்றத்தில் 'பலத்தை'க் காட்ட உதவுவார்கள் என்பதாலும் ஜெயலலிதா பா.ஜ.க.வுடன் ஒட்டியுள்ளார். அத்தோடு ஆட்சி கலைந்தால், பெண் என்பதாலேயே தனக்கு இப்படி ஒரு அநீதி இழைக்கப்பட்டதாக ஒப்பாரி வைத்தே மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையும் ஜெயாவுக்கு உண்டு. மேலும் தம் ஆட்சி மீதான மக்களின் அதிருப்தியை மாற்றுவதற்காக கடந்த சில வாரங்களாக 'பார்' கடைகள் மூடுவதற்கான அறிவிப்பு (அறிவிப்பு மட்டும்தான்!), அரிசி விலை உயர்வு போராட்டம், ஹிந்தி எதிர்ப்பு தீர்மானம் என்றெல்லாம் 'அதிரடி'வேடம் போட்டு வருகிறார்.

ஆர்.எஸ்.எஸ். -பார்ப்பனக் கும்பல் கொடுக்கும் தைரியத்தில்தான் ஜெயலலிதாவும் காங்கிரசின் உறவை முறித்துக் கொள்ள துணிந்துவிட்டார். அமைச்சர் நெடுஞ்செழியன் மூலம் பா.ஜ.க.-வுடன் அ.தி.மு.க. கூட்டுவைத்துக் கொள்வதில் தப்பில்லை என பேசி முன்னறிவித்துள்ளார். இன்று பா.ஜ.க. - அ.தி.மு.க. தலைவர்கள் பார்ப்பனப் பத்திரிக்கைகள் எல்லாம் இதையே பேசி தமிழக மக்களின் விருப்பமும் அதுவே என்ற பொய்யை திட்டமிட்டுப் பரப்பி அடித்தளம் போட்டு வருகிறார்கள். தம்மிடையே உள்ள கள்ளக்கூட்டை பகிரங்கமாக அறிவிப்பதற்கு முகாந்திரத்தையும் தருணத்தையும் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

அ.தி.மு.க., பா.ஜ.க. உறவு தமிழக மக்களுக்கு விடப்பட்டிருக்கும் சவால்! விசுவரூபம் எடுக்கும் பார்ப்பன இந்துமத ஆதிக்கம் - அடக்குமுறை - சுரண்டலுக்கான அபாயக் கொடி! இவற்றை எதிர்த்து தாக்கி முறியடிப்பதை தவிர வேறு வழியில்லை. ஆனால் இங்குள்ள ஓட்டுக் கட்சிகள் தமிழகம் 'அமைதிப் பூங்கா'; இங்கு ஒன்றும் பலிக்காது என ஜோசியம் சொல்லிக் கொண்டிருக்கின்றன. மிஞ்சிப் போனால் மத நல்லிணக்கம் - ஒற்றுமை என சங்கிலி கோர்க்கிறார்கள். தமிழகத்தை இந்துமதவெறியர்கள் 'கலவரப் பூங்கா'வாக்குவதை நாம் விரும்புகிறோமா?

● ராசு



படிப்பகம்

www.padippakam.com

# குடிக்கக் கூழில்லை கொண்டைக்குப் பூ

"உலக வங்கியின் கட்டளைப்படி தற் போதைய பட்ஜெட் தயாரிக்கப்படும் என்று திர்க் கட்சிகள் பீதியூட்டிய நேரத்தில் நிதி ந்திரி மன்மோகன் சிங் அதைப் பொய் ாக்கி விட்டார். கடந்த பத்தாண்டுகளில் ாணாத அளவுக்கு வெறும் 4,314 கோடி பாய் பற்றாக்குறையைக் கொண்டதாக ட்ஜெட்டைத் தயாரித்துள்ளார். புதிய வரி திப்புகள் ஏதுமின்றி, அனைத்து தரப்பு க்களும் பாராட்டும் வகையில் சலுகை ளை அள்ளிக் கொடுத்துள்ளார். தற்போ தய பட்ஜெட்டால், புதிய பொருளாதார ர்த்திருத்தக் கொள்கை புதுத்தெம்பும் டுக்கமும் பெற்றுவிட்டது" என்று முதலா ித்துவ பொருளாதார நிபுணர்களும், அறி ர்களும், பத்திரிகைகளும் 'ஆஹா' வென கழ்ந்து தள்ளுகின்றனர்.

கடந்த ஆண்டு பட்ஜெட் தயாரிப்புக்கு ன்னர், உலக வங்கியின் கட்டளைகளை ற்பதாக அதன் தலைவருக்குக் கடிதம் எழுதி ஒப்புதல் பெற்று, நாடாளுமன்றத்திலேயே பகிரங்கமாக அம்பலப்பட்டுப் போனவர்தான் நிதியமைச்சர் மன்மோகன் சிங். அப்பேர்ப்பட்ட நிதியமைச்சர் இப்போது உலக வங்கியின் கட்டளையை மீறி ஒரு பட்ஜெட் தயாரித்திருக்கிறார் என்றால், அதை காங்கிரஸ் முட்டாள்கூட நம்ப மாட்டான். உண்மையில் நிதியமைச்சர் தற்போது தயாரித்திருப்பது வெறுமனே பட்ஜெட்டே அல்ல. பட்ஜெட்டுக்கு முன்னரே உலக வங்கியின் கட்டளைகளை ஆட்சியாளர்கள் செயல்படுத்தத் தொடங்கிவிட்டனர். புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில், நாட்டின் சுயாதிபத்தியம், தற்காப்பு மற்றும் அரசியல் - பொருளாதார நலன்களை ஏற்கனவே ஏகாதிபத்திய வல்லரசுகளிடம் மறு அடகு வைத்து விட்டனர்.

கடந்த ஈராண்டுகளாக பட்ஜெட்டுக்கு முன்னும் பின்னுமாக, சட்டவிரோதமாக, நாடாளுமன்றத்தில் அறிவிக்காமலேயே புதிய வரிவிதிப்புகளையும், விலையேற்றத்தையும் திணிப்பதை அரசு தொடர்ந்து வழக்கமாகக் கொண்டுள்ளது. மக்களின் கோபாவேசங்களிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ள தேசவிரோத ஆட்சியாளர்கள் இந்தச் சதியை சில காலமாகப் பின்பற்றி வருகின்றனர். இதன்படி, பட்ஜெட்டுக்கு மூன்று வாரங்களுக்கு முன்பு அரிசி, கோதுமை, சர்க்கரையின் விலை திடீரென 20%க்கு உயர்த்தப்பட்டது. இதுதவிர ரேஷன் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டன. நிலக்கரியின் விலை 13% உயர்த்தப்பட்டது அதைத் தொடர்ந்து, அனைத்துப் பொருட்களின் விலையும் கிடுகிடுவென உயர்ந்தது.

இதுவும் போதாதென்று, ரயில்வே பட்ஜெட்டில் பயணிகள், சரக்குக் கட்டணங்களை அநியாயமாக உயர்த்தி 1878 கோடி ரூபாய்க்கு புதிய பொருளாதாரச் சுமையை மக்கள் மீது திணித்துள்ளது. இத்தகைய கட்டண உயர்வு, விலையேற்ற நடவடிக்கைகளின் மூலம் போதிய அளவுக்கு வருவாயைத் தேடிக் கொண்ட மத்திய அரசு, பொதுபட்ஜெட்டில் புதிய வரிவிதிப்பு ஏதுமில்லையென மாய்மாலம் செய்து, மென்மையான தோற்றம் தரும் பட்ஜெட்டாகக் காட்டி நயவஞ்சகத் தாக்குதலைத் தொடுத்துள்ளது. அதற்கேற்ப முதலாளித்துவப் பத்திரிகைகளும் இந்தப் பட்ஜெட்டைப் புகழ்ந்து பாராட்டி மக்களைப் பிரமையில் ஆழ்த்துகின்றன.

ரூபாயின் மதிப்பைக் குறைப்பது, அன்னிய மூதலீடுகளுக்கு தாராள அனுமதி, உணவு மற்றும் சேவைத்துறைகளுக்கான மானியங்களை வெட்டுவது, தனியார்மயமாக்கலை தீவிரப்படுத்துவது, அரசுத் துறையை முடக்குவது, சிறுவிவசாயிகளுக்கான கடன்களை நிறுத்துவது, விவசாயத்தையே புறக்கணிப்பது, ஏகாதிபத்தியங்களிடமிருந்து கொள்ளை விலைக்கு உணவு தானியங்களை இறக்குமதி செய்வது - முதலானவை உலக வங்கி விதித்துள்ள கடுமையான நிபந்தனைகள்.

இந்நிபந்தனைகளை விசுவாசமாக நிறைவேற்றிவரும் ஆட்சியாளர்கள் அதன் தொடர்ச்சியாகவே தற்போதைய பட்ஜெட்டையும் தயாரித்துள்ளனர். இதன்படி, அந்நிய ஏகபோக முதலாளிகளுக்கு இந்தியச் சந்தையைத் திறந்துவிட்டு 4,522 கோடி ரூபாய்க்கு சுங்கவரியும், தீர்வையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதுதவிர 300 கோடி ரூபாய்க்கு நேரடி வரியிலும் சலுகை தரப்பட்டுள்ளது. ஆலைகளை நவீனப்படுத்தவும், ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்து கொள்ளவும் வசதிகள், பின் தங்கிய மாநிலங்களில் தொழில் தொடங்குவோருக்கு

ட்ஜெட் பிரதிகளின் மூட்டையை 'மெட்டல் டிடெக்டர்' மூலம் சோதிக்கும் பாது ாப்பு அதிகாரிகள்; பீதியின் உச்சக்கட்டம்



படிப்பகம்

www.padippakam.com



மாயாஜாலப் பெட்டி? பட்ஜெட்டுடன் அமெரிக்க கைக்கூலி மன்மோகன் சிங்

ஐந்தாண்டுகளுக்கு அனைத்து வரிகளும் ரத்து என கணக்கற்ற சலுகைகளை ஏகாதிபத்திய மற்றும் தரகு முதலாளிகளுக்கு வாரிக் கொடுத்துள்ளது. இதுதவிர, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் தமது கருப்புப் பணத்தை பினாமிகள் மூலம் முதலீடு செய்யவும், ரகசிய உலகப் பேர்வழிகள் தமது கள்ளப் பணத்தைக் கடத்திச் செல்லவும் உதவும்வகையில் அந்நிய நாணயத்துக்கு 100 சதவீதத்துக்கு நாணயமாற்று செய்து கொள்ளவும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. இதேபோல, 100% ஏற்றுமதி அடிப்படையிலான சுதந்திர வர்த்தக வளையங்களுக்கு வரி விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மூலம் உலக வங்கியின் நிபந்தனைப்படி, அன்னிய மூலதனம் வெள்ளமெனப் பாயவும், உள்நாட்டுத் தேசியத் தொழில்களுக்கு வேட்டுவைக்கவும் ஆட்சியாளர்கள் ஏற்பாடுகள் செய்துள்ளனர். சுங்கத் தீர்வைக் குறைப்பின் விளைவாக, ஆலைகளை நவீனப்படுத்துவது என்ற பெயரில் மேலும் ஏகாதிபத்திய இயந்திர சாதனங்கள் இறக்குமதியாகும். ஏற்கனவே ஆட்குறைப்பு செய்துவரும் நிறுவனங்கள், நவீன இயந்திரங்களின் பெருக்கத்தால் மேலும் பல லட்சக்கணக்கான தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடிக்கவே செய்யும். மேலும், இத்தகைய நவீன இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி செய்யும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களுடன் போட்டியிட முடியாமல் தேசிய, சிறு தொழில் நிறுவனங்கள் மூடு விழா நடத்த வேண்டிய நிலைமை ஏற்படும்.

> நடுத்தர வர்க்கத்தினரிடம் எஞ்சியுள்ள அற்ப சேமிப்பையும் பறித்துக் கொண்டு, தரகு முதலாளிகளின் சந்தை விரிவடைய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அன்னிய நுகர்பொருள் மோகம், ஐந்து நட்சத்திரக் கலாச்சாரம், ஏகாதிபத்திய சீரழிவு எனும் திசையில் நாட்டையும் மக்களையும் தள்ளுவதே தேசவிரோத ஆட்சியாளர்களின் நோக்கமாக உள்ளது.

இதேபோல அரசுத்துறை நிறுவனங்களை 1995-க்குள் மூடச் சொல்லும் உலக வங்கியின் உத்திரவுப்படி, நலிவடைந்த ஆலைகளை மேம்படுத்த தற்போதைய பட்ஜெட்டில் ஒரு பைசா கூட ஒதுக்கப்படவில்லை. இறக்குமதி தீர்வைக் குறைப்பைச் சாதகமாக்கிக் கொண்டு, நலிவடைந்த ஆலைகள் நவீன இயந்திரங்களை இறக்குமதி செய்து முன்னேற வேண்டும் என்கிறார் நிதியமைச்சர். ஏற்கனவே நூற்றுக் கணக்கான அரசுத்துறை நிறுவனங்கள், போதிய நிதி ஆதாரமோ, மூலதனமோ இல்லாமல் மூடுவிழாவை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும்போது, இப்படி வக்கிரமாக வெறுப்பை உமிழ்கிறது அரசு. போதாக்குறைக்கு, பெருகிவரும் வேலையின்மையைப் போக்க எந்தவொரு திட்டமும் இந்த பட்ஜெட்டில் இல்லை. இவை அனைத்தும் சேர்ந்து வரப்போகும் ஆண்டுகளில் வேலையில்லாதோர் பட்டாளத்தை கோடிக் கணக்கில் பெருக்கவே செய்யும்.

கிராமப்புறங்களையும் விவசாயத்தையும் அறவே புறக்கணித்துவிட்டு உணவு தானியங்களுக்காக அமெரிக்காவிடம் கையேந்த வேண்டும் என்பது உலக வங்கியின் நிபந்தனை. அதன்படியே கடந்த ஈராண்டுகளாக விவசாயத்துக்கென புதிய ஒதுக்கீடுகள் எதுவும் செய்யாமல், கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களைப் புறக்கணித்து வந்த காங்கிரசுத் துரோகிகள், பெருகிவரும் விவசாயப் போராட்டங்களைத் தணிக்க, சில பஞ்சுமிட்டாய் சலுகைகளைக் காட்டி தற்போதைய பட்ஜெட்டில் ஏய்த்துள்ளனர். விவசாயத்துக்கான ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளதாகக் கூறுவது அதைவிட பெரிய மோசடியாகும். 1991-92 பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 3.8% அளவுக்குத்தான் தற்போதைய பட்ஜெட்டிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1992-93ல் திருத்தப்பட்ட பட்ஜெட்டில் அளவைவிட தற்போதைய பட்ஜெட்டில் 4.2% அளவுக்கு ஒதுக்கீடு குறைந்துள்ளது. மேலும், கடந்த ஆண்டில் விவசாய அமைச்சகம் அறிவித்த 500 கோடிரூபாயக்கான விவசாய மேம்பாட்டுத் திட்டம் தற்போதைய பட்ஜெட்டில் கைகழுவப் பட்டுள்ளது. இதுதவிர, உலக வங்கியின் உத்திரவுப்படி கடந்த ஆண்டில் உரத்திற்கான மானியம் 340 கோடி ரூபாய்க்கு வெட்டப்பட்டதால் ஏற்பட்ட விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த எந்தவொரு நடவடிக்கையும் தற்போதைய பட்ஜெட்டில் அறிவிக்கப்படவில்லை.

இந்தியாவின் மொத்த விவசாய நிலப்பரப்பில் 75% நிலப்பகுதி போதிய நீர்ப்பாசன வசதியற்ற பின்தங்கிய பகுதியாகும். அதை மேம்படுத்தும் முயற்சிகள், திட்டங்கள் ஏதும் இல்லாமல் எஞ்சிய 25% பாசன வசதி கொண்ட பகுதிகளுக்கு முன்னுரிமை தரும் வகையிலேயே தற்போதைய பட்ஜெட்டும் அமைந்துள்ளது. மேலும் இப்பகுதிகளில் தொழில்துறையைப் போல, விவசாயத்திலும் 100% ஏற்றுமதிக்காக பயிரிடு



படிப்பகம்

www.padippakam.com

வோருக்கு வங்கிக் கடனும் சலுகையும் தரப்படும் என்று நிதியமைச்சர் அறிவித்துள்ளார். சுருக்கமாகச் சொன்னால், ஏகாதிபத்திய நலன்களுக்கு ஏற்ற வகையில் விவசாயத்தை மாற்றியமைப்பது, உள்நாட்டுத் தேவையான உணவு தானிய உற்பத்தியைப் புறக்கணித்துவிட்டு ஏகாதிபத்தியங்களிடம் கையேந்தவைப்பது என்கிற நோக்கத்துடனேயே தற்போதைய பட்ஜெட்டும் அமைந்துள்ளது.

ஏற்கனவே 4 மாநிலங்களில் பட்டினிச் சாவுகள் தொடர்கதையாகிவிட்ட நிலையில், அதை நாடெங்கும் விரிவுப்படுத்தி நிரந்தரமாக்கும் வகையிலேதான் ஆட்சியாளர்களின் திட்டங்கள் அமைந்துள்ளன. இதை முன்கூட்டியே அறிந்து கொண்டுள்ள காங்கிரசுக் கயவாளிகள், வறட்சி நிவாரணத் திட்டத்திற்காக சற்றே கூடுதலாக ஒதுக்கீடு செய்துள்ளனர். கிராமப்புற மேம்பாட்டுக்காக கடந்த ஆண்டைவிட மூன்றில் இரண்டு பங்கு அதிகமாக ஏறத்தாழ 5000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலே 6% அளவுத் தொகை, அதிகாரிகள், ஒப்பந்தக்காரர்கள் அரசியல்வாதிகள் கொள்ளையிடும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்துக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கூடுதல் அளவைக் காட்டி, கிராமப்புற நலனில் அக்கறை கொண்ட பட்ஜெட் என்று ஆட்சியாளர்கள் பீற்றிக் கொள்கின்றனர்.

ஆனால், 1990-91-ம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வறட்சிப் பகுதிகளில் ஒரு கூலி விவசாயிக்கு ஆண்டுக்கு 15 நாட்களுக்குத்தான் வேலைகிடைத்தது. தற்போதைய கூடுதல் ஒதுக்கீட்டினால் இன்னும் 4, 5 நாட்களுக்கு வேலை கிடைக்கலாம். ஆனால் அதிகரித்துவிட்ட விலையேற்றத்துடன் ஒப்பிட்டால் இது மிக அற்பமானது என்று தெரியவரும். மேலும், ஆண்டு தோறும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் லட்சக்கணக்கான விவசாயிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால், 15 நாட்களுக்குக்கூட வறட்சி நிவாரண வேலைகள் கிடைக்காது. இது தவிர, விவசாயத்துக்கு அடுத்த மிகப்பெரிய உற்பத்தித்துறையான கைத்தறி நெசவுத் துறையை ஆட்சியாளர்கள் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர். கைத்தறி நெசவாளர்கள் பட்டினிச்சாவுக்குத் தள்ளப்பட்டு பிச்சை எடுக்கும் நிலையில் பரிதவிக்கின்றனர். ஆனால் நிதியமைச்சரோ, கைத்தறி நெசவுத் துறையை முற்றாகப் புறக்கணித்துவிட்டு, ஏகாதிபத்தியங்களிடமிருந்து பாலியஸ்டர் நுலிழைகளை இறக்குமதி செய்து கொள்ள வசதியாக சுங்கத் தீர்வையை பெருமளவு குறைத்துள்ளனார். இதன்விளைவாக கைத்தறிநெசவுத் துறை முற்றாக முடக்கப்பட்டு, லட்சக் கணக்கான நெசவாளர்கள் பட்டினிப் பட்டாளத்தில் தள்ளப்படுவர். இவர்களையும் சேர்த்துக் கணக்கிட்டால், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்துக்கான ஒதுக்கீடு முன்னைவிட குறைந்து போயுள்ளது என்ற உண்மை தெரியவரும்.

நாட்டின் கோடானு கோடி மக்களைப் பட்டினிச் சாவுக்கு தள்ளிவிட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியின் விலையைக் குறைத்து வக்கிரமாக ஆடுகிறது காங்கிரசு அரசு. பிஸ்கட், நூடுல்ஸ், வறுவல், ரப்பர் மெத்தை - தலையணைகள், குளிர்பதனச் சாதனங்கள், மேக்கப் சாதனங்கள், ரூ 75 லிருந்து ரூ 125 க்குப்பட்ட உயர்ரக செருப்பு வகைகள், சூட்கேஸ், பற்பசை, மின்விசிறி முதலானவற்றுக்கு சற்றே வரிக்குறைப்பு செய்துவிட்டு, அத்தியாவசிய நுகர்பொருட்களின் விலையைக் குறைத்துவிட்டதாக காங்கிரசுக் கோமாளிகள் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். கும்பி கூழுக்கு அழும்போது கொண்டைக்குப் பூ வைக்க கிளம்பியிருக்கின்றனர்.

வறியவர்களைப் பட்டினிக்குத் தள்ளியது போதாது என்று நடுத்தர வர்க்கத்தினரிடம் ஆடம்பர நுகர் பொருள் மோகத்தை ஊட்டி கொள்ளையிடுவது, அதேசமயம் அவர்களின் ஓட்டுக்களுக்கு குறிவைப்பது என்ற இரட்டை நோக்கத்துடனேயே இந்தச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நடுத்தர வர்க்கத்தினரிடம் எஞ்சியுள்ள அற்ப சேமிப்பையும் பறித்துக் கொண்டு, தரகு முதலாளிகளின் சந்தைவிரிவடைய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அன்னிய நுகர்பொருள் மோகம், ஐந்து நட்சத்திரக் கலாச்சாரம், ஏகாதிபத்திய சீரழிவு எனும் திசையில் நாட்டையும் மக்களையும் தள்ளுவதே தேசவிரோத ஆட்சியாளர்களின் நோக்கமாக உள்ளது.

நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் மறு அடகு வைத்தது போதாது என்று, மேலும் மேலும் உலக வங்கியிடம் கடன் வாங்கி நாட்டைத் திவாலாக்குவதில் ஆட்சியாளர்கள் முனைப்பாக உள்ளனர். இந்தியாவின் வெளிநாட்டுக்கடனோ 2 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது. இதற்கு வட்டி செலுத்தவே மொத்த பட்ஜெட்டில் கால் பங்கிற்கு மேல் 38,000 கோடி ரூபாய் போய்விடுகிறது. உலகின் மிகப்பெரிய கடனாளி நாடுகளான பிரேசில், மெக்சிகோவை அடுத்து மூன்றாவது இடத்தக்கு இந்தியா முன்னேறிவிட்டது. இப்படி ஆண்டுக்காண்டு பெருகும் கடனும் வட்டியும் சேர்ந்து நாட்டை திவாலாக்கப் போவது மட்டும் நிச்சயமாகிவிட்டது.

நாட்டை மறு அடகுவைக்கும் இப்பொருளாதாரக் கொள்கைகளை மூடி மறைக்கவும், மக்களிடம் செல்லாக்காசாகிவிட்ட காங்கிரசின் செல்வாக்கை தூக்கிநிறுத்தவும், ஒரு வேலை மத்திய அரசு கவிழ்ந்து மறுதேர்தல் வந்தால் பட்ஜெட்டைக் காட்டி ஏய்க்கவும் தான் தற்போதைய பட்ஜெட்டை கவர்ச்சிவாத — பஞ்சுமிட்டாய் பாணியில் காங்கிரஸ் பெருச்சாளிகள் தயாரித்துள்ளனர். ஆனால் இப்பொருளாதாரக் கொள்கைகளை எதிர்க்கும் எதிர்க்கட்சிகளிடம் இதற்கு மாற்றான உருப்படியான கொள்கைகளோ, திட்டங்களோ கிடையாது.

ஒரு ஜனநாயக அமைப்பில், ஒரு சிறுபான்மை அரசு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் எடுக்க அதிகாரம் கிடையாது என்று எதிர்க்கட்சிகள் முன்பெல்லாம் கூச்சலிட்டு வந்தன. ஆனால் இப்போதோ, ஆட்சி கவிழ்ந்தால் நெருக்கடி ஏற்படும்; இன்னொரு தேர்தலை நாடு தாங்காது என்பதையே பொதுவிதியாக்கி சம்பிரதாயமான எதிர்ப்பு தெரிவித்துவிட்டு முடங்கிக் கொள்கின்றன. இதைச் சாதகமாக்கிக் கொண்டு, மேலும்மேலும் மக்களை வறுமைப் படுகுழியில் தள்ளிவரும் காங்கிரசுத் துரோகிகள் கஞ்சிக்கு வழியில்லாதவனிடம் 'கலர்'சினிமா காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

## தேவகானத்தை எதிர்த்து "அசுரகானம்" ஒலித்தது

பார்ப்பனிய - இந்துமத வெறி பாசிஸ்டுகளின் முகத்திரையைக் கிழிக்கும் வண்ணம் மக்கள் கலை இலக்கியக் கழகம் அண்மையில் ஒலிப்பேழை ஒன்று வெளியிட்டுள்ளது. இதன் வெளியீட்டுவிழா 30-1-93 அன்று மதுரை மேலமாசி - வடக்கு மாசி வீதி சந்திப்பில் நடந்தது. முதலில் போலீசு அனுமதி மறுத்து ஒலிப்பேழையை போட்டு கேட்டப்பின்தான் அனுமதியளிக்க முடியும் எனக்கூறி பின்னர் அனுமதியளித்தது. பல அமைப்பினருக்கு "அசுரகானம்" ஒலிப்பேழையை அறிமுகப்படுத்தி கருத்துரை வழங்குமாறு கோரியிருந்ததன்பேரில் கருத்துரை வழங்கப்பட்டது. திரு.கா.மு. (வி.வி.மு.), திரு.தமிழ்பித்தன் (தி.க.ராமகிருஷ்ணன் அணி), திரு.ரவி (பு.மா.இ.மு), திரு.ராகுல் (மு.மா.க), திரு.சந்திரபோஸ் (இம்மானுவல் பேரவை), திரு.அன்பன் (தமிழக மாணவர் இயக்கம்), திரு.திருமாவளவன் (தலித் பேந்தர் இந்தியா), திருமதி. கோமதி அம்மாள் (பா.ம.க), திரு.சங்கமி நடராஜன் (பா.ம.க), திரு.மகேந்திரன் (தி.க) ஆகியோர் பேசினார்கள்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் வேம்பன் அவர்களால் "மந்திரமா, தந்திரமா" நிகழ்ச்சிகளில் சில நடத்தப்பட்டது. ம.க.இ.க-வைச் சேர்ந்த கதிரவன் தலைமை தாங்க, பன்னீர் செல்வம் வரவேற்புரை நிகழ்த்த, காளியப்பன் "ஒலிப்பேழை"யை வெளியிட்ட இறுதியில் ஏற்புரை நிகழ்த்தினார். வெளியீட்டு விழாவிற்கு திரளான மக்கள் வந்திருந்து ஆதரித்தனர். கூட்டத்தின் இடையில், மறுநாள் நடக்கவிருந்த தமது பொதுக்கூட்டத்திற்காக ஒலி அமைப்பு ஏற்பாடு செய்து கொண்டிருந்த அ.தி.மு.க-வினர் தமது பாடலை போட்டு வம்பிழுத்தனர். கூடியிருந்த மக்களே எழுந்து அவர்களை எச்சரிக்கவே பின்வாங்கி அடங்கிப் போனார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# கோஷ்டிச் சண்டை முற்றுகிறது காங்கிரசு நொறுங்குகிறது

ஏற்கனவே பக்கவாத நோய் தாக்கிப் படுக்கையில் கிடக்கும் கிழவனுக்கு, கீழே விழுந்து எலும்பும் முறிந்து போனால் எப்படியிருக்கும்? கூடவே காசநோயும் தொழுநோயும் சேர்ந்து கொண்டால் எப்படியிருக்கும்? அப்படிப்பட்ட நிலையில் மேலும் கெட்டழுகி மயானத்துக்குச் செல்ல நாள் குறித்துக் கொண்டிருக்கிறது காங்கிரசுக் கட்சி.

இந்திபேசும் மாநிலங்களிலேயே செல்லாக் காசாகிவிட்டபோதிலும், காங்கிரசுக் கட்சிக்குள் கோஷ்டி சண்டைகள் மட்டும் ஓய்ந்தபாடில்லை. "காந்தி குல்லாய் பறந்தது; கதர் சட்டைக் கிழிந்தது; ரத்தம் ஒழுகியது; கட்சி அலுவலகத்திலேயே கத்திக்குத்து" என்பதே அன்றாட செய்திகளாகிவிட்டன.

வறட்சியும் பட்டினிச் சாவுகளும் நிறைந்த பின்தங்கிய மாநிலமான ஒரிசாவில் காங்கிரசு எதிர்க்கட்சியாகத்தான் உள்ளது. ஆனாலும் மாநிலக் கட்சித் தலைவர் பதவிக்காகவும், மத்திய அரசில் தமது செல்வாக்கைக் காட்டி ராஜாங்க மந்திரி பதவியைப் பெறுவதற்காகவும் அங்கே நடந்த கோஷ்டிச் சண்டை, பகிரங்க தெருச்சண்டையாக தீவிரமடைந்துள்ளது.

ஒரிசாவின் முன்னாள் காங்கிரசு முதல்வரான ஜே.பி.பட்நாயக் இப்போது மாநிலக் காங்கிரசுக் கட்சித் தலைவராக உள்ளார். அவர் தலைமையிலான கோஷ்டிக்கும் துணைத் தலைவராக உள்ள வசந்தகுமார் பிஸ்வால் கோஷ்டிக்குமிடையிலான நாய்ச்சண்டை காங்கிரசு கட்சி வரலாற்றிலேயே இதுவரை காணாத வன்முறை வெறியாட்டமாக மாறியது. கடந்த பிப்ரவரி 14-ம் தேதியன்று, ஒரிசாவின் தலைநகர் புவனேஸ்வரிலுள்ள காங்கிரசு பவனில் கட்சிக் கூட்டம் நடந்தபோது, பிஸ்வாலின் ஆதரவாளர்கள் பட்நாயக்கைப் பதவி விலகுமாறு கோஷமிட்டனர். பிப்ரவரி 5-ம் தேதி நடந்த கூட்டத்தில் கட்சிப் பெரும்பான்மையினர் பட்நாயக் மீதான நம்பிக்கையில்லாத தீர்மானத்தில் கையெழுத்திட்டிருப்பதால், அவர் பதவியில் நீடிக்கவோ, இக்கூட்டத்தை நடத்தவோ உரிமையில்லை என்று கூச்சலிட்டனர். உடனே பட்நாயக்கின் ஆதரவாளர்கள் அவர்கள் மீது பாய்ந்து தாக்கத் தொடங்கினர். இதை முன்னரே எதிர்பார்த்து தயாரிப்புடன் வந்திருந்த பிஸ்வால் கோஷ்டி கத்தி, அரிவாள், உருட்டுக் கட்டைகளுடன் எதிர்த்தாக்குதல் நடத்தத் தொடங்கியது.

காங்கிரசு பவனத்தில் தொடங்கிய இச்சண்டை அதற்கு வெளியே தெருவிலேயே வன்முறைத் தாக்குதலாகத் தொடர்ந்தது. பிஸ்வாலின் சட்டையைக் கிழித்து தெருவிலே புரட்டி எடுத்த எதிர்கோஷ்டியினர், அவரது தங்கச் சங்கிலி, மோதிரம் மற்றும் பணப்பையைப் பறித்துச் சென்றனர். ஆதரவாளர், எதிர்ப்பாளர் எல்லோருக்குமே தரும அடி விழுந்தது. கட்சிப் பொதுச் செயலாளர்களின் ஒருவரான விஜயலட்சுமி சாஹூ என்பவரது சேலையை உருவி விரட்டியடித்தனர். காங்கிரசின் மாநிலத் தலைவர் மற்றும் இரு முன்னாள் அமைச்சர்கள் உட்பட 25-க்கும் மேற்பட்டோர் கத்தியால் குத்தப்பட்டனர். அவர்களில் 4 பேரின் மண்டை பிளந்து, தெருச்சாக்கடையில் விழுந்து கிடந்தனர். காங்கிரசு கட்சியினர் நடத்திய இந்த ரௌடித்தனத்தின் விளைவாக போக்குவரத்தே அரைமணி நேரத்துக்கு ஸ்தம்பித்துப் போனது. வீதியின் இருமருங்கிலும் மக்கள் கூடி நின்று அகிம்சாவாதிகள் நடத்திய இந்த அறப்போராட்டத்தைக் கண்டு கைகொட்டிச் சிரித்தனர்.

இந்த அளவுக்கு தெருநாய்ச் சண்டையாக முற்றவில்லையே தவிர, மகாராஷ்டிரத்தில் நடந்த உக்கிரமான கோஷ்டிச் சண்டையும், கைகலப்பும் அதைத் தொடர்ந்து முதல்வர் சுதாகர்ராவ் நாயக் பதவி பறிப்பும் காங்கிரசுக் கட்சியையே கலகலக்கச் செய்துவிட்டது. மகாராஷ்டிராவைச் சேர்ந்த மத்திய பாதுகாப்பு அமைச்சரான சரத்பவாரின் கொட்டத்தை அடக்க பிரதமர் நரசிம்மராவ், மகாராஷ்டிர முதல்வர் நாயக்கை ஏவிவிட்டார். இதன்படி கடந்த ஆண்டின் இறுதியில் சரத்பவாரின் ஆதரவாளர்களான 11 அமைச்சர்களை நாயக் பதவியிலிருந்து விரட்டினார். அடுத்தகட்டமாக, கடந்த பிப்ரவரியில் சரத்பவாரின் ஆதரவாளர்களான 6 அமைச்சர்களை டிஸ்மிஸ் செய்ததும் ஆத்திரமடைந்த பவார் கோஷ்டியினர் நாயக்கை பதவியிலிருந்து விரட்டக் கோரி களத்தில் இறங்கினர். இதை எதிர்த்து மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவாண், வி.என். காட்கில், அந்துலே முதலான பழம் பெருச்சாளிகள், நாயக்கை பதவியிலிருந்து நீக்கக் கூடாது என்று பவாருக்கு எதிராக கலகக் கொடி தூக்கினர்.

ஒரிசா-காங். நாய்ச்சண்டையில் கிழிந்த கதர்ச்சட்டை; பிஸ்வால்



ஏற்கனவே பம்பாயில் மதவெறிக் கலவரத் தீ பற்றி எரிந்தபோது கைகட்டி நின்று வேடிக்கை பார்த்த காங்கிரசு அரசு, தற்போதைய கோஷ்டிச் சண்டையால் கடந்த ஒரு மாதகாலமாக செயலற்று முடங்கிப் போய்விட்டது. மராட்டிய தரகுப் பெருமுதலாளிகளில் ஒரு பிரிவினர் சரத்பவாருக்கு ஆதரவாகத் திரண்டு பிரதமருக்கு நிர்பந்தம் கொடுத்தனர். மேலும், சரத்பவாரின் விருப்பத்தை நிறைவேற்றாவிட்டால், தன்னுடன் அதிகாரப் போட்டியில் இறங்கியுள்ள அர்ஜுன் சிங்குடன் அவர் கூட்டு சேர்ந்துவிட்டால் ஆபத்தாகிவிடும் என்று பிரதமர் ராவ் அஞ்சினார். எனவே, காங்கிரசின் மரபுப்படி சுதாகர்ராவ் நாயக்கை அவசரமாக டெல்லிக்கு அழைத்து, அவரிடம் ராஜினாமா கடிதத்தைப் பெற்று முதல்வர் பதவியிலிருந்து நீக்கியுள்ளார். மத்திய அரசியலிலிருந்து பவாரை ஒதுக்க இதையே வாய்ப்பாக்கிக் கொண்டு மீண்டும் பவாரை முதல்வராக்கியுள்ளார் ராவ். மத்தியில் காங். ஆட்சியே ஆட்டங்கண்டு கொண்டிருப்பதை உணர்ந்து மாநிலத்திலிருக்கும் செல்வாக்கையும் இழந்துவிடாமல் காப்பாற்றிக் கொள்வதற்காக முதல்வர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார் பவார். ஆனாலும் கோஷ்டி மோதல்கள் தொடர்கின்றன.

இவ்விரு மாநிலங்கள் மட்டுமல்ல, விதிவிலக்கின்றி எல்லா மாநிலங்களிலும் காங்கிரசுக் கட்சிக்குள் கோஷ்டிச் சண்டைகள் புழுத்து நாறுகிறது. தமிழகத்தில் மூப்பனார் - வாழப்பாடி கோஷ்டிகளுக்கிடையிலான குடுமிபிடி சண்டை யாவரும் அறிந்ததுதான். குஜராத் மாநிலத்தில், முதல்வர் சிமன்பாய் பட்டேல் கோஷ்டிக்கும், முன்னாள் மத்திய அமைச்சர் சோலங்கி கோஷ்டிக்குமிடையிலான நாய்ச் சண்டை இப்போது மேலும் தீவிரமடைந்துள்ளது. குஜராத்தில் ஒரு மாதத்துக்கும் மேலாக நடந்த மதவெறிக் கலவரங்களைக் கட்டுப்படுத்தத் தவறிய முதல்வர் பட்டேலை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று சோலங்கி கோஷ்டி பகிரங்கமாக கலகம் செய்துவருகிறது.

ஆந்திராவில், முன்னாள் மத்திய அமைச்சர் சிவசங்கர், முன்னாள் மாநில அமைச்சர்களான ராமச்சந்திரரெட்டி, ராஜசேகரரெட்டி ஆகியோர் தலைமையிலான அதிருப்தி கோஷ்டிகள் ஒன்றுசேர்ந்து முதல்வருக்கு குழிபறிக்கும் வேலையைச் செய்து வருகின்றன. மாநில அதிகாரத்தில் தமக்கு உரிய எலும்புத் துண்டுகளைத் தராவிட்டால், தனியாக மாநிலக் கட்சியைத் துவக்



படிப்பகம்

www.padippakam.com



நாய் வாலை நிமிர்த்தினாலும் காங். கோஷ்டிச் சண்டையை தீர்க்க முடியாது. உள்ளே குடுமிப்பிடிச் சண்டை, வெளியே கைகூப்பி வேஷம்.

கப்போவதாக அச்சுறுத்தி வருகின்றன.

கர்நாடகத்தில், பதவி நீக்கப்பட்ட முன்னாள் முதல்வர் பங்காரப்பா கோஷ்டி, தற்போதைய முதல்வர் வீரப்பமொய்லிக்கு எதிராக குடுமிபிடி சண்டையில் இறங்கியுள்ளது. தமது கோஷ்டிக்கு உரிய பங்குதரா விட்டால், காங்கிரசின் முக்கிய ஓட்டு வங்கியான ஒக்கலிக்கா சாதியினரைத் திரட்டிப் போராட்டம் நடத்துவோம் என்று பங்காரப்பா கோஷ்டி மிரட்டி வருகிறது.

கேரளாவில், முதல்வர் கருணாகரன் கோஷ்டிக்கும், ஏ.கே.அந்தோணி கோஷ்டிக்கும் இடையிலான சண்டை, நீண்டகாலமாக தீராத சொறியாக உள்ளது. அண்மையில் அந்தோணியை மத்திய அமைச்சராக ராவ் நியமித்து சமரசப்படுத்த முயன்றார். ஆனாலும் கோஷ்டிச் சண்டை ஓயவில்லை. இப்போது மாநில கட்சித் தலைவரான வயலார் ரவி, முதல்வர் கருணாகரனையும் பிரதமர் ராவையும் வெளிப்படையாக எதிர்த்து கலகம் செய்து வருகிறார்.

மே. வங்கத்தில், கானிகான்சௌத்திரி கோஷ்டி, பிரணாப் முகர்ஜி கோஷ்டி, மம்தா பானர்ஜி கோஷ்டி ஆகியவை நடத்தும் குழாயடிச் சண்டையால் மாநிலத்தில் கட்சியே பலகூறுகளாகிவிட்டது. பீகாரில் ஜெகன்னாத் மிஸ்ரா, பகவத் ஜா ஆசாத், தாரிக் அன்வர் ஆகியோர் தலைமையிலான கோஷ்டிகளுக்கிடையிலான மோதல் தீவிரமாகி, கைகலப்பும் கதர் சட்டை கிழிவதும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. உ.பி.யில் அதிருப்தி கோஷ்டித் தலைவரான திவாரியை, அகில இந்திய காங்கிரசு செயற்குழு உறுப்பினராக நியமித்தபோதிலும் கோஷ்டிப் பூசல்கள் இன்னமும் ஓயவில்லை. இமாச்சலப் பிரதேசத்தில் வீர்பத்திரசிங் கோஷ்டியும், மத்திய அமைச்சர் சுக்ராம் கோஷ்டியும் நடத்தும் நாய்ச்சண்டையால் சாதி அடிப்படையிலான இரு குழுக்களாக காங்கிரசுக் கட்சி பிளவுபட்டுள்ளது.

மத்தியப் பிரதேசத்தில், பிரதமருக்கு எதிரான அர்ஜுன்சிங் கோஷ்டியும், அதற்கு எதிரான சிந்தியா கோஷ்டியும், இவற்றுக்கு எதிராக சுக்லா, மோதிலால் வோரா கோஷ்டிகளும், ஒன்றையொன்று, கடித்துக் குதறிக் கொள்கின்றன. இதுதவிர டெல்லியில், பகத், டைட்லர், தவான், கே.என்.சிங், சரத் பவார், அர்ஜுன்சிங் ஆகியோர் தலைமையிலான கோஷ்டிகளும், பிரதமர் நரசிம்ம ராவ் தலைமையிலான கோஷ்டியும் அதிகாரப் போட்டிக்கான நிழற்சண்டையை உக்கிரமாக நடத்தி வருகின்றன.

நேரு பரம்பரை நாட்டையும் காங்கிரசையும் ஆண்ட போது பதவி வேட்டையும் கோஷ்டிச் சண்டைகளும் நாசூக்காக, நாகரீகப் போர்வை போர்த்தி நடந்தன. இப்போது அவை ஆபாசமாக, பகிரங்கமாக,

காங். கோஷ்டிச் சண்டை நாறுகிறதாம்!



மூர்க்கமாக வெடித்து நாட்டையே நாறடிக்கின்றன. தலைமையின் சர்வாதிகார முடிவுகளுக்குக் கட்டுப்படுவது என்கிற நிலைமை மாறி, நடைபெற உள்ள அகில இந்திய காங்கிரசு கமிட்டி கூட்டத்தில் நரசிம்மராவுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவர அதிருப்தி கோஷ்டிகள் முனைப்பாக செயல்படுகின்றன. இந்த நிலையில் காங்கிரசுக் கட்சி இன்னும் எவ்வளவு காலம் பதவியில் நீடிக்க முடியும்? நரசிம்மராவ் தலைமையில் இன்னும் எவ்வளவு காலம் ஒரு கட்சியாக நீடிக்க முடியும்? - இந்தக் கேள்விக்குறிகள் பெரிதாகிக் கொண்டே போகின்றன.

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் மூலம் எவ்வளவுதான் தான் மாயத் தோற்றத்தை, பொய்யான நம்பிக்கையை ஏற்படுத்தினாலும், காங்கிரசுக்கட்சி மற்றும், ஆட்சியின் கடைசிநாட்கள் எண்ணப்படுகின்றன என்பதே எதார்த்த உண்மையாகிவிட்டது. அதன் ஊழல், ஒடுக்குமுறை, ஏகாதிபத்தியங்களுக்கு நாட்டை மறு அடகு வைத்து மக்கள் மீது திணிக்கும் பொருளாதாரச் சுமைகள், இந்துவெறி பாசிஸ்டுகளுடன் கள்ளக்கூட்டு முதலான வற்றால் அது மக்களிடமிருந்து தனிமைப்பட்டு வெறுப்புக்குள்ளாகி நிற்கிறது. தரகுப் பெருமுதலாளிகளில் ஒரு பிரிவினர் இப்போது காங்கிரசைக் கைவிட்டு பாரதீய ஜனதாவின் பக்கம் திரும்பிவிட்டனர். ஆட்சி கலைக்கப்பட்டு அடுத்து ஒரு தேர்தல் வந்தால் காங்கிரசு அதோகதிதான் என்கிற தோல்வி பயத்தினால் அதன் முகத்தில் சவக்களை வேகமாகப் பரவி வருகிறது. நூறாண்டுக்கும் மேலாக, நாட்டையும் மக்களையும் சுரண்டிக் கொழுத்த காங்கிரசுக் கட்சி கெட்டழுகி நாறிப்போய் மயானத்துக் குச் செல்லத் தயாராகிவிட்டது. இந்திய உழைக்கும் மக்கள் அதற்குப் பாடைகட்டி ஆழக்குழி தோண்டி புதைக்க வேண்டியது தான் பாக்கியிருக்கிறது. ● குமார்

படிப்பகம்

www.padippakam.com

★ கடந்த பிப்ரவரி 11 அன்று 'மார்க்சிஸ்டுகள்' கேரளாவின் பப்பிநஸ் ஸேரி கிராமத்தில் உள்ள ஒரு பாம்பு பண்ணையினையும், பாம்பு விஷமுறிவு ஆயுர் வேத மருத்துவமனையையும் தீயிட்டும், ஆயுதங்களால் தாக்கியும் தரைமட்டமாக்கி யுள்ளனர். சென்னையிலும், கல்கத்தாவிலும் இயங்கும் பாம்பு பண்ணைகளில் இருப்பதைவிட இங்கிருந்த அரியவகை உயிரினங்கள் 90 சதவீதம் அழிக்கப்பட்டு விட்டதால், சேதத்தை பணத்தால் அளவிடுவதால் பலன் ஒன்றுமில்லை என்கிறார்கள் இப்பண்ணையின் நிர்வாகிகள். இக்காட்டு மிராண்டித்தனமான செயலுக்கு காரணம், கண்ணனூரில் இயங்கும் ஏ.கே.ஜி. நினைவு கூட்டுறவு மருத்துமனையின் ஆட்சி மன்றத் தேர்தலில் 'மார்க்சிஸ்டு'களுக்கும், சி.பி.எம்.- லிருந்து பிரிந்து சென்று தனிக்கட்சி நடத்திவரும் ராகவன் கோஷ்டியினருக்கும் இடையில் நிலவும் பலத்த போட்டிதான். ராகவன் கம்யூனிஸ்ட் 'மார்க்சிஸ்ட்' கட்சியினர் (CMP) எளிதில் வெல்லும் வாய்ப்பிருந்ததால், அவரின் முன்முயற்சியால் தொடங்கப்பட்ட இப் பாம்பு பண்ணையின் மீது தங்கள் வன்மத்தைக் காட்டியுள்ளனர் 'மார்க்சிஸ்டுகள்'

★ மத்திய புலனாய்வு துறை கடந்த பெப்ருவரி 14 ஞாயிறு அன்று ஹர்ஷத் மேத்தாவின் ஸ்விஸ்வங்கி கணக்குகள் தனது முன் முயற்சியினால் முடக்கப்பட்டுவிட்டன என்ற செய்தியை பி.டி.ஐ மற்றும் யு.என்.ஐ. செய்தி நிறுவனங்களின் வாயிலாக பத்தரிக்கைகளுக்கு அனுப்பியுள்ளது. இச்செய்தி மறுநாள் எல்லாப் பத்திரிக்கைகளிலும்



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

வெளிவந்தது. ஆனால், அன்றே, சுவிஸ் அதிகாரிகள், 'இச்செய்தி முழுப்பொய்; வங்கி கணக்குகளை முடக்கச்சொல்லி சி.பி.ஐ. முதலில் அனுப்பிய விண்ணப்பம் முறையான படிவத்தில் கிடையாது; இரண்டாவது முறை வந்த விண்ணபத்தில் தேவையான விவரங்களே கிடையாது' என்கூறி மறுத்துள்ளனர். பி.டி.ஐ. அதிகாரிகளோ, 'செய்தியை திட்டமிட்ட சி.பி.ஐ. விடுமுறை தினத்தன்று கொடுத்ததால், எங்களால் உறுதி செய்து கொள்ள முடியவில்லை' என வருத்தம் தெரிவிக்கிறார்கள். ஊழலை விசாரிக்க கிளம்பிய சூரப்புலிகளின் யோக்யதை எப்படியுள்ளது பார்த்தீர்களா?

★ பொது மக்களின் வரிப்பணத்திலிருந்து தான் நாட்டினது முக்கிய மந்திரிமார்கள், உயர் அதிகாரிகள் அவர்களது மனைவி, மகன், மகள், பேரன், பேத்திகள் எனத் தொடங்கி அவர்களது முக்கிய உறவினர்கள் ஈறாக அனைவருக்கும் அளிக்கப்படும் பாதுகாப்புக்கான செலவு ஈடு செய்யப்படுகிறது. ஆனால், அவர்களோ, பாதுகாப்பு அதிகாரிகளை தங்களின் சட்டமீறல்களுக்கும், கீழ்த்தரமான செய்கைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றனர். டில்லியைச் சேர்ந்த கட்டிட ஒப்பந்தக்காரர்கள் ஒருவர், தில்லி குற்றப்பிரிவு போலீசார் தன்னை பிடிக்க வந்த பொழுது, தனது பாதுகாப்பு அதிகாரியைக் கொண்டே தப்பித்து ஓடிச்சென்றுள்ளார். மற்றொருவர், தில்லி பல்கலைக்கழக வளாகத்தினுள் பெண்களை கேலி செய்வதற்காக பயன்படுத்தி வருகிறார். இது போன்று ஏராளமான புகார்கள் வரவே, மத்திய உள்துறை அமைச்சகம் 300 பேருக்கு கொடுத்துள்ள பாதுகாப்பினை விலக்கிக் கொள்ள முடிவு செய்துள்ளது.

★ தேசியமயமாக்கப்பட்ட ஆந்திரா வங்கியின் செயல் இயக்குநராக தற்சமயம் பதவி வகிப்பவர் அகோல்கர். இந்த வங்கியின் துணை நிறுவனத்தின் மூலம்தான், பங்கு சந்தை ஊழலின் முக்கிய நபரான புபேன்த லால், 2 கோடி ரூபாயை, பிரதமரின் மகன் பங்குதாரராக உள்ள 'கோல்டன் ஸ்டார்' எனும் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளனர். அகோல்கரை இவ்வங்கியின் முதன்மை இயக்குநராக பதவி உயர்வு கொடுப்பதற்கு சி.பி.ஐ.ன் அறிக்கையை நாடியது நிதி அமைச்சகம். சி.பி.ஐ. எதனையும் பரிசீலிக்காமல் இவர் மேல் எந்தக்குற்றமும் கிடையாது என அறிக்கை அனுப்பியுள்ளது. இக் கோப்பு பிரதமரின் பார்வைக்குச் சென்ற பொழுது அங்கிருந்த அதிகாரிகளால் இத்தவறு சுட்டிக்காட்டப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இதுபோன்று 'ஊழல் அதிகாரிகளுக்கெல்லாம் உத்தமர்' என சி.பி.ஐ. சான்று தருவது சர்வசாதாரணம் என்கின்றனர் பிற அதிகாரிகள்.

★ தான் ஆண்ட உ.பி. மற்றும் ம.பி. மாநில பாடத்திட்டங்களின் இந்து மதவெறிக்கு, சாதகமாக வரலாற்றையே பி.ஜே.பி. திரித்துப் புரட்டியது. காங்கிரஸ் ஆளும் குஜராத் மாநிலத்தில், எட்டாம் வகுப்பிற்கான சமூக விஞ்ஞான பாடத்தில், 'நகரத்தில் நடைபெறும் ஆர்.எஸ்.எஸ்-ன் நடவடிக்கைகளில் மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டும்' என்ற வரிகள் உள்ளன. 1990-ல்சிமன்பாய் பட்டேல், பாரதீய ஜனதாவின் ஆதரவுடன் ஆட்சி நடத்தியபொழுதுதான், இத்தகைய பாடத்திட்டங்கள் அரசினால் அங்கீகரிக்கப்பட்டு, இன்றுவரை - அவர் தனது தனிக்கட்சியை காங்கிரஸோடு இணைத்த பின்னும் - நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

★ திரிபுரா மாநிலத்தில் நடந்துள்ள லாட்டரி ஊழல் தொடர்பாக, அம்மாநில காங்கிரஸ் தலைவர் ஏ.கே.சுபா, அவரது மனைவி, மருமகன், தனிச்செயலாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆளும் காங்கிரசின் உதவியோடு, அரசுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் முன்பே, 120 கோடி ரூபாய் பெறுமான லாட்டரி சீட்டுக்களை அச்சடித்து பிற மாநிலங்களிலும் விற்றுள்ளது இக்கும்பல். பிப்ரவரி 14 அன்று முதல் குலுக்கல் நாளின் பின்னும், முடிவுகள் வராமல் இருக்கவே, பொது மக்கள் அரசிடம் புகார் செய்துள்ளனர். அதன்பின்புதான், அரசு விழித்துக் கொண்டு, விசாரணை நடத்தி, கைது நாடகத்தை நடத்தியுள்ளது. தற்சமயம், ஏ.கே. சுபாவைத் தவிர பிறரை விடுதலை வேறு செய்துவிட்டது!

இலங்கையில் பத்திரிக்கையாளர்கள் போராட்டம்






படிப்பகம்

www.padippakam.com

★ கடந்த ஜனவரியில் பம்பாய் ஐ.ஐ.டி. உயர் கல்வி நிறுவனத்தில் பி.டெக். (B.Tech) இரண்டாம் ஆண்டு படித்து வரும் சந்திராணி என்ற மாணவி, கல்லூரி விடுதியில் தனது அறையிலேயே தீ வைத்துக் கொண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இது இக்கல்லூரியில் இரண்டே மாதங்களில் நடைபெற்ற இரண்டாவது தற்கொலையாகும். இக்கல்லூரியில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வை தனது தாய்மொழியான வங்காளத்தில் எழுதி தேர்வுபெற்ற இத்திறமை வாய்ந்த மாணவியால், (இந்த உயர்கல்வி ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்பெறுவதன் காரணமாக) கிரகித்துக் கொள்ள இயலாததால், இம்முடிவினைத் தேர்ந்தெடுத்துள்ளார். இதுமட்டுமின்றி, கல்லூரியில் ஆங்கிலத்தில் மட்டுமே உரையாடும் மேட்டுக்குடி கலாச்சாரத்தால் தனிமைப்பட்ட நிலையும், இருபருவ தேர்வுகளில் குறைவான மதிப்பெண்கள் பெற்றிருந்ததால், நிர்வாகம் அனுப்பிய எச்சரிக்கை கடிதமும், அம்மாணவியை இக்கோர முடிவை எடுக்கத் துரிதப்படுத்தியுள்ளன. அவரின் அறையினுள், ஆங்கிலத்தில் நடத்தப்பெறும் பாடங்களை தான் புரிந்து கொள்ள இயலாததை விளக்கி வீட்டுக்கு எழுதியிருந்த கடிதங்கள் தபால் செய்யப்படாமல், அப்படியே உள்ளன. ஒவ்வொரு மாணவரின் பிரச்சனைகளைக் கண்டறிந்து உதவுவதற்கு வழிகாட்டி ஆசிரியர்கள் இருப்பினும், அவர்களின் அலட்சியப் போக்கையே இம்மரணம் எடுத்துக்காட்டுகிறது. உயர்கல்வி நிறுவனங்கள் நடத்தப்படுவதோ மக்களின் வரிப்பணத்தில் ஆனால், பாடங்களோ அந்நிய மொழியான ஆங்கிலத்தில். இந்த இழிநிலை ஒழியாதவரை, இதுபோன்ற மரணங்களைத் தடுக்க முடியாது.




சென்னை மத்திய ரயில் நிலையம் முன்பு கர்நாடக விவசாயிகள் போராட்டம்

★ சென்னையில் செயல்படும் அன்னை தெரசா பல்கலைக்கழகத்தை மீண்டும் கொடைக்கானலுக்கு மாற்றும் அரசின் முடிவை எதிர்த்து கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக, இப்பல்கலைக்கழக மாணவிகளும், ஆசிரியைகளும் போராடி வருகின்றனர். சென்னையில் தனது சொந்த கட்டிடத்தில் இயங்காத இப்பல்கலைக்கழகத்திற்கு கொடைக்கானலில் இருப்பதோ ஒரே ஒரு கொட்டகைதான். மேலும், முறையான திட்டமில்லாமல், திடீர் திடீரென மாற்றுவதால் மாணவிகளின் கல்வியும், பொருளாதார ரீதியான அவர்களின் குடும்பங்களுமே பாதிக்கப்படும். இப்போது ஜெயா அரசுக்கு, இப் பல்கலைக்கழகத்தை கொடைக்கானலுக்கு மாற்றுவதற்கு வேறு காரணங்கள் கிடையாது; கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் இப்பல்கலைக்கழகம் சென்னைக்கு மாற்றப்பட்டது என்ற ஒன்றைத் தவிர.

★ இலங்கையின் அதிபர் தேர்தல் இன்னும் இரண்டு வருடங்களில் வர இருப்பதால் அதிபர் பிரேமதாசா இப்பொழுதிலிருந்தே பத்திரிக்கையாளர்களை மிரட்டத் தொடங்கியுள்ளார். பிரேமதாசா அரசு பற்றி விமர்சன கட்டுரைகள் எழுதும் பத்திரிக்கைகளுக்கு அடுத்த நிமிடமே வரி பாக்கிக்கான தாக்கீது அனுப்பப்படுகிறது. கட்டத்தவறினால் குடிநீர், மின்சாரம், தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்படும் என்ற மிரட்டல் வேறு. மேலும், பத்திரிக்கையாளர்களின் கடந்த கால நடவடிக்கைகளையும் ஆராய போலீசாருக்கு ரகசிய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பத்திரிக்கையாளர்கள், 'நாலு வார்த்தையாவது சுதந்திரமாக எழுதவிடு' என அரசை எதிர்த்து போராடத் தொடங்கியுள்ளனர்.

★ மார்ச் 3 அன்று டெல்லி செங்கோட்டை மைதானத்தில், நாடெங்குமிலிருந்து ஒரு லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகள் அணி திரண்டு, டங்கல் வரைவுத் திட்டத்தை எரித்து இந்திய விவசாயத்தை ஏகாதிபத்தியங்களின் கோரப்பிடிக்குள் சிக்க வைக்கும் மத்திய அரசின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ஆரம்பத்தில், போட்கிளப் மைதானத்தில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்த இந்த எதிர்ப்பு ஊர்வலத்தை தடை செய்த ராவ் அரசு, பின்னர் தடையுத்தரவை எதிர்த்த விவசாயிகளின் போராட்டங்களைக் கண்டு அஞ்சி, செங்கோட்டை மைதானத்தில் நடத்திக் கொள்ள அனுமதி அளித்தது. இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக, வந்த எண்ணூறுக்கும் அதிகமான கர்நாடக விவசாயிகளை, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் தடுத்து அனுமதிச் சீட்டு இன்றி பிரயாணம் செய்தனர்' எனக் குற்றம் சுமத்தி நிர்வாகம் காவல் துறையினரிடம் ஒப்படைத்துள்ளது. இவர்களை எவ்வித வழக்கும் பதிவு செய்யாமல் மார்ச் 3 வரை ஏழு நாட்கள் சிறையிலடைத்துள்ளது ஜெயா அரசு. ஆனால், இதே அதிகார வர்க்கத்தினர்தான் காங்கிரஸ் மாநாடுகள் நடத்தும்பொழுது இலவச ரயில் விட்டும், ஓசியில் பயணம் செய்த அக்கட்சியின் தொண்டர்களை கைகட்டி வழியனுப்பி வைத்தும் தங்கள் விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்கள்!

'மார்க்சிஸ்டு'கள் தம் கோஷ்டிச் சண்டையில் தாக்கி கொன்ற வாயில்லாப் பிராணிகள்!



படிப்பகம்

www.padippakam.com

# டெல்லி பேரணி இந்து ராஷ்டிரத்தை நோக்கி இன்னுமொரு தாக்குதல்

ஒவ்வொரு முறையும் நாடாளுமன்றம் கூடும்போது, இந்துராஷ்டிரக் கோரிக்கைகளை முன்வைத்து, நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராட்டம் நடத்தி, நாட்டின் கவனத்தை அதை நோக்கிக் குவித்து அரசியல் ஆதாயம் தேடுவதென்பது இந்து வெறியர்கள் வழக்கமாகப் பின்பற்றிவரும் உத்தி. அந்த வகையில் தற்போது பட்ஜெட் கூட்டத் தொடருக்காக நாடாளுமன்றம் கூடிய போது, டெல்லியில் தடையை மீறிப் பேரணி நடத்த முற்பட்டும், நாடாளுமன்றத்தை செயல்படவிடாமல் ஊளையிட்டும் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதில் இந்து வெறியர்கள் மீண்டும் வெற்றி பெற்றுள்ளனர்.

அயோத்தி பாபர் மசூதியைத் தகர்த்து, நாடு முழுவதும் மதவெறிப் படுகொலைகளை நடத்திய இந்துவெறி பாசிஸ்டுகள், முன்னிலும் அதிக மூர்க்கத்தோடு கிளம்பியுள்ளனர். மனித ரத்தத்தைச் சுவைத்துவிட்ட இந்துவெறி ஓநாய்கள் இன்னும் அதிக இரை தேடி அலைவதையே பாபர் மசூதி இடிப்புக்குப் பிந்தைய நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன. இத்தகைய தாக்குதல் அரசியல்தான் விரைவான, சாதகமான பலனளிக்கும் என்பதை உறுதி செய்து கொண்டபின், இந்துவெறி பாசிஸ்டுகள் துணிந்து நம்பிக்கையுடன் செயல்பட்டு வருகின்றனர். தமது இந்துவெறி அட்டூழியங்களை நியாயப்படுத்தி, மத்தியிலுள்ள ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி இந்துராஷ்டிரத்தை நிறுவும் நோக்கத்தோடு கடந்த பிப்ரவரி 25-ல் டெல்லியில் இதுவரை காணாத பேரணி நடத்தத் தீர்மானித்தனர்.

ஏற்கனவே இந்து வெறியர்களின் மதவெறிக் கோரிக்கைகளுக்கு அடிபணிந்து முழு ஒத்துழைப்பு அளித்துவரும் நரசிம்ம ராவ் அரசுக்கு மேலும் நிர்பந்தங்களைக் கொடுப்பதன் மூலம் அரசியல் ஆதாயமடையும் நோக்கத்துடனேயே இந்தப் பேரணியை நடத்தத் திட்டமிட்டனர். இந்துவெறியர்களின் முஸ்லீம் எதிர்ப்பு, மதவெறிப் பாசிசக் கோரிக்கைகளுடன் இப்பேரணி நடத்தப்படுவதாக இருந்தால், ராவ் அரசு பெயரளவிலான சில நிபந்தனைகளுடன் அதை அனுமதித்திருக்கும். ஆனால் இந்த வெறியர்களின் தற்போதைய பேரணியோ, முற்றிலும் காங்கிரசு எதிர்ப்பு அரசியல் போராட்டமாக, அதற்கான கோரிக்கைகளைக் கொண்டதாக உள்ளது. இதற்கு அடிபணிந்து விட்டுக்கொடுப்பது என்பது காங்கிரசின் தற்கொலைக்கு ஒப்பானது.

ஏற்கனவே ராவ் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து தோற்றுப்போன இந்து வெறியர்கள் அடுத்த கட்டமாக காங்கிரசுக்கு எதிராக நடத்தும் அரசியல் தாக்குதல்தான் இது. அண்மைக்காலமாக, நாடெங்கும் இத்தகைய காங்கிரசு எதிர்ப்புப் போராட்டங்களை அவர்கள் தீவிரமாக்கி வருகின்றனர். அதன் உயர்ந்த கட்டமாகவே தற்போதைய பேரணியை அறிவித்து தாக்குதல் நடத்தக் கிளம்பினர். மேலும், டெல்லியில் பேரணி என்ற பெயரில் லட்சக்கணக்கானோரைத் திரட்டி, கோரிக்கைகளை ஏற்கும்படி தொடர்ச்சியாக முற்றுகைப் போராட்டமாக மாற்றுவது என்பதுதான் பாரதீய ஜனதாவின் சதித்திட்டமாக இருந்தது. இப்படியொரு அரசியல் தாக்குதலுக்கு விட்டுக் கொடுத்தால், பின்னர் அது நாடு முழுவதும் பரவி காங்கிரசு ஆட்சியையே காவு கொண்டுவிடும் என்று ராவ் அரசு அஞ்சியது.


இதுதவிர, இப்பேரணிக்கு லட்சக்கணக்கில் குவியும் இந்துவெறியர்கள், அயோத்தியில் மசூதியை இடித்ததைப் போல டெல்லி ஜும்மா மசூதியையும் இடிக்கக்கூடும்; பழைய டெல்லியில் சேரிப் பகுதிகளில் வாழும் சிறுபான்மை முஸ்லீம்கள் மீதும் குறிப்பாக, வங்கதேச அகதிகள் மீதும் தாக்குதல் நடத்தி நரவேட்டையாடவும் கூடும். இப்படி ஏதாவது விபரீதம் நடந்துவிட்டால் பின்னர் காங்கிரசு அரசு பதவியில் நீடிக்க அருகதை இல்லாமல் போய்விடும். எனவேதான் இப்பேரணியை ராவ் அரசு தடை செய்தது.

ஆனாலும் இந்துவெறியர்களின் ஆவேசமான அரசியல் தாக்குதலை எதிர்கொண்டு முறியடிக்கும் ஆற்றல் காங்கிரசிடம் அறவே இல்லை. எனவேதான் பாரதீய ஜனதாவின் பேரணி உட்பட எல்லாவகையான பேரணிகளையும் டெல்லியில் 4 மாத காலத்துக்குத் தடை செய்வதாக அறிவித்தது. மேலும், இப்பேரணிக்குத் தடைவிதிக்கும் முன்னர், உள்துறை அமைச்சர் சவாண், பாரதீய ஜனதா தலைவர் ஜோஷிக்குக் கடிதம் எழுதினார். அதில் பேரணி நடத்துவதை மறுபரிசீலனை செய்யக் கூடாதா என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். பிரதமர் ராவ், அத்வானியிடம் தொலைபேசி மூலம் ரகசியப் பேச்சுவார்த்தை நடத்தி டெல்லிக்கு வெளியே பேரணி நடத்திக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார். இதன்மூலம் தாங்கள் பொறுப்போடு நடந்துகொள்வதாக காட்டிக்கொண்டு, தமது அரசியல் கையாலாகாத்தனத்தை ராவ் அரசு திறமையாக மூடிமறைக்க முயற்சித்தது.

டெல்லியில் பேரணி நடைபெறவிருந்த "போட் கிளப்" மைதானத்தைச் சுற்றி முள்கம்பி வேலி அமைத்து உள்ளே யாரும் நுழைய முடியாதபடி தடை ஏற்படுத்தியும், டெல்லி மாநகரில் வாகனப் போக்குவரத்துக்கு கட்டுப்பாடுகள் விதித்து சோதனை நடத்தியும், டெல்லிக்கு வரும் ரெயில், பேருந்துகளில் குவியும் இந்துவெறி குண்டர்களைக் கைது செய்தும், இதர மாநிலங்களில் இந்து வெறிஅமைப்பினரை முன்னெச்சரிக்கையாக கைது செய்தும் ராவ் அரசு நடவடிக்கையில் இறங்கியது. இதுதவிர, இத்தகைய பேரணிகளால் மக்களுக்கு வீண் சிரமங்கள் ஏற்படுவதாக வானொலியில் ஓயாமல் பிரச்சாரம் செய்தது.

இந்து வெறியர்களோ மேலும் மூர்க்கமாக ராவ் அரசை எதிர்க்கத் தொடங்கினர். "அரசியல் சட்டத்தின் 19-வது பிரிவின்படி பொதுமக்கள் கூட்டம் கூடவும் பேசவும் உள்ள உரிமையைப் பறிக்கும் நடவடிக்கை இது. 1975-ஐப் போல அறிவிக்கப்படாத

'போட் கிளப்' மைதானத்தைச் சுற்றி போடப்பட்ட முள் வேலி; ஆட்சிக்கு ஆபத்து என்றால் இவ்வளவு தயாரிப்பு! அயோத்தி மசூதிக்கு என்ன பாதுகாப்பு?





படிப்பகம்

www.padippakam.com



தடுக்கும் போலீசை கல்லெறிந்து தாக்கும் பா.ஜ.க. குண்டர்கள்

அவசர நிலையை ராவ் அரசு திணித்துள்
து. காங்கிரசு ஆட்சியின் முடிவுக் காலம்
நெருங்கிவிட்டது'' என்று அத்வானி எகி
க்குதித்தார். அதன் பிறகு பாராளுமன்றம்
டியபோது, பேரணிக்குத் தடைவிதித்த
தயே நாட்டின் முக்கியப் பிரச்சினை
ாக்கி பாரதீய ஜனதா எம்.பி.க்கள் ஆர்ப்
ாட்டம் செய்தனர். பட்ஜெட் கூட்டத்தொ
ரில் 'குடியரசுத்' தலைவர் உரையையும்,
யில்வே பட்ஜெட் உரையையும் புறக்க
ரித்து கோஷமிட்டனர். பின்னர், பேரணிக்
த் தடைவிதித்ததை விவாதிக்கக்கோரி
ாரதீய ஜனதா எம்.பி.க்கள் நடத்திய அரா
கத்தின் காரணமாக மக்களவை 4 முறை
ம், மாநிலங்களவை 3 முறையும் ஒத்தி
வைக்கப்பட்டு நாடாளுமன்றம் இரு நாட்க
ளுக்குச் செயல்பட முடியாமல் முடங்கிப்
பானது.

பேரணி நடக்கவிருந்த போட்கிளப்
மைதானத்தை போலீசு மற்றும் துணை
ராணுவப் படைகளைக் கொண்டு முற்றுகை
யிட்டும், நாடாளுமன்றத்தைச் சுற்றி தடுப்பு
அரண் அமைத்தும், 24-ந் தேதியன்று
காலையே போக்குவரத்தை முற்றாக நிறுத்
தியும், பள்ளி - கல்லூரிகளுக்கு விடுமுறை
அறிவித்தும், அறிவிக்கப்படாத ''பந்த்''
போல அன்றாட வாழ்க்கையை ராவ் அரசு
முடக்கியபோதிலும், அதையும் மீறிக்
கொண்டு இந்து வெறியர்கள் ஆர்ப்பாட்டம்
செய்து ஊர்வலம் நடத்த முற்பட்டனர்.

ஊர்வலத்தை முன்னேற விடாமல்
கண்ணீர் புகை வீசி, தண்ணீரைப் பீய்ச்சிய
டித்தபோது, கூட்ட நெரிசலில் சிக்கி கீழே
விழுந்த பாரதீய ஜனதா தலைவர்
ஜோஷிக்கு சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்
டது. உடனே, ''ஜோஷி உயிருக்கு ஆபத்து!
தடியடியில் அவர் மண்டை பிளந்துவிட்
டது! டெல்லி போலீசுக் கமிஷனரை பதவி
யிலிருந்து நீக்கு''! என்று இந்து வெறியர்
கள் பீதியும் வதந்தியும் கிளப்பி பிரச்சாரம்
செய்து அடுத்த நாளே பல மாநிலங்களில்
கண்டனப் பேரணிகள் நடத்தினர். போலீசா
ரின் 'அத்துமீறலை' எதிர்த்து நாடாளுமன்
றத்தில் மீண்டும் அராஜகம் செய்த பாரதீய
ஜனதா எம்.பி.க்கள், குடியரசுத் தலைவரி
டம் இது பற்றி நீதி விசாரணை நடத்துமாறு
மனுக் கொடுத்தனர்.

மொத்தத்தில், இந்து வெறியர்கள் இப்
பேரணி மூலம் எதைச் சாதிக்க நினைத்தார்
களோ, அதில் வெற்றியே பெற்றுள்ளனர்.
''நம்மை எதிர்க்கும் துணிவு யாருக்கும்
இல்லை; நாடு முழுவதும் இந்துத்துவ
அலை வீசுகிறது'' என்கிற திமிரோடு இந்து
வெறி பாசிஸ்டுகள் கொக்கரித்து வருகின்ற
னர். அவர்களோடு கள்ளக் கூட்டு சேர்ந்
துள்ள காங்கிரசுத் துரோகிகளோ,
''அயோத்தி சம்பவத்துக்குப் பிறகு பாரதீய
ஜனதாவை நம்ப முடியாது; எனவேதான்
பேரணியைத் தடைசெய்தோம்'' என்று
நியாயவாதங்களைப் பேசுகின்றனர்.
ஆனால் அயோத்தியில் இந்துவெறியர்கள்
மசூதியை இடிக்கப் போவதைப் பற்றி
அறிந்திருந்த போதிலும், தற்போது பேரணி
யைத் தடுக்க எடுத்த நடவடிக்கையில் மயிர
ளவுகூட ராவ் அரசு எடுக்கவில்லை. ஏனெ
னில் அது இந்து வெறியர்களின் மதவெறிப்
பாசிச நடவடிக்கை. அதைத் தடுத்தால்
இந்து ஓட்டுக்களை காங்கிரசு இழக்க நேரி
டும். ஆனால் தற்போதைய பேரணியோ
காங்கிரசு எதிர்ப்பு அரசியல் நடவடிக்கை.
அதனால்தான் அதை காங்கிரசு அரசு தடை
செய்துள்ளது. மற்றபடி, மதவெறிப் பாசிசக்
கோரிக்கைகளுடன் இந்து வெறியர்கள்
பேரணி நடத்தினால் அதை ஒரு போதும்
காங்கிரசு அரசு தடுக்காது என்பதையே,
அண்மையில் அசாமில் நடந்த பேரணியும்,
தமிழகத்தில் கோவையில் நடந்த மாநாடும்
நிரூபிக்கின்றன. தற்போதைய டெல்லி
பேரணி தடுப்பு நடவடிக்கைகூட, நிர்வாக
ரீதியிலான ஒரு ''பந்த்'' போன்றதுதானே
தவிர, இந்து வெறியர்களை அரசியல், சித்
தாந்த, அமைப்பு ரீதியாக எதிர்த்து முறிய
டிக்கும் துணிவோ, ஆற்றலோ காங்கிரசி
டம் அறவே இல்லை.

> இந்துவெறியர்களின் தற்போதைய பேரணி, முற்றிலும் காங்கிரசு எதிர்ப்பு அரசியல் போராட்டமாக, இருந்ததால்தான் இதைத் தடுக்க கவனம் செலுத்தியது காங்கிரசு.

மறுபுறம், மதச்சார்பற்றவர்களாகப்
பீற்றிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்
யூனிஸ்டுகளோ, இந்துவெறியர்களை
எதிர்க்கத் துணியாமல், ராவ் அரசின் புதிய
பொருளாதாரக்' கொள்கையை எதிர்த்து
இயக்கம் நடத்திக் கொண்டு வேறுதிசையில்
ஒதுங்கிப் போகின்றனர். தேசிய முன்ன
ணிக் கட்சிகளோ மண்டல் ஆதரவு இயக்
கங்களை நடத்திக் கொண்டிருக்கின்றன.
வி.பி.சிங்கோ இப்பேரணியை தடைசெய்
வதில் தனக்கு உடன்பாடில்லை என்றும்
அறிக்கை விட்டார். இவையாவும்
எதிர்ப்பே இல்லாமல் இந்து வெறி பாசிஸ்டு
கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான
வாய்ப்பையே விரிவுபடுத்தியுள்ளன. இந்
நிலையில், நாட்டையும் மக்களையும் கவ்வி
யுள்ள இந்துவெறி பாசிச அபாயத்துக்கு
எதிராக போர்க்குணமிக்க மதச்சார்பற்ற
ஜனநாயக சக்திகள் விரைவில் ஒன்றுபட
வேண்டும். இட்லரின் ஜெர்மனியாக இந்
தியா மாற்றப்படுமுன்னே, இந்துவெறி
பாசிஸ்டுகளை முறியடித்து நிர்மூலமாக்க
வேண்டும்

● மனோகரன்

படிப்பகம்

www.padippakam.com

# பினாமி நிலமோசடியில் பிரதமர் குடும்பம்

**நரசிம்மராவின் குடும்பம், 18 ஆண்டுகாலமாக தமது பினாமி நிலத்தை விற்றதாக சாதித்து வரும் வழக்கு விசாரணைக்கு வந்ததும் அதை முறியடிக்க முனைகிறது.**

நிலஉச்சவரம்பு சட்டத்தின் இண்டு இடுக்குகளைப் பயன்படுத்தியும் நிர்வாக எந்திரம், நிதித்துறை மீது செல்வாக்கு செலுத்தியும் பிரதமர் நரசிம்மராவின் குடும்பம் 18 ஆண்டுகாலமாக தமது பினாமி நிலத்தை ''விற்றதாக'' சாதித்து வருகிறது. தெலுங்கு தேச கட்சியின் அரசாங்கம் தொடுத்த உச்ச நீதி மன்ற வழக்கு இப்போது விசாரணைக்கு வந்துள்ளது. இதனையும் முறியடித்து அப்பழுக்கற்ற குடும்பம் என காட்டிக் கொள்ள அது முனைந்து வருகிறது. அதே சமயம் இந்த நிலப்பிரச்சினை இந்திய சட்டத்துறையின் சிவப்பு நாடா முறைக்கும் சிறந்த எடுத்தக்காட்டாக விளங்குகிறது.

பிரதமர் நரசிம்மராவின் சொந்த ஊர் ஆந்திர மாநிலத்தின் கரீம் நகர் மாவட்டத்தைச் சேர்ந்த வெங்காரா கிராமம் நான்கு தலைமுறைகளாகவே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்துகொண்டுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர் தான் பிரதமர் நிரசிம்மராவ். 1975-இல் இவரிடமும் இவரது 3 மகன்களிடமும் இருந்த நிலவுடமை என அவர்களே கணக்கு காட்டியது 1169.28 ஏக்கர்கள் ஆகும். இதுகூட இவர்கள் ஏற்கனவே விற்றுவிட்டதாகக் கோரிக் கொள்ளும் 192.56 ஏக்கர் சேர்க்கப்படாத அளவாகும். அரசிடம் ஒப்படைத்த 941 ஏக்கர் போக தற்போது இவர்களது சொந்த உடைமை எனக் காட்டிக் கொள்வது 127.28 ஏக்கர். இதிலும் கூட 90 ஏக்கர் நிலத்தை பயிரிடாமல் போட்டு இருக்கிறார்கள். 1991 ஜூலையில் ஆந்திர மக்கள் யுத்த குழு ''இந்த நிலங்களை மக்கள் எடுத்துக்கொள்ளுவார்கள்'' என அறிவித்தது முதல் மிகப்பெரிய போலீஸ் முகாம் ஒன்று இந்த நிலங்களையும் பரம்பரை வீட்டையும் வெங்காராவில் பாதுகாத்துவருகிறது.

**நரசிம்மராவின் பங்களாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள்: தொலைத்தொடர்பு கருவி, துப்பாக்கிகள்.**



நில உச்சவரம்பு சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருப்பது சொல்லிக்கொள்வதுபோல இந்தியாவின் கோடிக்கணக்கான விவசாயிகளுக்காக அல்ல. நவீன தொழில்கள் - வியாபாரம் போன்ற விவசாய உற்பத்தியும் முதலீட்டு இலாபத்திற்காக கையாளப்படும் துறையாக மாற்றப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் காலங்காலமாக உள்ள, உற்பத்தித்திறன் குறைந்த முறைகளுக்கு பதிலாக நவீன விவசாய முறைகளை புகுத்துவதற்காகும். விவசாயத்துறையில் அரசு உத்தேசிக்கும், புகுத்தி வரும் மாற்றங்கள் யாவும் நிலப்பிரபுக்களின் நிலக்குவிதலும் அந்தஸ்தும், அதிகாரமும் கௌரவமும் சலுகைகளும் உரிமைகளும் பாதிக்காத வகையில் செய்யப்படுகின்றன.

1947 அதிகார மாற்றத்தை அடுத்து, ஒவ்வொரு ஐந்தாண்டு திட்டத்திலும் நில உச்ச வரம்புக்கான நடவடிக்கைகள் பெருமையாகவும் தடபுடலாகவும் பேசப்பட்டன. பரிந்துரை கமிட்டிகள் அமைக்கப்பட்டன. ஆனாலும் பல மாநிலங்களிலும் உபரிநிலமே இல்லை என்னும் அளவு வரம்புகள் உயர்ந்தும் விதிவிலக்குகள் பெருத்தும் இருந்தன. 2, 3 ஐந்தாண்டு திட்டங்களின் முன்னுரைகள் உபரி நிலம் கைப்பற்றப்படாததை ஒப்புக்கொண்டன. 1972 மாநில முதல்வர்கள் மாநாடு நில உச்சவரம்புக்கான மேலும் வழிகாட்டுதல்களை அளித்தது. இவையும் நிலப்பிரபுக்கள் நில உச்ச வரம்பை மீறி உபரி நிலங்களை பினாமியாக, வைத்திருக்க பல வழிவகைகளை கொண்டவையே.

நிலஉச்சவரம்பு சட்டம் அமுலாவதற்கு முற்பட்ட காலத்திலேயே விற்கப்பட்டதாக நன் கொடையாக தரப்பட்டதாகக் கூறுவது, தமது வேலையாட்கள் பெயரில் எழுதி வைத்திருப்பது தமது ஊரில் இருந்து வெளியேறியவர்கள், இறந்தவர்களை உடைமையாளர்களாக காட்டியிருப்பது, போலியான பெயர்களில் நிலம் எழுதி வைத்திருப்பது என்ற முறைகளை நிலப்பிரபுக்கள் மேற்கொள்கின்றனர். நிலச்சீர்திருத்த மன்றங்கள் தீர்ப்புகளை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்து இழுத்தடிக்கின்றனர். நீதி மன்ற விசாரனைகளிலிருந்து விலக்களிக்கும் அரசியல் சட்டத்தின் 9-வது பிரிவில் நிலச்சீர்திருத்த சட்டத்தை சேர்ப்பதற்கு மத்திய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. நரசிம்ராவ் குடும்பம் இந்த உத்திகளை பின்பற்றித்தான் தனது பினாமி உடைமையை மறைத்து வருகிறது. போலீசு முகாமும் இந்த நிலங்களையும் வீட்டையும் வெங்காராவில் பாதுகாத்துவருகிறது. 1971-73ல் ஆந்திர முதல்வராக, நரசிம்மராவ் இருந்த போது தான், ஆந்திர பிரதேச நில உச்சவரம்புச் சட்டம், கொண்டுவரப்பட்டது. இதன் சில மாதங்களிலேயே நரசிம்மராவ் அரசை இந்திராகாந்தி உட்கட்சி நிலைமைகளால் கலைத்து ஜனாதிபதி ஆட்சியை நிறுவினார். இதன்பின் அகில இந்திய அரசியல் அரங்குக்கு ராவ் எடுத்துக்கொள்ளப்பட்டார்.

1975-ல் நரசிம்மராவ் மற்றும் 3 மகன்களுட் தனித்தனியே நிலவுடமை அறிவிப்புகளை அரசிடம் ஒப்படத்ததனர்.

1977-79ல் நிலச்சீர்த்திருத்த நடுவர் மன்றம் ராவ் குடும்பத்திடம் முறையே 532, 17, 26, 532 ஏக்கர்கள் இருப்பதாக அறிவித்தது. இது அக்குடும்பம் ஏற்கனவே விற்றதாக சொல்லிக்கொண்ட நிலத்



படிப்பகம்

www.padippakam.com





...ரசிம்மராவின் வயலில் வேலைசெய்த விவசாயிகள்; கீழே, போலீசின் நடவடிக்கையில் பாதிக்கப்பட்டோர்.

...தயும் உள்ளடக்கியதாகும். அதாவது நடுவர் மன்றம் இந்த விற்ப...னையை ஏற்றுக்கொள்ள வில்லை.

நிலவற்பனையை ஏற்க வேண்டும் என்று மீண்டும் முறையீடு ...செய்தும் நடுவர் மன்றம் ஏற்கவில்லை. ராவ் குடும்பம் உயர்நீதிமன்...றத்திற்கு சென்றது. அங்கிருந்து மே 79-ல் மேல் முறையீட்டு நடுவர் ...மன்றத்திற்கும், அங்கிருந்து மீண்டும் நிலச் சீர்த்திருத்த நடுவர் மன்...றத்திற்கும் புதிய சில ''வழிகாட்டுதல்களுடன்'' வழக்கு திருப்பப்பட்...டது.

1981, செப்டம்பர் 5-ல் நிலச்சீர்த்திருத்த நடுவர் மன்றம், முதல் ...முறையாக தனித்தனி உடைமை என ஏற்காமல் இந்து கூட்டுக் ...குடும்பமாகவே ராவ் குடும்பத்தை கருத முடியும் என்று தீர்ப்பு ...அளித்தது ஆனால் இன்னொருபக்கம், சொல்லிக்கொள்ளப்பட்ட ...நிலவிற்பனையை, நிலஉச்சவரம்பு சட்டத்தின் காலத்திலேயே செய்...யப்பட்டு இருந்தும், விற்பனைக்கான வலுவான ஆதாரங்கள் இல்...லாமலேயே, உண்மையானது, சரியானது என்று ஏற்றுக்கொள்ள...வும் செய்தது. உச்ச வரம்புக்கு உட்படாத உபரி நிலங்களிலிருந்து ...இந்த ''விற்பனை செய்யப்பட்ட'' நிலத்தை (192.56 ஏக்கரை) கழித்...துக் கொள்ள ஏற்றுக் கொண்டது.

இத்தீர்ப்பை எதிர்த்து ஆந்திரப் பிரதேசத்தில் அன்று ஆட்சி ...செய்த தெலுங்கு தேச அரசு மேல்முறையீட்டு நடுவர் மன்றத்துக்கு ...மேல்முறையீடு செய்தது. இந்த மேல்முறையீடு, உரியகாலத்தில் ...செய்யப்படாமல், இரண்டு நாட்கள் காலதாமதமானதால் நிராகரிக்...கப்பட்டது. நடுவர்மன்றத்தின் தீர்ப்பு செப் 17 அன்று தான் அரசிற்கு ...அளிக்கப்பட்டிருந்தது என்றும் இந்த குறிப்பிட்ட கோப்பு ஒரு மாத...க எங்கோ தவறி வைக்கப்பட்டு பின்னர் தேடி எடுக்கப்பட்டது ...என்றும் அரசு விளக்கம் அளித்தது. இந்த விளக்கத்தையோ, இவ்வ...ளவு அதிகமான நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்றோ பாராமல் ...அற்ப காரணத்தை வைத்து நடுவர் மன்றம் அரசின் மேல் முறை...யீட்டை நிராகரித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் 1982-மே மாதம் ஆந்திர அரசு வழக்கு தொடுத்தது. இருவருடங்கள் கழித்து 1984 நவம்பரில் அரசின் முறையீடு உயர்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

மீண்டும் 1985-ல் 59 நாட்கள் காலதாமதமாக, ஆந்திர பிரதேச அரசு சிறப்பு மேல்முறையீட்டை உச்சநீதிமன்றத்தில் தொடுத்தது. இது 8 வருடங்களுக்கு கிடப்பில் போடப்பட்டது.

1993-ல் ஜனவரி 28-ல் உச்சநீதிமன்றம் எடுத்துக்கொண்டு தாமே விசாரிப்பதாக அறிவித்து உரிய ஆவணங்களை கோரியது. இரு தரப்பு வக்கீல்களும் தருவதாகவாக்குறுதி அளித்தனர்.

உச்சநீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் இவ்வழக்கு எப்படி நடத்தப்படும், என்ன தீர்ப்பு அளிக்கப்படும் என்பது எவராலும் கணிக்க கூடியதே.

பிரிதிவாதிகளில் முதலாமவர் நாட்டின் பிரதமர். பிரதமரின் மூத்தமகன் ரங்காராவ் ஆந்திராவின் அமைச்சர்களில் ஒருவர். இன்னும் இருமகன்களும் பெரும் செல்வந்தர்கள். இவர்களுக்கு வாதிடுபவர்களில் பராசரன் இந்திய அரசின் முன்னாள் தலைமை வக்கீல்.

பிப்ரவரி 2-ம் தேதி உச்சநீதி மன்றத்தில் ஆந்திர அரசு சார்பாக வாதாடும் வக்கீல் சாரி என்பவர், 192.56 ஏக்கர் நிலங்கள் அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கான ஆதாரங்கள் எதையும் முன்னைக்கவில்லை தனது பக்கம் தோற்கவேண்டும் என்பதுதான் அவரது நோக்கமாக தெரிகிறது. நீதிபதிகள் குழுவிடம் முதலில் இருவாரங்கள் அவகாசம் கேட்ட அவர் பின்னர் கீழ் மட்டத்திலான உள்ளூர் நிலச்சீர்திருத்த நடுவர் மன்றத்திற்கு வழக்கை அனுப்ப இசைந்தார்.

பிரதமர் குடும்பத்திற்காக வாதாடும் வக்கீலும், முன்னரே நிலத்தை விற்றதற்கான ஆதாரங்கள் ஏதும் தரவில்லை. நிலவிற்பனை பதிவு செய்யப்படாததற்கு, தெலுங்கானா வட்டாரத்தில் அன்று அவ்வாறுதான் செய்யப்பட்டுவந்ததாகக் கூறினார். நிலப்பிரபுகளின் நிலங்களை பினாமியாக ஆக்கிவைத்துக் கொண்டிருந்தனர் என்பதுதான் இதற்குக்காரணம். மாற்றத்திற்கு உரிய கட்டனத்தை காட்டி பின்னர் பதிவு செய்யலாம் என்று கூறினார் பராசரன். அதாவது முன்கூட்டி தேதிபோடவே இந்த ஏற்பாடு. ''தில்லுமுல்லுகள் ஏதும் செய்யப்படவில்லை, சொத்து மாற்றங்களை சரியானது தான் என்று நிருபிப்போம்'' என்றார் பராசரன்.

''தில்லுமுல்லுகள் ஏதும் நடக்கவில்லை என நாம் அறிவோம். ஆனால் உடைமை மாற்றங்களின் உண்மையானது தான் என்பதை நிருபிப்பது உங்கள் அக்கறையை பொருத்ததாகும்'' என்றார் நீதிபதி குப்தீப்சிங்.

தற்போது மூன்றாவது முறையாக கரீம்நகரில் உள்ள நிலச்சீர்த்திருத்த நடுவர் மன்றத்திற்கு வழக்கு தள்ளிவிடப்பட்டுள்ளது. அதற்கு நான்கு மாத அவகாசமும், இதன் தீர்ப்பின் மீது மேல்முறையீடு இருக்குமானால், உயர்நீதி மன்றத்திற்கு இருமாத அவகாசமும் அளித்துள்ளது.

'புதிய ஜனநாயகம்' பற்றிய அறிக்கை
4-வது படிவம் (8-ம் பிரிவுப்படி)

| | |
|---|---|
| 1. வெளியிடும் இடம் | சென்னை |
| 2. வெளியிடும் காலம் | மாதம் இருமுறை |
| 3. அச்சிடுபவர் | எழில் பிரிண்டர்ஸ் |
| தேசிய இனம் | தமிழர் |
| முகவரி | 321, ஆற்காட் ரோடு, கோடம்பாக்கம் சென்னை - 600 024 |
| 4. வெளியிடுபவர் | இரா. சண்முக ராச |
| தேசிய இனம் | தமிழர் |
| முகவரி | 4, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015 |
| 5. ஆசிரியர் | இரா. சண்முக ராச |
| தேசிய இனம் | தமிழர் |
| முகவரி | 4, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015 |
| 6. உரிமையாளர் | இரா. சண்முகராச |
| தேசிய இனம் | தமிழர் |
| முகவரி | 4, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. |

இரா. சண்முக ராச நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒப்பம்) இரா. சண்முகராச
வெளியிடுபவர்

10-3-93

படிப்பகம்

www.padippakam.com

# கூலி விவசாயிகளின் போர்! ஜமீன் கும்பலின் தாக்குதல்!

மதுரை - போடி நகரம் செழிப்பாக விளங்குவதற்கு அங்குள்ள பல்லாயிரக்கணக்கான கூலி, ஏழை விவசாயிகளின் கடும் உழைப்பே காரணம். ஆனால் இந்த உழைப்பாளிகளுக்குக் கூலியோ மிகக் குறைவு. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு வாரம், குத்தகை என்ற பெயரில் விவசாயிகளை ஒட்டச்சுரண்டி வருகிறது, அந்நகரில் உள்ள ராணிமங்கம்மாளின் வாரிசுகளான அரண்மனை ஜமீன்தார் கும்பல். கூலியை உயர்த்திக் கேட்டு கடந்த 8-1-93 அன்று கூலி விவசாயிகள் சங்கமும் விவசாயிகள் விடுதலை முன்னணியும் இணைந்து ஊர்வலம் நடத்தின. மனுக்கள், பல்வேறு வகைப் பிரச்சாரங்கள் வழியாக தமது கோரிக்கையை வலியுறுத்தி வந்தும் எவ்வித பயனும் இல்லை.

தற்போது சுறுசுறுப்பாக அறுவடை நடக்கும் நேரமாகியதால் கூலி உயர்வு போராட்டத்தை அவ்வமைப்புகள் முன்னெடுத்தன. 28-1-93 அன்று அரண்மனையாரின் ஆலடி களத்திற்குச் சென்று கூலியை பெரிய மரக்காலில் அளந்து போடும்படி கேட்டனர். ஆனால் அங்கிருந்தவர்கள் அரண்மனையாரை கேட்டுத்தான் செய்ய முடியும் என்று கூறவே, சரி அவர் வந்து முடிவு செய்யும்வரை கூலியை அளக்கக்கூடாது என தடுத்து குவிந்திருந்த நெல்லில் இருதரப்பிலும் அம்பாரம் போட்டு வைக்கப்பட்டது. அங்கு விவசாயிகள் சங்கத்தின் கொடியும் அடையாளமாக நட்டுவைக்கப்பட்டது.

மறுநாள் கூலி விவசாயிகள் சங்கமும், வி.வி.மு.வும் பெரிய மரக்காலில் கூலிபோட சம்மதிக்கும்வரை வேலை நிறுத்தம் செய்யக் கோரின. இதில் ஆயிரக்கணக்கா கூலி விவசாயிகள் பங்கெடுத்துக் கொண்டனர். பாட்டைக்களம் என்ற இடத்தில் மாற்று ஆட்களை வைத்து கதிரறுப்பு வேலைகள் நடப்பதை அறிந்து விவசாயிகள் அங்கு சென்று வேலை செய்த கூலி விவசாயிகளுக்கு பெரிய மரக்காலில் நியாயமான கூலியை அளந்து போட கோரிக்கை விடுத்தனர். விவசாயிகளின் ஒற்றுமையான போராட்டத்தை உடைக்க நரித்தனமான நடவடிக்கையில் இறங்கியது அரண்மனைக் கும்பல். அமைதியாக கோரிக்கை வைத்து போராடிக் கொண்டிருந்த விவசாயிகள் மீது அரண்மனையின் எடுபிடி ஆட்கள் வீர விஜயன் தலைமையில் வந்து மிருகத்தனமான தாக்குதல் நடத்தினர். வி.வி.மு.வின் தேனி வட்டார அமைப்பாளர் செல்வராசுவைப் படுகாயப்படுத்தினர். எவ்வித விசாரணையுமின்றி குரங்கணி போலீசு ஜமீன்தார் கும்பலுக்கு சாதகமாக வாலாட்டி செல்வராசுவை கைது செய்து, 15 பேர் மீது வழக்கு போட்டுள்ளது. ''வெற்றியை சாதிக்காமல் ஓயப் போவதில்லை'' என்று கூறி வி.வி.மு.வினர் தொடர்ந்து போராடிவருகிறார்கள்.

### அடக்குமுறையை மீறி தொடரும் இயக்கங்கள்.

பார்ப்பன - இந்து மதவெறியின் ஆதிக்கச் சின்னமான ராமனின் படம், ஊர்வலமாக முழக்கமிட்டு எடுத்துச் சென்று நல்லம்பள்ளியில் 22-12-92 அன்று எரிக்கப்பட்டது. அடுத்தநாள் இவ்வியக்கத்தை நடத்திய மக்கள் கலை இலக்கிய கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, வி.வி.மு. ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த செல்வராஜ், வீரமணி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். முனிராஜ், கதிரவன் ஆகியோரை போலீசு கைது செய்ய தேடி அலைந்தது. பின்னர் அனைவரும் ஜாமின், முன்ஜாமின் மூலம் வெளிவந்து போடபட்ட பொய்வழக்கை நீதிமன்றத்தில் எதிர்த்து முறியடித்து வருகின்றனர்.

ஜனவரி 26-அன்று வி.வி.மு வைச் சேர்ந்த மனோகரன், வெங்கடேசன், காவேரி ஆகியோர் வீட்டிற்குச் சென்று தூங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பி கைது செய்து கொண்டு போன ஒகேனக்கல் போலீசு, காவேரி காட்டில் நாட்டை கவிழ்க்க சதிசெய்ததாக வழக்கு தொடுத்தது. இவ்வழக்கிலும் வி.வி.மு.க்காரர்கள் ஜாமீனில் வெளிவந்து போலீசை அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்தனர்!



நல்லம்பள்ளியில் பு.மா.இ.மு.-வினர் பொதுக்கூட்டம் நடத்த பலமுறை அனுமதி கேட்டும் போலீசு தொடர்ந்து மறுத்து வருகிறது. தர்மபுரியில் புரட்சிகர அமைப்புகள் கட்டும் தட்டிகளை போலீசு திருடிச் சென்றுவிடுகிறது. ஒட்டும் சுவரொட்டிகளை கழுதையாக மாறி கிழிக்கிறது. முற்போக்கு இளைஞர் அணியைச் சேர்ந்த குமார், ஜனகராஜ், கிருஷ்ணன் ஆகியோர் சுவரொட்டி ஒட்டியதற்காக கைது செய்யப்பட்டு, தேசத்துரோக சட்டத்தின் கீழ் 124 (A) வழக்கு போடபட்டுள்ளார்கள்.

தர்மபுரியில் வளர்ந்து வரும் புரட்சிகர அமைப்புகளைக் கண்டு ஆளும் வர்க்கம் பீதியடைந்துள்ளது என்பதையே மேற்கண்ட போலீசின் அடக்குமுறைகள் காட்டுகின்றன. எனினும் போலீசின் அடக்குமுறைகளை மீறி புரட்சியாளர்கள் செல்வாக்கு பெற்று வருகிறார்கள். பென்னாகரம் வி.வி.மு-வினர் காவேரி என்பவர் தலைமையில் 14-2-93 அன்று அரிசி, கோதுமை விலையுயர்வைக் கண்டித்து சைக்கிள் பேரணி நடத்தினர். 22 கிராமங்களில் பிரச்சாரம் செய்தனர். மக்கள் பரவலாக வரவேற்றதோட கூழ், கஞ்சி, மதிய உணவு எல்லாம் பரிமாறி உற்சாகப்படுத்தி ஆதரித்தனர். ஆட்சியாளர்கள், ஓட்டுக்கட்சிகள் மீதான தமது வெறுப்பை வெளிப்படுத்தி வி.வி.மு-வின் செயல்பாட்டை சரியென அங்கீகரித்தனர்.

### விலைவாசியைக் கண்டித்து பெண்கள் ஆர்ப்பாட்டம்

ரேசன் பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்து திருச்சியில் 11-2-93 அன்று தெப்பக்குளம் அஞ்சலகம் முன்பு ''பெண்கள் விடுதலை முன்னணி''யைச் சேர்ந்தவர்கள் சுமார் 35 பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். வாணி என்பவர் தலைமை தாங்க சுதந்திரா என்பவர் உரை நிகழ்த்தினார். பள்ளி, கல்லூரி விட்டு வந்த மாணவிகள் பெரும்பாலோர் ஆர்ப்பாட்டத்தைக்கண்டு வரவேற்றனர். பார்வையாளர்கள் சிலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ''இந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்பதா? கைதுசெய்!''

அண்மையில் விடுதலைப் புலிகளின் 'அகத்'கப்பல் அழிவிற்கும் கிட்டுவின் மரணத்திற்கும் இந்திய அரசு சர்வதேசக் கடல் பரப்பில் அத்துமீறி நுழைந்து எடுத்த நடவடிக்கையே காரணம். இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க வெறியைக் கண்டித்து வேதாரண்யத்தில் பு.ஜ.வாசகர் வட்டத்தைச் சேர்ந்தவர்கள் சுவரொட்டி ஒட்டினர். இரண்டு நாள் கழித்து 27-1-93 அன்று வி.வி.மு-

www.padippakam.com

வைப் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரை தேடிபிடித்து சட்ட விரோத (தடுப்பு) நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் போலீசு கைதுசெய்தது. கிருஷ்ணமூர்த்தி திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார்.

இச்சட்டத்தின் கீழ் 'சூப்பிரண்டன்ட்' அளவில் உள்ள போலீசு அதிகாரிகளே வழக்கு பதிவு செய்யமுடியும். ஆனால் இதில் ஒரு எஸ்.ஐ. வழக்குப் பதிவு செய்திருந்ததை சுட்டிக்காட்டி செல்லாது என வழக்கு மன்றத்தில் வாதிட்டு, பிணையில் விடுதலையானார் கிருஷ்ணமூர்த்தி.

விலைவாசி எதிர்ப்பு
இந்துவெறி எதிர்ப்பு
பிரச்சாரங்கள் - பொதுக்கூட்டங்கள்

உத்தமபாளையம் வட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வைக் கண்டித்து பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கிடைக்காததால் சுவரொட்டி, தெருமுனைக் கூட்டம் வாயிலாக வி.வி.மு. இயக்கமெடுத்தது. கம்பம், கே.கே.பட்டி, நாராயண தேவன் பட்டி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப் பட்ட தெருமுனைக் கூட்டங்களில் பெண்கள் திரளாக வந்து கலந்து கொண்டு 'ஜெ' அரசின் மீதுள்ள வெறுப்பைத் தெரிவித்தனர்.

கேரளா-வண்டிப்பெரியாரில் 21-2-93 அன்று பீர்மேடு தாலுக்கா வி.வி.மு. சார்பாக இந்துமதவெறி எதிர்ப்பு பொதக்கூட்டம் நடந்தது. வி.வி.மு-வைச் சேர்ந்த செல்வராஜ், தனம், ம.க.இ.க.வைச் சேர்ந்த முகுந்தன் ஆகியோர் பல்வேறு கருத்துக்களை விளக்கி உரையாற்றினர். கலை நிகழ்ச்சியும் சிறப்பாக நடந்தது. ஆர்.எஸ்.எஸ்-ன் கிளையான பாரதீய மஸ்தூர் சங்கத்தின் அட்டூழியம் நிறைந்த இப்பகுதியில் இந்துமதவெறியை துணிச்சலாக எதிர்த்து நடந்த முதல் பொதுக்கூட்டம் இதுவாக இருப்பதால் பகுதிமக்கள் பெரிதும் வரவேற்று 1000 பேர் அளவில் திரண்டனர். போலிக் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளால் நம்பிக்கையிழந்து கிடந்த தொழிலாளர்களுக்கு - பகுதிமக்களுக்கு இக்கூட்டம் புரட்சிகர அரசியலில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

புள்ளம்பாடி ஒன்றியம் பெருவளப்பூரில் 20-2-93 அன்று வி.வி.மு. சார்பாக ''இந்து மதவெறி பாசிச அபாயம்'' என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடந்தது. ம.க.இ.க-வைச் சேர்ந்த தமிழ்மணி, காளியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். பகுதி அமைப்பாளர் மணி என்பவர் தலைமை தாங்கினார். இறுதியில் ''அசுரகானம்'' என்ற கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. 600-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மக்கள் திரண்டு ஆதரவளித்தனர்.

# சவடால்கள்

ஒருவேளை நான் அதில் (காங்கிரசில்) சேருவதாக இருந்தால் அக்கட்சி தனது போக்கையும் கொள்கைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும். இப்போதைய காங்கிரசார் யாரையும் என்னுடன் ஒப்பிடக்கூட முடியாது. நான் பிரதமராக என்றுமே நினைத்து செயல்பட்டது கிடையாது.

-முன்னாள் பிரதமர் சந்திரசேகர்

காங்., திராவிடக்கட்சிகள் மீது மாறிமாறி சவாரி செய்கிறது என்று அ.தி.மு.க. மந்திரிகள் கூறுகிறார்கள். இதை எங்களுக்கு கற்றுக் கொடுத்தது நீங்கள்தானே? நீங்கள் முதுகை கொடுத்ததினால்தான் நாங்கள் சவாரி செய்கிறோம்.

-காமராசர் மாவட்ட காங். ஊழியர் கூட்டத்தில் வாழப்பாடி ராமமூர்த்தி.

அரசு மானியங்களையும் வரி விலக்குகளையும் ஒழிக்க வேண்டும். நஷ்டத்தில் ஓடும் பொதுத்துறை நிறுவனங்களை இழுத்து மூடிவிட வேண்டும். இதனால் நமது உற்பத்தி செலவு குறையும். அதே சமயம் சில பிரிவினர் பாதிக்கப்படத்தான் செய்வார்கள். அதற்காக நாம் என்ன செய்ய முடியும்?

-தேசிய பொது நிதி, கொள்கை நிறுவனத்தின் சேர்மேனும்
வரிவிதிப்பு சீர்திருத்தக் கமிட்டி தலைவருமான ராஜா செல்லையா.

தி.மு.க.வுக்கு சட்டசபையில் 2 இடம்தான். அதற்காக மக்களிடம் அவர்களுக்கு செல்வாக்கு இல்லை என்பதல்ல. அது போலத்தான் பா.ஜ.க.வும்.

-கோவிந்தார்ச்சார்யா.

ஜெயலலிதா நிலையான சிந்தனை உடையவரல்ல என்று ராஜீவ் கருதினார். அது சரிதான் என்பதை கடந்த ஒன்றரை ஆண்டுகளில் நடந்த சம்பவங்கள் நிரூபித்துவிட்டன.

-14.2.93 அன்று சு.சாமி பேட்டி

சாமி உயர்ந்த நிலை அரசியல் நடத்துபவர். அவரது அரசியல் பற்றிக் கருத்துக்கூற முடியாது. சில சமயங்களில் சாமி பேசுகிறாரா அல்லது பிரதமர் பேசுகிறாரா என்று வித்தியாசப்படுத்த முடியவில்லை.

-சென்னையில் நிருபர்களிடம் வி.பி.சிங்

மத்திய அரசு அயோத்தி ராமர் கோயில் தரிசனத்திற்கு அனுமதித்திருப்பது கோயில் கட்டமானப் பணிக்குரிய (எங்கள்) இயக்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

-பா.ஜ.க. பொதுச் செயலாளர் ப்ரோமத் மஹாஜன்

காங்கிரசு ஒரு மேடை. அங்கு நல்லவர்கள் சிலர் கெட்டவர்கள் சிலர், மதச்சார்பற்றவர்கள் சிலர், மதச் சார்புடையவர்கள் சிலர் இருக்கிறார்கள்.

-''மார்க்சிஸ்டு'' முதல்வர் ஜோதிபாசு.

மத்தியில் இந்து ஆதரவு அரசு (பா.ஜ.க. அரசு) நமக்கு இல்லையெனில் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது சாத்தியாக வாய்ப்பில்லை.

-தடைசெய்யப்பட்ட விசுவ இந்துபரிசத் தலைவர் மஹந்த் அவைத்யநாத்

சிவசேனாவையோ பாரதீய ஜனதாவையோ நீங்கள் தடை செய்வீர்களானால் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் உங்களை (காங்கிரசை) தடை செய்வார்கள்

-'த எக்னாமிக் டைம்ஸ்' பத்திரிக்கையில்
பால்தாக்கரே

நான் இந்துத்துவத்தை முற்றிலும் எதிர்ப்பவனாக இருக்கத் தேவையில்லை. நான் இந்துத்துவத்தை எதிர்க்கவும் இல்லை. நான் ஒரு இந்துவாக இருப்பதை எண்ணி பெருமைபடுகிறேன்.

''த இண்டிபெண்டன்ட்'' பத்திரிக்கையில் அர்ஜீன்சிங்

(ஒவ்வொரு பிரச்சினையிலும்) புரட்சித் தலைவி என்ன கருத்துச்சொல்கிறார் என்று உலகமே கவனிக்கிறது.

-அமைச்சர் செங்கோட்டையன்.



படிப்பகம்

www.padippakam.com

# அணு உலை ஆபத்து

# காற்றும் நீரும் நஞ்சானது

பாபா அணு ஆராய்ச்சி நிலையம் - இந்தியாவின் முதல் அணுமின் நிலையம் என பெருமைப்படக் கூறப்படும் நிறுவனம்; சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்துவதிலும், உயிரினங்கள், தாவரவகையினங்களுக்கு கேடு விளைவிப்பதிலும், நாட்டில் இயங்கும் மற்ற இரண்டு அணுமின் நிலையங்களை விட, பல வருடங்களாக முதல் இடம் வகிப்பதும், 'பாபா அணுமின் நிலையம்' தான் என்ற பெருமையினையும் இந்நிறுவனத்திற்கு வழங்கலாம்.

'ஆராய்ச்சி நிலையத்தைச் சுற்றியுள்ள நிலமும், நீரும், பயிரிடப்படும் தாவரங்களும், கால்நடைகள் முதல் மனிதன் வரை பயன்படுத்த முடியாத அளவு கதிரியக்கத் தன்மை கொண்டுள்ளன' என தற்போது சுற்றுப்புறச் சூழல் ஆய்வாளர்களும், விஞ்ஞானிகளும் கருத்து தெரிவித்துள்ளனர். கடந்த பல மாதங்களாகவே, இந்த அணுமின் நிறுவனம் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தியுள்ளதை ஆதாரபூர்வமாக விளக்கி பல விஞ்ஞானக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இக்கட்டுரைகளுக்கு மறுப்பேதும் கூற இயலாத நிலையில், நிர்வாகம் தற்போதுதான் 'ஏதோ தவறு நிகழ்ந்துவிட்டது' என்ற வகையில் இவ்விபரீதத்தை ஒத்துக் கொண்டுள்ளது. ஆக நிலைமைகள், நிவாரண நடவடிக்கைகள் எவ்விதத்திலும் உடனடியாக, மிகச் சமீப ஆண்டுகாலங்களில் சரி செய்ய முடியாதவாறு கைமீறிச் சென்றுவிட்டன.

இவ்வணுமின் நிலையத்திலுள்ள 'சைரஸ்' (cirus) மற்றும் 'த்ருவா' (Druva) என்ற இரு அணு கரு உலைகளும் அடிக்கடி இயங்கமுடியாத நிலைக்கு சென்றிருப்பதுடன், இவற்றின் வெளிப்பகுதியிலுள்ள கதிரியக்கத்தை தடுப்பதற்கான பூச்சு செயலிழந்து போயிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். இதன் காரணமாக, இந்த இரண்டு அணு கரு உலைகளிலிருந்தும் 'சீசியம் - 137' எனும் ஐசோடோப்பின் (Isotope) கதிரியக்கம் வெளிவருவதாக கண்டறிந்துள்ளனர். தற்சமயம், இக்கதிரியக்கத்தின் தன்மையை மட்டும் கொண்டு, பாதிப்புகளை மதிப்பிட்டுள்ள ஆய்வாளர்கள், 'இது பாதிப்பை குறைத்து மதிப்பிடுவதாகும்' எனக் கருத்து தெரிவித்துள்ளனர். காரணம், இதனைத் தவிர்த்து வேறு பல இரசாயனப் பொருட்களின் கதிரியக்கமும் உண்டென இவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

'சைரஸ்' அணுக்கரு உலையைக் குளிர்விப்பதற்காகப் பயன்படுத்தப்படும் நீரினை, சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லும் குழாய்களில் கடந்த டிசம்பர் 91-ல் கசிவு ஏற்பட்டுள்ளது. இது சரி செய்யப்பட்டு ஜனவரியில் இயங்க ஆரம்பித்தாலும், மீண்டும் மார்ச்சில் நீர்க்கசிவு ஏற்பட்டது. இதுபோன்ற நீர்ச்கசிவுகள் 1979-லிருந்தே தொடர் நிகழ்வாக இவ்வணுமின் நிலையத்தில் ஏற்பட்டு வருகின்றன. 79-ல் ஏற்பட்ட நீர்க்கசிவு மிகப்பெரிய விபத்து என்றே ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவ்விபத்தினால், ஆயிரக்கணக்கான லிட்டர் கொள்ளளவுள்ள நீர் வெளியேறியுள்ளதுடன், இரண்டு தொழிலாளர்களின் உயிரையும் பலி கொண்டுள்ளது. ஆனால், நிர்வாகமோ இவ்விபத்தினை ஊசிமுனை அளவு கசிவுதான் எனக் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு கசிந்து வெளியேறும் நீர், இந்நிறுவன வளாகத்திலுள்ள நிலத்தடி நீரை மட்டுமல்லாது, டிராம்பே பகுதி நிலத்தடி நீர் முழுமையையும் கதிரியக்கத்தன்மை கொண்டதாக மாற்றியுள்ளது. நீர்கசிவு ஏற்படும் குழாய்களை சரி செய்வதற்கு, 'ஒப்பந்த தொழிலாளர்களை' மட்டுமே அனுமதிக்கின்றது நிர்வாகம். இதன்மூலம், இந்நிறுவனத்தில் வேலை செய்யும் நிரந்தரத் தொழிலாளர்களிடத்தில் அனுமதிக்கத்தக்க அளவே கதிரியக்கம் உள்ளது எனக்காட்டிக் கொள்கிறது. சென்ற வருடம் ஏற்பட்ட நீர்க்கசிவை சரி செய்வதற்கு முன், கசிவு ஏற்பட்டுள்ள இடங்களில் கதிரியக்கத்தின் அளவினைப் பரிசோதனை செய்து பார்க்காமலும், கசிவடைந்த நீரினுள் இறங்கிச் செல்லும் தொழிலாளர்களுக்கு போதிய பாதுகாப்பு கருவிகளை வழங்காமலும், அலட்சியமாக இருந்துள்ளது நிர்வாகம்.

உலைகளைக் குளிர்விப்பதற்காக கடலிலிருந்து எடுக்கப்படும் நீர், சுத்திகரிக்கப்பட்ட பின் மீண்டும் கடலிலேயே கலக்கப்படுகிறது. இதன் காரணமாக இப்பகுதி கடலிலிருந்து பெறப்படும் இறைச்சி உணவுகளை ஒரு வருடத்திற்கு 15 கிலோ அளவு உண்ணும் ஒருவருக்கு, சாதாரண மனித உடலில் இருந்து வெளிப்படும் கதிரியக்கத் தன்மையைவிட 25 மடங்கு அதிக அளவு கதிரியக்கத் தன்மை இருக்கும் என ஆய்வு முடிவுகள் நிரூபித்துள்ளன.

பாபா அணுமின் நிலையம் மட்டுமின்றி, நாட்டின் பிற இரு அணுமின் நிலையங்களும் இதுபோன்ற குறைபாடுகளுடன் தான் இயங்கிவருகின்றன. கல்பாக்கம் அணுமின் நிலையம் 1984-லிருந்தே இடையிடையே நிறுத்தப்பட்டுத்தான் செயல்பட்டு வருகின்றது. ராஜஸ்தான் அணுமின் நிலையத்தில் 1981-ல் ஏற்பட்ட விபத்தின் காரணமாக, அதன் ஒரு பிரிவு 1985 முதல் நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டது. அவ்விபத்தில் மட்டும் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2000 ஆகும். மேலும், இது போன்று 300 அணு உலை விபத்துக்கள் வெளி உலகுக்குத் தெரியாமல் மூடி மறைக்கப்பட்டுள்ளதாக நிர்வாகத்தினர் மீதும், அரசின் மீதும் குற்றஞ்சுமத்தியுள்ளனர் சுற்றுப்புறச் சூழல்வாதிகள்.

'குறைவான செலவில் மின்சாரம்' என்றுதான் ஆட்சியாளர்கள் அணுக்கரு உலைகள் தொடங்குவதை நியாயப்படுத்துகின்றனர். ஆனால், அதன் இயங்கும் தன்மையும், பராமரிப்பு செலவும் இந்நோக்கத்தையே கேலிக்குள்ளாக்குகின்றன. தென் மாநிலங்கள், கடந்த ஜனவரி 2-லும், பிப்ரவரி 19-லும் இருளில் மூழ்கியபோது, கல்பாக்கம் அணுமின் நிலையம், அது அமைந்துள்ள இடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் கூட மின்சாரம் வழங்க இயலாத நிலையில் தான் செயல்பட்டுள்ளது. மேலும், மின்சாரம் என்பது ஆள்வோரின் நோக்கமன்று. அது ஓர் உப - தயாரிப்புதான் (By - Product). மிக முக்கியமாக, யுரேனியத்தைப் பிளப்பதால் கிடைக்கும் புளுட்டோனியம் தான் அணுமின் நிலையங்களின் முக்கிய தயாரிப்பு பொருளாக உள்ளது. இப்புளுட்டோனியம் தான் அணு ஆயுதம் தயாரிப்பதற்கு மூலப்பொருளாக அமைகிறது.



பாபா அணு உலை; சுற்றுச் சுழலை அழிக்கும் கிருமி.



படிப்பகம்

www.padippakam.com

அணுமின் நிலையங்கள் சம்பந்தமான விவகாரங்களையும், அதற்கான செலவுகளையும் அரசு மிக ரகசியமாகவே பாதுகாத்து வருகிறது. இதைத் தொடங்குவதற்கான திட்ட மதிப்பீடுகளிலிருந்து பராமரிப்பு செலவினை ஒதுக்கி வைத்துவிட்டுத் தான், வெளி உலகுக்கு அறிவிக்கின்றது. சிதைக்கப்பட்ட யுரேனியம் தனது கதிரியக்கத் தன்மையில் பாதியளவு குறைவதற்கு 20,000 ஆண்டுகள் ஆகும். ஆனால், ஓர் அணுமின் நிலையம் இயங்கும் காலம் 25 முதல் 30 ஆண்டுகள் மட்டுமே.

அடிப்படை தொழிற்துறை மேம்பாட்டிற்கான விஞ்ஞான ஆராய்ச்சிக்கு வருடம் 300 கோடி ரூபாய் மட்டுமே செலவழிக்கும் அரசு, அதிக முதலீடும், கூடுதலான தொடர்ச்சியான பராமரிப்பு செலவும், சுற்றுப்புற சூழலுக்கு கேடு விளைவிக்கும் இவ்வகை அணுமின் நிலையங்களை நாட்டில் மேலும் 12 இடங்களில் தொடங்க உத்தேசித்துள்ளது. சோவியத் யூனியன் சிதறுண்டதன் காரணமாக, அந்நாட்டு உதவியுடன் தமிழ்நாட்டில், கூடம்குளத்தில் தொடங்க இருந்த அணுமின் நிலைய கட்டுமானத்தை மத்திய அரசு கைவிட்டது. ஆயினும், தமிழ்நாடு, கேரளா, கர்நாடக மாநில அரசுகள் மூன்றும் இணைந்து, எவ்வாறேனும் நிதி திரட்டி, அப்பகுதி மக்களின் எதிர்ப்பையும் மீறி கட்டுவதென நடந்து முடிந்த தென் மாநில வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் முடிவெடுத்துள்ளன. இதன்மூலம் மக்களின் வாழ்க்கையை மட்டுமல்ல, அதற்கான சூழலையும் அழித்துவிடும் பாதையில்தான் அடிவைத்துச் செல்லுகின்றன.

●செல்வம்

# அணு ஆயுத தயாரிப்பு வல்லரசுகளின் மிரட்டல்

அமெரிக்கா, உலக மக்களிடையே தன்னை ஒரு சமாதானப் பிரியன் எனக்காட்டிக் கொள்ளவும், தனக்குப் பணியாத அரசுகளை மிரட்டும் ஓர் ஆயுதமாகவும் அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி வருகிறது.

கிளிண்டனின் புதிய நிர்வாகத்திற்கு இந்த ஒப்பந்த ஆதரவாளர்கள் அளித்துள்ள ஒரு குறிப்புரையில் தெற்காசியாவிலும், மேற்காசியாவிலும் உள்ள நாடுகளை இந்த ஒப்பந்தத்தின் கீழ் கொண்டுவர மிகுந்த கவனம் கொடுக்க வேண்டுமெனக் கோரியுள்ளனர். குறிப்பாக, இந்தியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுதபலம் வாய்ந்த நாடுகள் எனக் குறிப்பிடும் இவ்வறிக்கை, இந்த இருநாடுகளையும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்படி செய்வதற்கு, பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர்.

புஷ் நிர்வாகம் செய்தது போல், கிளிண்டன் நிர்வாகம், இருதரப்பு பேச்சு வார்த்தைகளில் ஈடுபடக்கூடாதென்றும், 'நிலவும் இந்தியா - பாகிஸ்தான் உறவுகளை அப்படியே பேணுவது - குறிப்பாக, பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்குமிடையே ஆயுத பேர ஒப்பந்தம் எதுவும் கிடையாது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது - இந்தியா, பாகிஸ்தான், சீனா மூன்றையும் இணைத்து அணு ஆயுத தடுப்பு சம்பந்தமாக, மற்ற பிற முக்கிய உலக நாடுகளும் அங்கீகரிக்குமாறு, ஒப்பந்தம் ஒன்றினை உருவாக்குகிறது. பாரதூரமான அரசியல் மாற்றங்கள் - இந்தியாவில் பி.ஜே.பி.யின் அதிகரித்து வரும் செல்வாக்கு, பாகிஸ்தானில் அரசியலில் தளபதி மிர்ஸா அஸ்லாம் பேக்கின், அரசியல் மறு பிரவேசம் ஏற்படு முன் நிலைமையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இந்த குறிப்புரை கிளிண்டன் நிர்வாகத்திற்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

1974-ல் அணு குண்டு சோதனை நடத்தி தன்னிடம் அணு ஆயுத பலமுண்டு என வெளி உலகுக்கு காட்டிக் கொண்ட இந்தியா, அதன்பின் அணு ஆயுத தயாரிப்பு சம்பந்தமாக மிகக்குறைவான கவனமே செலுத்துவதாகக் கூறிவருகிறது. மேலும், தான் அணு ஆயுதம் தயாரிப்பதையே கூட 'பாகிஸ்தான் தயாரிப்பதால் தான், தானும் தயாரிக்க வேண்டியுள்ளது' என இவ்விஷயத்தில் இரட்டை வேடமே போட்டு வருகிறது.

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நாடான இந்தியா, இது நாள்வரை அந்த ஒப்பந்தத்தை விமர்சித்தது கிடையாது. மேலும் பாகிஸ்தான், ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடர்பாக 'ஐந்து நாடுகள் அடங்கிய கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' என கருத்து தெரிவித்தபொழுது, அதனை இந்தியா மறுத்துவிட்டது. ஆனால், இது விஷயமாக புஷ் நிர்வாகத்துடன் இருதரப்பு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டது. கிளிண்டன் நிர்வாகத்தின் முன், பொருளாதார தடையுத்தரவு அடங்கிய குறிப்புரைகள் பரிசீலனையில் இருக்கும் இந்நிலையில் கூட, இந்த ஒப்பந்தத்தையும், அமெரிக்காவின் நிலைப்பாடுகளையும் விமர்சித்து, தனது முடிவினைத் தெளிவுப்படுத்தவில்லை இந்தியா.

> அமெரிக்கா, உலக மக்களிடையே தன்னை ஒரு சமாதானப் பிரியன் எனக்காட்டிக் கொள்ளவும், தனக்குப் பணியாத அரசுகளை மிரட்டும் ஓர் ஆயுதமாகவும் அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி வருகிறது.

பிரிட்டிஷ் பிரதமர் இந்தியா வந்திருந்தபொழுது, 'அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியாவை நாங்கள் வற்புறுத்தப் போவதில்லை' எனக் கருத்து தெரிவித்தார். ஆனால், இந்தியாவின் ஏவுகணைத் திட்டத்திற்கு பிரிட்டன் உதவப் போவதில்லையென்ற முடிவை தற்பொழுது அறிவித்துள்ளனர். இதற்காக, இந்தியா தற்சமயம் ஜெர்மன் உதவியைக்கோரி வருகிறது. பிரான்ஸ், 1993-ல் முடிவடையும் தாராப்பூர் அணு மின்நிலையத்திற்கு யுரேனியம் வழங்கும் ஒப்பந்தத்தை நீட்டிக்கப் போவதில்லையென அறிவித்துவிட்டது.

ஆளும் வர்க்கக் கட்சிகளுள் ஒன்றான பி.ஜே.பி. 'இந்தியா ஓர் அணு ஆயுத பலம் வாய்ந்த நாடாக விளங்க வேண்டும்' என வெளிப்படையாகவே கருத்து தெரிவிக்கிறது. "இந்தியா, அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமலேயே அதனை விமர்சிக்க வேண்டும். காரணம், 1995-ல் நடைபெறவுள்ள அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் நீட்டிப்பு மாநாட்டில், இந்தியா கையெழுத்திடாவிடில் பங்கு பெறமுடியாது. எனவே, தற்பொழுது இருந்தே விமர்சித்து, பிறநாடுகள் மத்தியில் ஒரு கருத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்". ஆனால், இவ்விமர்சனங்கள் மென்மையாகவே இருக்க வேண்டும்' என முதலாளித்துவ அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஆனால், மத்தியிலுள்ள ஆட்சியாளர்கள், 'பாகிஸ்தான் மட்டுமின்றி, சிதறுண்டு போன சோவியத் யூனியனின் மத்திய ஆசிய நாடுகளில் அணு ஆயுதங்கள் பரவியிருப்பதும்' தான் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாததற்கு காரணம் என்பதைத்தான் திரும்ப திரும்ப கூறிவருகிறார்கள். அமெரிக்காவை நேரடியாக விமர்சிக்கும்பட்சத்தில், அது தனக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள், 'தாராளமயமாக்கலை'ப் பாதிக்கும் என இந்தியா அஞ்சுகிறது.

'இந்தியாவிடம் உறவு வைத்துக் கொள்வதுதான் தந்திரோபயமாக அமெரிக்காவுக்கு மிகுந்த பலனளிக்கும்' என்றுதான் இந்தியா அமெரிக்காவிடம் கூறிவருகிறது. இவ்வாறு அமெரிக்காவை சாந்தப்படுத்தி, இருதரப்பு பேச்சு வார்த்தைகளுக்கு மட்டும் இணங்குவது; இதன்மூலம் அணு ஆயுதம் உள்ளிட்ட தனது இராணுவபலத்தைத் தக்க வைத்துக் கொள்வது - இவைதான் இனி அரசின் செயல்வழியாக அமையும்.



படிப்பகம்

www.padippakam.com




● தனிப்பட்ட வாழ்க்கையில் மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர், சிகரெட், மது,போதைப்பழக்கம் போன்ற கெட்டபழக்கம் எதுவும் இல்லாமல் இப்பொழுது உள்ள அரசியல் தலைவர்களில் இருந்து வேறுபட்டு இருந்தாரே! அவருடைய அந்தத் தனிமனித ஒழுக்கத்தை வைத்தாவது எம்.ஜி.ஆரை நீங்கள் பாராட்டக்கூடாதா? தனிப்பட்ட முறையில் ஏதேனும் உங்களைக் கொடுமைப்படுத்தி பாசிஸ்டாக நடந்துகொண்டாரா?

கே.கர்ணன், விழுப்புரம்

★ தனிமனித ஒழுக்கமோ, ஒழுக்கக்கேடோ பிரதானமாக அவரையும், அவரது குடும்பம், உறவினர், சுற்றத்தாரையும் பாதிக்கக் கூடியது தான். ஆனால் எம்.ஜி.ஆரைப் போன்ற 'தலைவரின், அரசியல், சமூக ஒழுக்கமோ, ஒழுக்கக் கேடோ நாட்டையும் மக்களையுமே பாதிக்கக் கூடியவை. ஒருவன் அரசியல், சமூக ஒழுக்கக்கேடாக நடந்துகொண்டு தனிமனித ஒழுக்கசீலனாக வாழ்ந்தால் அதற்காகப் பாராட்ட முடியாது. அதேபோல தனிப்பட்ட வாழ்வில் ஒழுக்கக்கேடனாக உள்ள ஒருவன் அரசியல், சமூக ஒழுக்கத்தை வலியுறுத்தவும், பின்பற்றவும் அருகதையற்றவன் ஆகிறான். எம்.ஜி.ஆர் திரையில் மட்டுமல்ல வெளியிலும் அரசியல் - சமூக வாழ்விலும் நடித்தவர். தனிமனித ஒழுக்கத்துக்கும் இது பொருந்தும். கெட்டபழக்கம் எதுவும் இல்லாதவராக, மனிதாபிமானியாக சினிமாவில் மட்டும் அல்ல வெளியிலும் நடித்தவர். தன்னுடைய உண்மையான முகத்தை மக்கள் அறிந்துகொள்ளக் கூடாது என்பதற்காகவே முற்றிலும் இரகசிய வாழ்க்கை வாழ்ந்தார். எம்.ஜி.ஆரின் முன்னாள் கதாநாயகிகளுடன் அவர் கொண்டிருந்த கள்ள உறவு பற்றிய அவரது விசுவாசிகளின் வாக்குமூலங்கள் இதைத்தான் காட்டுகின்றன. எம்.ஜி.ஆரின் கண்ணும், காதும், கைகளுமாக செயல்பட்ட போலீசின் முன்னாள் பொது இயக்குநர் மோகன்தாஸ், அவர் எதைச் சொய்தாலும் தனது சுயநலன் என்கிற கோணத்தில் இருந்தே செயல்பட்டார் என்ற "எம்.ஜி.ஆர் கட்டுக்கதையும் உண்மையும்" என்று நூலில் எழுதியுள்ளார்.

எம்.ஜி.ஆர். ஒரு பாசிஸ்ட், குரூர இன்பங்காணும் சேடிஸ்ட், கொடூரமான கோமாளி அதாவது ரோமானிய அரசன் கலிகாலா, உகாண்டாவின் அதிபர் இடி அமீன் போன்ற பயங்கரவாத ஆட்சியாளர் என்று கருதுகிறோம். இப்படிச் சொல்வதற்கு தனிப்பட்டமுறையிலான கொடுமை எதையும் அனுபவித்திருக்க தேவையில்லை. இந்த மாநிலத்தின் உழைக்கும் மக்களின் அனைத்துப் பிரிவினரையும் மிருகத்தனமாகத் தாக்கி ஒடுக்கியவர். தேவாரம் - மோகன்தாஸ் கும்பலை ஏவி.மாணவர், மீனவர், தொழிலாளர் - விவசாயிகள், பெண்கள் பொதுமக்கள், கம்யூனிசப் புரட்சியாளர்கள் ஆகிய பலரையும் படுகொலை செய்தவர். இவையெல்லாம் எம்.ஜி.ஆர். சாவைத் தொடர்ந்து வெளிவந்த புதிய ஜனநாயகம் '88 ஜனவரி இதழில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாட்டில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால் வறுமையும் வேலை இல்லாத்திண்டாட்டமும் ஒழியும்.

-ரா.நாச்சிமுத்து, போடி.

● புதிதாகத் துவங்கப்பட்டுள்ள பாட்டாளி மக்கள் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி போன்ற வட்டாரக் கட்சிகள் தவிர எல்லாக் கட்சிகளும் தான் ஆட்சி நடத்திவிட்டனவே! இப்படி இதுவரை வந்த எந்தக் கட்சி ஆட்சியும் வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழித்து விடவில்லை. பா.ம.க, ப.ச.க. போன்றவை வெற்றிபெற்றாலும் அந்தக் கட்சிகளை விட மாறுபட்ட ஆட்சியாக இருக்காது. வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழிவது இருக்கட்டும், பெருகிக்கொண்டே போகிறதே. அதாவது நிற்காதா? நிற்காது! நாட்டின் அரசியல், பொருளாதார சமூக அமைப்புதான் அதற்குக்காரணம். அந்நிய ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தரகு அதிகார முதலாளித்துவமும், பழைய சாதீய சமூக அமைப்பைக் கொண்ட பிற்போக்கு நிலப்பிரபுத்துவமும் இவற்றைக் கட்டிக் காக்கும் அரசியல் அமைப்பும் நீடிக்கும்வரை வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகவே செய்யும். ஆட்சிகள் மாறுவதால் இதைத் தடுத்துவிட முடியாது. இந்த அரசியல், பொருளாதார, சமூக அமைப்பை அடியோடு மாற்றும் புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலம் அமையும் மக்கள் ஜனநாயக அரசினால் மட்டுமே வறுமை, வேலையில்லாத் திண்டாடத்தை ஒழிக்க முடியும்.

● அம்பத்தூரில் நடைபெற்ற ம.க.இ.க. ஒலிநாடா வெளியீட்டு விழாவில் 'பிழைப்பவாதி' தலித் எழில் மலை மற்றும் தியாகு போன்றோர் பங்கேற்றனர். மேலும் மதுரையில் பா.ம.க.வுடன் இணைந்து ஊர்வலம் நடத்துள்ளதாகவும் கேள்விப்பட்டேன். இவர்கள் எல்லாம் சனநாயக சக்திகள் என்று அங்கீகரிக்கிறீர்களா? கூட்டு நடவடிக்கை பற்றிய உங்களின் நிலைப்பாடுகள் மாறியிருக்கிறதா? பழைய நிலைப்பாடுகள் குறித்து சுயவிமர்சனம் செய்து கொள்கிறீர்களா?

—க.செந்தில், சென்னை - 94

★ ம.க.இ.க. நடத்திய ஒலிநாடா வெளியீட்டு விழா ஒரு கூட்டு நடவடிக்கை அல்ல. ஒலிநாடா மீதான கருத்துக்கூறும்படி பல்வேறு அமைப்பினர் அழைக்கப்பட்டனர். பிழைப்புவாத, பெயர்பலகை அமைப்புகள், அராஜக அரசியல் அமைப்புகள், தமது சொந்த

பாரதீய ஜனதா கட்சியினர் ஏன் முஸ்லீம்களை மட்டும் தாக்குகின்றனர்; பிற கிறித்துவ, புத்த, சமண மதங்களை தாக்குவதில்லை?

■ ■ ■

எம்.ஜி.ஆரின் தனிமனித ஒழுக்கத்தை நீங்கள் பாராட்டக் கூடாதா?

அரசியல் நிலைப்பாடுகளுக்கே விசுவாசமாக இருந்து மக்களைத் திரட்டாத போலி அமைப்புகள், டிராட்ஸ்கியக் குழுக்கள் போன்ற சதிகார அமைப்புகள் ஏகாதிபத்திய உளவு நிறுவனங்களை, நபர்களைக் கொண்ட அமைப்புகள் ஆகியவற்றை சனநாயக சக்திகளாகக் கருதி கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது என்கிற எமது நிலைப்பாட்டில் மாறுதல் எதுவும் கிடையாது. இந்த அடிப்படையில் தான் மதுரையில் கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

● பாரதீய ஜனதாக் கட்சியினர், குறிப்பாக ஏன் முஸ்லீம் மதத்தினரைத் தாக்குகின்றனர். இந்து மதத்தை சாராத கிருஸ்துவ மதத்தினரை மற்றும் புத்த, சமண மதங்களை சார்ந்தவரையும் தாக்காமல் இருப்பதற்கு ஏதேனும் அரசியல் காரணம் உண்டா?

—பி.சங்கர், திண்டுக்கல்.

★ பாரதீய ஜனதா முதலிய இந்துமத வெறி அமைப்பினர் புத்த, சமண மதத்தினரை மட்டுமல்ல; சீக்கிய மதத்தினரையும் கூட இந்து



படிப்பகம்

www.padippakam.com

மதப் பிரிவுகளாகக் கூறுகின்றனர். இவற்றின் தனித்தன்மைகளை அழிக்கவும் முயலுகின்றனர். இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் கூட இந்தப் பொருள்படும்படியே எழுதிவைத்துக் கொண்டுள்ளனர். பீகார் மாநிலம் மதுபானி கிராமத்தில் உள்ள ஜைனகோவிலின் மகாவீரர் பளிங்குச் சிலைகளைத் தகர்த்துள்ளனர். கயாவில் உள்ள பத்த கோவிலை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர். சீக்கிய மதத் தனித்தன்மைக்காக போராடினால் அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்கும்படி நிர்பந்திக்கின்றனர். ஆனால் சீக்கியர் போர்க்குணத்துடன் திருப்பித் தாக்குவதால் இப்போதைக்கு இதைப் பெரிதுபடுத்தாமல் இருக்கின்றனர். கிருத்துவ மத எதிர்ப்புப் பிரச்சாரத்தையும் இந்துமத வெறியர்கள் நடத்துகின்றனர். ஆனால் அதை தீவிரப்படுத்தினால் மேலை ஏகாதிபத்திய எஜமானர்கள் கோபித்துக் கொள்வார்கள் என்று தயங்குகின்றனர்.

இசுலாமியர்கள், சிறுபான்மையினராக இருந்தாலும் இந்துக்களுக்கு பெரும் அடுத்த மக்கள் தொகையில் வாழுகின்றனர். இசுலாமியர் குடும்பக்கட்டுப்பாடு கடைப்பிடிகாமல், பலதார மணமுறை பின்பற்றி நாட்டின் பெரும் பான்மையாகி நாட்டைத் துண்டாடிவிடுவர் என்று புளுகுப் பிரச்சாரம் செய்வது வசதியாக உள்ளது; பிற சிறுபான்மை மதங்களைப் போலன்றி இசுலாமிய மதக்கோட்பாடும், வாழ்வும் இந்துமதத்திற்கு நேரெதிராக உள்ளதைக் காட்டி மதவெறி யூட்டமுடியும்; இரு அண்டைநாடுகள் இசுலாமிய அமைப்பைக் கொண்டுள்ளதால் அதைக்காட்டி தேசிய வெறியூட்டமுடியும். வியாபாரம் - கந்து வட்டி, தோல், சினிமா போன்ற தொழில்களில் கணிசமான அளவு இசுலாமியர் இந்து பனியா சாதிக்குப் போட்டியாக உள்ளனர்; குறிப்பாக வடஇந்தியாவில் பல நூற்றாண்டுகள் மொகலாய ஆட்சி நிலவியதால் எல்லா ஆட்சியாளர்களையும் போல அவர்களது ஒடுக்குமுறைக்கெதிராக மக்களும், அவர்களிடம் அதிகாரத்தை இழந்த ராஜபுத்திரர்களும், செல்வாக்கை இழந்த பார்ப்பனர்களும் பழைய வெறுப்புடன் இருக்கிறார்கள். இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு தாக்குவதற்கு இசுலாமியர்தான் எளிதான இலக்காக உள்ளனர். எல்லாவற்றுக்கும் மேலாக சாதி, வர்ணரீதியில் பிளவுபடுத்தப்பட்டுள்ள இந்துக்களை ஐக்கியப்படுத்த முடியாமல் அந்நிய எதிரியாக இசுலாமியரைக்காட்டி ஆதரவு திரட்டுகின்றன. எனவேதான் இந்து மதவெறியினர் இசுலாமியர் மீது தாக்குதல் முனையைத்திருப்பி உள்ளனர். ஆனால் அவர்களது இறுதி இலட்சியம் அதோடு நிற்காது. இந்திய உழைக்கும் மக்கள் அனைவருக்கும் எதிரான இந்து மதவெறி பாசிச ஆட்சியை நிறுவுவதே அவர்களது இறுதி இலட்சியம்.

● 'தடா' சட்டப்பிரிவில் கைது செய்யப்பட்ட நெடுமாறன் தன்னுரிமை என்பது, ''ராணுவம், நிதி, அயலுறவு போன்ற பொறுப்புகளை மைய அரசு வைத்துக்கொண்டு பிற அனைத்து உரிமைகளையும் தமிழ் இனத்திற்கே தரவேண்டும்'' என்பதே தன்னுரிமையாகும். என்று விளக்கியுள்ளார். தங்களின் தன்னுரிமை முழக்கத்திற்கான விளக்கத்தில் இருந்து இதுமாறுபட்டதாகத் தெரிகிறது. சரியான விளக்கம் அளிக்கவும்

—விசுவநாதன், திருச்சி - 18.

★ இந்திய நாட்டிலுள்ள அனைத்து தேசிய இனங்களுக்கும் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையைத் தான் நாம் தன்னுரிமை என்று கூறுகிறோம். இப்போது 'தடா'வில் கைதானதையொட்டி மட்டுமல்ல; இரண்டு ஆண்டுகளுக்கு முன்ப தஞ்சை தன்னுரிமை மாநாட்டுக்கு தடை விதித்து, நெடுமாறன் மற்றும் சிலர் கைதான போது கூட வாசகர் மேற்கோளிட்டிருக்கும் விளக்கத்தையே கொடுத்தார். இதை அப்போதே புதிய ஜனநாயகம் அம்பலப்படுத்தியது. நெடுமாறன் மட்டுமல்ல, 'தமிழினப் போராளி' என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ள ராமதாஸ் உட்பட ''தமிழினத் தலைவர்கள்'' அனைவருமே கைது போன்ற அடக்குமுறைகளை எதிர்கொள்ளும்போது ''தன்னுரிமை''க்கு இப்படித்தான் விளக்கமளிக்கின்றனர். உண்மையில் இவர்கள் ''தன்னுரிமை''க்குத் தரும் விளக்கம் என்பது மாநில சுயாட்சியைத்தான் குறிக்கிறதே தவிர சுயநிர்ணய உரிமையை அல்ல. இவர்களில் பெரும்பாலானவர் இனப்பற்று, ஜனநாயக உணர்வு காரணமாக ''தன்னுரிமை'' முழக்கத்தை ஏற்றவர்கள் அல்லர். தமது அரசியல் வாழ்வுக்கு அவசியம் என்று கருதியதால் ''தன்னுரிமை''யை இணைத்துக் கொண்டவர்கள்.

மேற்கு வங்க மனித உரிமை கருத்தரங்கு

# கிழிந்தது போலிகளின் ஜனநாயக முகத்திரை!

பல்வேறு சர்வதேச நிர்பந்தங்கள் காரணமாக, மத்திய அரசு, போலீசார் மற்றும் ராணுவத்தினரின் அத்துமீறலை விசாரிக்க, மனித உரிமைக் கமிஷன் ஒன்றினை அமைக்க அண்மையில் முடிவெடுத்தது. மேலும், மாநில அரசுகளும் தங்களது சொந்த மனித உரிமை அமைப்புகளை மாநில அளவில் ஏற்படுத்திக் கொள்ளலாம் எனவும் அறிவித்தது.

இதன்படி, 'மார்க்சிஸ்டுகள்' கல்கத்தாவில் கடந்த நவம்பர் 16 அன்று, மனித உரிமை கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்திருந்தனர். போலீசாரின் சந்தேகக் கண்கள் கருத்தரங்கு கூடத்தின் வாசலிருந்தே தொடங்கிவிட்டிருந்தது. 'அனைவரும் கலந்து கொள்ளலாம்' என மாநில சர்க்கார் அழைப்பு விடுத்திருந்தபோதிலும், பார்வையாளர் ஒவ்வொருவரையும் முழுமையாக பரிசோதனை செய்த பின்னரே உள்ளே அனுப்பிவைத்தது. அம்மாநிலத்தில் இயங்கும் ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை, நீண்டவாத பிரதிவாதங்களுக்கு பின்னேதான் கூடத்தினுள் நுழைய அனுமதியளித்தது.

கடந்த 14 வருடங்களில் (1977-91) மாநிலத்தில் நடந்துள்ள 149 கொட்டடி கொலைகள் பற்றியும், (1982-92) பத்து ஆண்டுகளில் நடந்துள்ள 42 காவல் நிலைய கற்பழிப்புகள் பற்றியும் வினா எழுப்ப நல்லதொரு வாய்ப்பு என எண்ணிச் சென்ற அவ்வமைப்பினருக்கு மாநில முதல்வர் ஜோதிபாசுவின் பேச்சு அதிர்ச்சியே அளித்தது. 'மனித உரிமை அமைப்புகள் பற்றி மட்டுமே பேச வேண்டும்; வேறு எதனையும் பேசக்கூடாது' எனத் தொடக்க உரை நிகழ்த்தி, கருத்தரங்கு என்பதன் நோக்கத்தையே கேலிக்குள்ளாக்கினார் அவர்.

கருத்தரங்கில் மற்றும் சிலர் பேசி முடித்ததும், பத்ரா எனும் இவ்வமைப்பின் உறுப்பினர் இடைமறித்துப் பேச அனுமதி கோரியுள்ளார். விழாத் தலைவர் அவரை பேச மேடைக்கு அழைத்த மறு நிமிடமே, ஜோதிபாசு தானே நேரடியாகவே, 'அவர்களைப் பேச அனுமதிக்கக் கூடாது' எனத் தலைவருக்கு கட்டளையிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து எழுந்த கூச்சல் - குழப்பம் காரணமாக, இவ்வமைப்பின் உறுப்பினர்கள் கருத்தரங்கிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

வாசலிலேயே இவர்களை வழிமறித்து, கலாச்சார(!) மந்திரி புத்ததேப் பட்டாச்சார்யா தாக்கினார். உடனடியாக, கட்சி உறுப்பினர்களும், வாசலிலும், அரங்கிலுமிருந்த போலீசாரும் மந்திரியுடன் சேர்ந்து கொண்டு தாக்கியதுடன், காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்று, சிறையில அடைத்துள்ளனர்.

மந்திரியை பேட்டிகாணச் சென்ற பத்திரிக்கையாளர்களிடம், அவர் இவ்வமைப்பினைச் சேர்ந்தவர்களை 'கலகக்காரர்கள்', 'நக்சலைட்டுகள்' என வசைமாரி பொழிந்துள்ளார். அது மட்டுமின்றி, 'மனித உரிமைகளை நான் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய தேவையில்லை' என ஆணவத்துடன் பதில் கூறியுள்ளார். அதனுடன், 'தெருவில் செல்லும் விபச்சாரிகளைப் பற்றி பேசுகின்றவர்களுக்கு மனித உரிமைகள் பற்றி என்ன அக்கறை' என பேட்டி காணச் சென்ற பத்திரிக்கையாளர்களை கீழ்த்தரமாக நடத்தியுள்ளார்.

குறைந்தபட்ச மனித மாண்புகூடத் தெரியாத இவர்களா மனித உரிமையை காப்பாற்ற போகிறவர்கள்? 'ஈயத்தை பார்த்து இளித்ததாம் பித்தளை' என்பது போல், பிற ஆட்சியாளர்களைப் பற்றி பேச 'மார்க்சிஸ்டு'களுக்கு என்ன அருகதை உள்ளது?

படிப்பகம்

www.padippakam.com

# யுத்தத்திற்குப் பின் ஈராக்கின் அவலம் அமெரிக்காவின் பலமுனைத் தாக்குதல்

## ஏகாதிபத்தியங்கள் தங்களின் அத்துமீறல்களையும், செயற்கையாக ஏற்படுத்திய பேரழிவுகளையும் 'ஐ.நா. தீர்மானம்' எனும் பெயரில் வசதியாக வெளி உலகிடமிருந்து மறைத்துவிடுகின்றன

வளைகுடா யுத்தம் முடிந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடையும் முன்பே, அமெரிக்க கழுகு மீண்டும் தனது கைவரிசையை ஈராக் மீது காட்டத் துவங்கியுள்ளது. ஐ.நா.சபை விதித்த தீர்மானங்களை ஈராக் மீறிவிட்டது எனும் முகாந்திரத்தின் பேரில், அமெரிக்கத் தலைமையின் கீழ், பிரிட்டன் மற்றும் பிரான்சு நாடுகளின் விமானப்படையும் இணைந்து. ஜனவரி 13 அன்று இரவு மூன்று மணி நேரத்திற்கும் மேலாக, எவ்வித இழப்புமின்றி, தங்களின் முதல் தாக்குதலை வெற்றிகரமாக நடத்திமுடித்துள்ளன.

''ஐ.நா.தீர்மானங்கள் 687,707 மற்றும் 75-க்கு எதிராக, ஐ.நா.ஆய்வுக் குழுவினர் ஈராக்கினுள் விமானங்களில் பறப்பதை தடை செய்துள்ளது; இரண்டாவதாக, ஈராக்கின் வடக்கிலும், தெற்கிலுமுள்ள வான்விலக்குப் பிரதேசங்களைக் கண்காணித்து வரும் அமெரிக்க விமானங்களை வீழ்த்தும் நோக்குடன் தனது ரேடார் சாதனங்களையும், ஏவுகணைகளையும் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. மூன்றாவதாக, குவைத்தின் எல்லைக்குள் ஊடுருவி; போரின்பொழுது, தான் விட்டுச் சென்ற ஏவுகணைகளை அத்து மீறி எடுத்துச் செல்கிறது.'' - இம்மூன்று காரணங்களைக் கொண்டுதான் அமெரிக்காவும், அதனின் நேச நாடுகளும் தங்களின் தொடர்ச்சியான தாக்குதலை நியாயப்படுத்தி வருகின்றன.

'வான்விலக்குப் பிரதேசங்களின் வழியாகப் பறந்து வரும் ஐ.நா. விமானங்களுக்கு தாங்கள் எந்தவிதமான பாதுகாப்பு உத்திரவாதமும் அளிக்க இயலாது;' எனவே, ஐ.நா. ஆய்வுக்குழு ஈராக் நாட்டு விமானங்களின் மூலம் மேற்கு வழியாகவோ, பாக்தாத் - அம்மான் சாலை வழியாகவோ ஈராக்கினுள் நுழையலாம் என ஈராக் விளக்கமளித்திருந்தது. இதனை மேற்கு நாடுகள் மட்டுமின்றி, ஐ.நா. வின் அடாவடித்தனமாக மறுத்திருப்பதுடன், 'ஐ.நா.தீர்மானங்கள், ஈராக்கினுள் நுழைவதற்கும், வெளியேறுவதற்கும் குறிப்பிட்டு எதுவும் கூறாததால், ஈராக் இது பற்றி பேசக் கூடாது' எனக் கட்டளையும் பிறப்பித்தது.

ஈராக்கின் வடக்கிலும், தெற்கிலும் உள்ள வான்விலக்கு பகுதிகள் ஐ.நா.தீர்மானங்களின் மூலம் அறிவிக்கப்பட்டவையல்ல. அமெரிக்காவும், பிரான்சும், இங்கிலாந்தும் முறையே இப்பகுதிகளில் வாழும் குர்தீஷ் இன மற்றும் ஷியா, முஸ்லீம் மக்களின் போராட்டங்களை - தங்களின் ஆதிக்க நோக்கத்திற்காகவும், சதாமிற்கு நெருக்கடி கொடுத்து அதிகாரத்திலிருந்து தூக்கியெறிவதற்காகவும் பயன்படுத்தும் நோக்கத்துடன் இவ் வான்விலக்குப் பகுதிகளை அறிவித்துள்ளன. இந்த ஏகாதிபத்தியங்கள் இந்நாள் வரை இத்தீர்மானங்களை தோல்வியைத் தழுவும் என்ற காரணத்தினால், ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகளின் வாக்கெடுப்புக்கு விடவில்லை. இவ்வான்விலக்குப் பகுதிகளை தனது இறையாண்மையைப் பாதிக்கும் செயல் எனக்கூறி, ஈராக் இதுநாள் வரை ஏற்றுக் கொண்டதேயில்லை.

மூன்றாவதாகக் கூறப்பட்டுள்ள எல்லை ஊடுருவல்தான் மிகுந்த மோசடித்தனமானது. ஈராக் ஊடுருவியதாகக் கூறப்படும் உம் காஸர் (Umm Qasar) ஆகஸ்டு 92-க்கு முன்பு ஈராக்கைச்சேர்ந்த பகுதியாகும். ஐ.நா. தனது 773-வது தீர்மானத்தின் மூலம், அப்பகுதியை சர்வதேச சட்டவிதிகளுக்குப் புறம்பாக ஈராக்கிடமிருந்து பறிமுதல் செய்து, குவைத்துக்கு கொடுத்துள்ளது. மேலும், 'சனவரி 15 வரை ஈராக், இப்பகுதியிலுள்ள தனது ஆயுதங்களை குவைத்தின் சம்மதத்துடன் அப்புறப்படுத்திக் கொள்ளலாம்' என தீர்மானத்தில் பிரிவுகள் இருப்பதை ஈராக் சுட்டிக் காட்டியுள்ளது. வளைகுடாப் போர் முடிந்து கடந்த இரண்டு ஆண்டுகளாகவே, மேற்காசிய பிராந்தியத்தில், அமெரிக்க மற்றும் பிற மேலை ஏகாதிபத்தியங்கள் தங்களின் நலனோடு முரண்படும் சதாமை பதவியிலிருந்து தூக்கியெறிய வேண்டும் எனும் நோக்கத்தின் அடிப்படையிலேயே செயல்பட்டு வருகின்றன. ஐ.நா.வைத் தங்களின் கைப்பாவையாகக் கொண்டு, ஈராக்குக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றி, அந்நாட்டின் உற்பத்தி, வணிகம், ஏற்றுமதி - இறக்குமதி, சேவை ஆகிய அனைத்து துறைகளையுமே சீரழித்து வருகின்றன.

ஐ.நா. ஆய்வுக்குழு எனும் போர்வையில் மேலை ஏகாதிபத்தியவாதிகள், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 40 முறைக்கும் மேலாக ஈராக்கில் தங்களின் ஆயுத மற்றும் உற்பத்திதுறை அழிப்பு பணியை மேற்கொண்டுள்ளனர். ஒவ்வொரு முறையும் இக்குழுவின் தலைமை அமெரிக்காவிடம்தான் இருந்து வந்திருக்கிறது. போரின்பொழுது அமெரிக்கா தாக்கி அழித்ததைவிட, பல மடங்கு அதிகமான அளவு ஈராக்கின் ஆயுத பலத்தை அழித்துள்ளதாகக் கூறியுள்ளது இக்குழு. ஆயுத தொழிற்சாலைகளை மட்டுமின்றி, உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளையும், உற்பத்தி மற்றும் ஆயுதம் என்று இருவித

ஈராக் - பாஸ்ரா பகுதியில் இடிந்து கிடக்கும் வீடுகள், இறந்து கிடக்கும் கால்நடைகள்; பன்னாட்டு விமானங்களின் தாக்குதல்.





படிப்பகம்

www.padippakam.com

நோக்கங்களுக்காக செயல்படும் தொழிற்சாலைக்ளையும், அணு மற்றும் இரசாயன ஆயுத ஒழிப்பு தீர்மானத்தின் கீழ் வருவதாகக் கூறி அழித்துள்ளன. ஈராக்கின் விவசாயத்துறை அமைச்சக அலுவலகத்தைக் கூட விட்டுவைக்க வில்லை இவர்கள். ஏகாதிபத்தியங்களின் நோக்கமே. ஈராக்கின் தற்காப்பு பொருளாதார பலத்தை அழித்து தங்களிடம் கையேந்த வைப்பது, தற்காப்பு பலத்தையும் ஒழித்து நிராயுத பாணியாக்குவது என்பதுதான்.

போர் முடிந்து ஏழு மாதங்கள் கழித்தே, ஐ.நா. ஈராக்கை 160 கோடி பெறுமானமுள்ள பெட்ரோலியப் பொருட்களை அடுத்து வரும் ஆறுமாதங்களில், தனது முழுக்கட்டுப்பாட்டின் கீழ், துருக்கியிலிருந்து ஏற்றுமதி செய்ய அனுமதியளித்தது. இத் தொகையில் 45 சதவீதத்தை குவைத் மற்றும் குர்தீஷ் பகுதிகளின் மறு நிர்மாணத்திற்காக, ஐ.நா.வே எடுத்துக் கொள்வதென்றும், மீதமுள்ள தொகைக்கு ஐ.நா. அனுமதி அளிக்கும் மருந்துப் பொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் மட்டுமே இறக்குமதி செய்து கொள்ள அனுமதியளித்தது.

ஈராக்கின் வருமானமே பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலமே கிடைக்கின்றது; இதனை ஐ.நா. தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததன்மூலம் ஈராக்கின் மறு நிர்மானத்தையே - 57,200 கோடி ரூபாய் இதற்கு தேவை - தடுத்து நிறுத்திவிட்டது. இதனால், ஈராக்கின் மின் உற்பத்தியும், பொருளுற்பத்தி சாலையும் சீர்செய்யப்படாமலேயே உள்ளன. இதன் விளைவாக நகரங்களில் 70 சதவீதத்துக்கும் மேலான மக்களுக்கு வேலை வாய்ப்புகளில்லை; போருக்கு முன்னர் 3.25 'டாலரா'க இருந்த ஒரு 'தினாரி'ன் மதிப்பு தற்பொழுது 10 'சென்டுகள்' தான் என்றளவுக்கு பொருளாதார சரிவு ஏற்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, கள்ள நோட்டுக்களை புழங்கவிட்டு ஈராக்கின் நிதித் துறையையே முடமாக்க, முயற்சியெடுத்துள்ளனர் ஏகாதிபத்தியவாதிகள்..

உரங்கள், விதைகள் இறக்குமதி செய்து கொள்ள ஐ.நா.தடைவிதித்துள்ளது. போரினாலும், ஆய்வுக்குழு நடவடிக்கைகளாலும் ஒட்டு மொத்த விவசாயத்துறையில் 50 சதவீதத்திற்கும் மேல் பாழ்பட்டு போயுள்ளன. இதன் காரணமாக, உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் விலை 48 சதவீதம் அளவுக்கு போருக்கு முந்தைய நிலையை விட அதிகரித்துள்ளது.

1063 'தினார்கள்' இருந்தால்தான் ஒரு குடும்பம் வாழமுடியும் என்ற தற்போதைய நிலையில், ஈராக் குடும்பத்தாரின் சராசரி வருமானம் 80 முதல் 100 'தினார்கள்'தான் உள்ளது. இதனால், மக்கள் தங்களது நகை மற்றும் பிற பயன்பாட்டு பொருட்களை விற்று செலவை



அமெரிக்க போர் விமானத்தின் அத்துமீறிய அடாவடி தாக்குதல்; பொருட்கள் நாசம்; அச்சத்தில் ஈராக் மக்கள்.

ஈடுகட்ட முயற்சி எடுக்கின்றனர். பெண்கள் பக்கத்து நாடுகளுக்குச் சென்று விபச்சாரத்தில் ஈடுபட்டு, வாழ்க்கைச் செலவை ஈடுகட்டும் இழிநிலையினையும் தோற்றுவித்துள்ளது இத்தடையுத்தரவுகள்.

போரும், அதைத் தொடரும் பொருளாதாரத் தடைகளும் ஈராக்கின் மழலைச் செல்வங்களைத்தான் முதல் தாக்குதல் இலக்காகக் கொண்டுள்ளன. போரின் பொழுது 50 சதவீதத்துக்கும் மேலான கர்ப்பிணிகளுக்கு குறைப்பிரசவம் தான் ஏற்பட்டுள்ளது. இக்குழந்தைகளை பராமரிப்பதற்கு போதிய மருத்துவக் கருவிகளும், அத்தியாவசிய உயிர்காக்கும் மருந்துப் பொருட்களும் இல்லாததால், சென்ற வருட அறிக்கையின் படி 1.7 லட்சம் குழந்தைகள் இறக்கும் நிலையில் இருந்தனர். ஈராக்கில் இருந்த 43 மருத்துவமனைகளும், 800 சுகாதார நிலையங்களும் மின்சாரம், மருந்து, நீர் முதலியவைகளின் பற்றாக்குறையின் காரணமாக முழுவதும் இயங்கும் நிலையில் இல்லை. தொடர்ச்சியான குண்டு வீச்சுத் தாக்குதலின் காரணமாக பல்வேறுவிதமான மனநோய்களும், கழிவு நீர் வெளியேற்றும் அமைப்பு, போரில் சீர்குலைக்கப்பட்டதால் தொற்று நோய்களும் பெரும்பான்மையான மக்களைத் தாக்கி வருகின்றன.

ஏகாதிபத்தியங்கள் தங்களின் அத்துமீறல்களையும், செயற்கையாக ஏற்படுத்திய இப்பேரழிவுகளையும் 'ஐ.நா. தீர்மானம்' எனும் பெயரில் வசதியாக வெளிஉலகிடமிருந்து மறைத்துவிட்டு, தனது அரசியல், பொருளாதார சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள ஈராக் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையினையும் மேலும், மேலும் ஆயுத பலத்தைக் கொண்டு எதிர்த்துவருகின்றன. சனவரி 13 அன்றும் அதன் பின்னும் நடந்த தாக்குதல்கள் ஈராக்கின் இராணுவத்தளங்களின் மேல் மட்டுமல்லாது, குடியிருப்பு பகுதியிலும், தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் மீதும் திட்டமிட்டு தாக்குதல் நடத்தியுள்ளது அமெரிக்கா. இதன் காரணமாக பொதுமக்களில் 19 பேர் மாண்டு போயுள்ளனர். சனவரி 18 அன்று நடந்த தாக்குதலில் மட்டும் பயன்படுத்தப்பட்ட வெடி மருந்துப் பொருட்களின் மதிப்பு மட்டும் 4 கோடி டாலர், சனவரி 20, 21 தேதிகளில் நடைபெற்ற தாக்குதல்கள் கிளிண்டனும், புஷ்ஷின் வழியில் தான் செல்வார் என நிரூபிக்கின்றன.

தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருந்த பொழுது, ஈராக்கிற்கு வெளியே எந்தவொரு மூன்றாம் உலக நாடுகளிலும், குறிப்பாக பிற மேற்காசிய நாடுகளிலும் அமெரிக்காவை எதிர்த்து ஊர்வலங்களோ, ஆர்ப்பாட்டங்களோ நடைபெறவில்லை. சனவரி 18 தாக்குதலின் பின்தான் துருக்கி, எகிப்து, பாகிஸ்தான் நாடுகள் விமர்சிக்கத் தொடங்கின. ரசியாவும், பிரான்சும் அமெரிக்காவின் நடவடிக்கைகளில் மாறுபட்ட கருத்து கொண்டுள்ளதாக.அறிவித்தன. ஆனால், இந்நாடுகள் யாவும், 'பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டும்' என்று அறிக்கை விடுவதோடு தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டன.

ஈராக்கைப் பொருத்தவரை அமெரிக்காவின் நோக்கம் சதாமை அதிகாரத்திலிருந்து அப்புறப்படுத்துவது, அந்நாட்டை தனது நவகாலனியாக்குவது என்பதுதான், அதற்காக, பல்வேறு சதிவேலைகளில் அடுத்தடுத்து ஈடுபட்டு வருகின்றது. சமீபத்திய தாக்குதல்கள் அதனின் மூர்க்கமான மேலாதிக்க வெறியை வெளிப்படுத்துவதுடன், தனது 'ஒற்றை துருவ' திட்டத்தை மீண்டும் உலகுக்கு செய்தியாகக் கொடுத்துள்ளது. 'அதாவது, நாளை தன்னை எதிர்க்கும் எந்தவொரு மூன்றாம் உலக நாட்டுக்கும் ஈராக்கின் கதிதான் ஏற்படும் என்பது தான் அது.

● பாலன்

படிப்பகம்

www.padippakam.com




மாநாட்டை விளம்பரப்படுத்தி தெருவில் அலைந்த இந்துவெறியர்கள்

# ''இந்து வெறியுணர்வு மாநாடு''

''இந்து ஓட்டுவங்கியை உருவாக்கிட அணி திரண்டு வருக! வருக!' என்று சொல்லாமல் சொல்லி விளம்பரம் செய்யப்பட்ட இந்து முன்னணியின் பிப். 21 கோவை மாநாடு, ''இந்து விழிப்புணர்வு மாநாடு'' அல்ல; இந்து வெறியூட்டிய மாநாடு! மதவெறி நஞ்சு கக்கி, கலவரத்தை தூண்டி ஓட்டு - ஆட்சி ஆதாயம் தேடும் மாநாடு என்பதற்கு கீழ்கண்டவைகளே ஆதாரங்கள்.

ஊர்வலத்தில் ஆயுதங்களுடன் காட்சியளிக்கும் கண்ணன், பிள்ளையார், காளி முதலிய கடவுள் படங்களை ஏந்தி வந்தது அவர்களது நோக்கத்தை அம்பலப்படுத்தியது. ''எங்கள் நாடு இந்து நாடு, ஏற்காதவன் வெளியேறு'', ''இந்து என்று சொல்லு தலைநிமிர்ந்து நில்லு'', ''நாடு கடத்து நாடு கடத்து கம்யூனிஸ்டுகளை நாடு கடத்து'', ''முஸ்லீம்களின் கைக்கூலியே கம்யூனிஸ்டு'', ''தடையா, தடையா ஆர்.எஸ்.எஸ்-க்கு தடையா? போடா மடையா'', ''காஷ்மீர் மீது கைவைத்தால் பாகிஸ்தான் இருக்காது'', ''ராமர் எங்கள் உயிரடா; பாபர் எங்கள் மயிரடா'', ''5-ம், 3-ம் எட்டு, துலுக்கன் தலையை வெட்டு'' முதலிய முஸ்லீம் வெறுப்பு - இந்து வெறி முழக்கங்கள் ஊர்வலத்தில் போடப்பட்டன.

பொதுக்கூட்டத்தில் பேசியவர்களில் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் என்பவர் காஷ்மீரில் இந்துக்கள், இந்து கோயில்கள் தாக்கப்படுவதாகப் புளுகி வெறியூட்டிப் பேசினார். பிறகு ''சரயூ நதிக்கரையில் இருந்த அயோத்தி முடிந்துவிட்டது. கங்கை கரையில் உள்ள காசி, யமுனைக் கரையில் உள்ள மதுரா ஆகிய பிரச்சினைகள் மீதமுள்ளன'' என அவர்களின் திட்டத்தை உணர்த்தினார்.

மத்திய பிரதேச முன்னாள் முதல்வர் பாட்வா பேசும்போது ''டிசம். 6 இந்து மக்கள் மகிழ்ச்சியடைய வேண்டிய நாள். 400 ஆண்டுகால களங்கம் துடைத்தெரியப்பட்டுவிட்டது. இதற்காக வெட்கப்படுகிறேன் என்று சொல்பவன் இந்த நாட்டைச் சேர்ந்தவன் அல்ல'' என்று வெறியை கக்கினார்.

பா.ஜா.க. வின் தமிழ் மாநில செயலாளர் இல.கணேசன் பேசுகையில் ''சென்னையில் முஸ்லீம் லீக் மாநாடு நடந்துள்ளது. அது தேச விரோதிகள் நடத்தியது. இங்கு கோவையில் நடப்பது தேச பக்தர்களது கூட்டம். பா.ஜ.க பேரணி சென்னையில் (மார்ச் - 21) நடக்க உள்ளது. அதே வாரத்தில் கோவையில் தி.மு.க. இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்த உள்ளது. அன்று கோவையில் தேச விரோதிகள்; சென்னையில் தேச பக்தர்கள்'' என்றார். 'இந்து உணர்வு'தான் எங்களுக்கு வெடிகுண்டு அதைக் கொண்டு மலையையும் தூள்தூளாக்கி விடுவோம் என்று பேசினார் கோவிந்தாச்சார்யா.

இந்து முன்னணி மாநில அமைப்பாளர் இராம.கோபாலனோ, ''இது பெரியார் பிறந்த பூமி என்கிறார்கள். இது ஆழ்வார்கள், நாயன்மார்கள் தோன்றிய பூமி. இடையில் சில புல்லுருவிகள் தோன்றியிருக்கலாம்; அதுபற்றி கவலையில்லை'' என்றும் ''இந்து விரோதிகள்(?) எது பேசினாலும் சும்மா பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. மக்களே(?) அதை பொறுத்துக் கொள்ளாத நிலையை ஏற்படுத்த வேண்டும்'' என்று வெறியூட்டிக் கத்தினார்.

பேசியவர்கள் அனைவரும் மாநாட்டிற்கு பார்ப்பன விசுவாசத்தோடு அனுமதி கொடுத்து உதவி செய்த ஜெயலலிதாவிற்கு நன்றி சொல்ல மறக்கவில்லை. அதேபோல் பார்ப்பனீயத்தையும், இந்துத்துவத்தையும் எதிர்க்கின்ற தமிழின, தமிழின ஆதரவு, 'கம்யூனிச', மார்க்சிய - லெனினிய அமைப்புகளையும் முஸ்லீம் அமைப்புகளையும் தீவிரவாதிகள் - பயங்கரவாதிகள் என சித்தரித்து தாக்கிப் பேசினார்கள். கோவையில் கொலை செய்யப்பட்ட இந்து வெறியர்களான வீரகணேஷ், சிவா ஆகியோரையும், ராமேசுவரத்தில் 'நக்சலைட்டு'களால் அழித்தொழிக்கப்பட்ட இந்து முன்னணியின் மாநில செயலாளர் எம்.முனியசாமியையும் 'தியாகி'களாக்கி அஞ்சலி செலுத்தி மாநாட்டில் தீர்மானம் போட்டனர்.

இம்மாநாட்டிற்கு இவர்கள் தமிழகத்திலிருந்து சில ஆயிரம் பேரை திரட்டியதோடு பிற மாநிலங்களிலிருந்து ஏராளமானோரை திரட்டி கும்பல் காண்பித்தார்கள். கேரளாவிலிருந்து அதிகமானோரை கொண்டுவந்து இறக்கியிருந்தார்கள். இவர்களது ஊர்வலத்தின்போது பகுதியிலுள்ள கடைகள் அடைக்கப்பட்டு, வீடுகள் பூட்டப்பட்டு ஊரடங்கு போட்டதுபோல் நகரமே பீதியில் உறைந்திருந்தது. ஊர்வலத்தை வேடிக்கைப் பார்க்கக்கூட அஞ்சி பொது மக்கள் சாலையோரங்களில் நிற்கவில்லை. போலீசும் தன்பங்கிற்கு முஸ்லீம்கள் அதிகம் வாழும் உக்கடம், கோட்டை மேடு பகுதிகளில் புகுந்து முற்றுகையிட்டதோடு பாதைகளில் தடைகளை ஏற்படுத்தியும் பீதியூட்டினர். முன்னெச்சரிக்கை நடவடிக்கை என ஏராளமான முஸ்லீம்கள், தமிழின ஆதரவாளர்கள், புரட்சிகர - ஜனநாயக அமைப்பினரையும் கைது செய்து அடைத்து வைத்தனர். அதே சமயம் இந்து வெறியர்களை கைது செய்யாமல் மாநாட்டிற்கு அனுப்பி பாதுகாப்பு கொடுத்தது போலீசு.

தமிழக மக்களின் விருப்பத்திற்கு முரணாக, திணிக்கப்பட்ட மாநாடு என்பதும் எதிர்க்கும் அமைப்பினரையெல்லாம் கைது செய்து முடமாக்கிவிட்டு பாசிச - அரசு பயங்கரவாக அடக்குமுறையின் உதவியுடன் வெற்றிகரமாக நடத்தப்பட்ட மாநாடு என்பதும் சொல்லாமல் விளங்கும்!



படிப்பகம்

www.padippakam.com

# திரிபுரா தேர்தல் தள்ளிவைப்பு
# பாகப்பிரிவினைத் தகராறு

''கடந்த பிப்ரவரி 28 உடன் திரிபுரா மாநில சட்டசபையின் ஐந்தாண்டுக் காலம் முடிவடைந்து விட்டபடியால், தேர்தல் வன்முறைகளுக்கு காரணமான சமீர் ரஞ்ஜன் பர்மன் தலைமையிலான மந்திரிசபை காபந்து சர்க்காராக நீடிக்கக் கூடாது; உடனே சட்டசபையைக் கலைத்துவிட்டு, அங்கு ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த வேண்டும். தலைமை தேர்தல் கமிஷனர். திரிபுரா சட்டசபை தேர்தலை தள்ளிவைத்ததற்குக் காரண:மான அங்கு நிலவும் பதட்டமான சூழ்நிலை கட்டுப்படுத்தப்பட வேண்டும்; ராஜ்ய மந்திரி சந்தோஷ் மோகன் தேவ் உள்ளிட்டு, முறைகேடுகளில் ஈடுபட்ட அனைத்து அதிகாரிகளின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மத்தியஅரசு இது தொடர்பாக ஓர் அறிக்கையினை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்'' என எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருமித்ததாக கோரி வருகின்றன. மார்ச் 1-லிருந்தே இப்பிரச்னைகள் பாராளுமன்றத்திலும், ராஜ்யசபையிலும் எழுப்பப்பட்டு, சபைகளை ஒத்திவைக்குமளவுக்கு வாதப் பிரதிவாதங்கள் எழுந்து கூச்சலும், குழப்பமும் நிலவியுள்ளது.

காங்கிரஸ் மேலிடமே இப்பிரச்னை தொடர்பாக இரு பிரிவுகளாகத்தான் உள்ளது. குறிப்பாக மோகன் தேவுக்கு ஆதரவான முதலமைச்சர் பர்மன் கோஷ்டியினர், தேர்தல் தள்ளிவைப்பு அறிவிப்பு வந்தவுடனேயே 24 மணி நேர பந்துக்கு அழைப்புவிடுத்தது. மறுபுறம் உள்துறை மந்திரி சவானும், பாராளுமன்ற விவகார அமைச்சர் சுக்லாம் ''மாநில கவர்னரிடமிருந்து அறிக்கை வராமல் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த முடியாது'' என்றே பதில் கூறியுள்ளனர்.

தேர்தல் கமிஷன் இம்முடிவை ராவ் அரசு தனக்கு சாதகமாகவே பயன்படுத்திக் கொண்டுள்ளது. இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில், ராவ் அரசு நீடிப்பதற்கு 'மார்க்சிஸ்டு'களின் ஆதரவு அதற்குத் தேவை. வரவு - செலவு அறிக்கையைத் தாக்கல் செய்யும் நேரத்தில் மேலும் எந்த சிக்கலும் நேராமல் 'மார்ச்சிஸ்டு'களே கோரியுள்ள இத்தள்ளிவைப்பை செயல்படுத்தியதன் மூலம் அதனை சாந்தப்படுத்தி தன் பக்கம் இழுத்துக் கொண்டுள்ளது ராவ் அரசு.

பிப்ரவரி முதல் இரு வாரத்துக்குள் வன்முறை சம்பவங்களால் 12 பேர் இறந்து போனது, மாநில தேர்தல் அதிகாரிகளே காங்கிரசின் ஏஜெண்டாகச் செயல்படுவது - இவற்றை எதிர்கட்சிகள் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தின. குறிப்பாக 'மார்க்சிஸ்டு கட்சி தேர்தலைத் தள்ளிப் போட வேண்டம் எனக் கோர ஆரம்பித்தது. காங்கிரஸ் - திரிபுரா உபஜாதி சமிதி கூட்டணிக்கு பிற மலைவாழ் மக்கள் அமைப்புகளிடமிருந்து கடும் எதிர்ப்புகள் வர ஆரம்பித்தன. வேட்பாளர்கள் தொகுதிக்குப் பிரச்சாரம் செய்ய சொல்ல முடியாதவாறு நிலைமை மோசமானது.

தேர்தல் கமிஷன் இம்முடிவை ராவ் அரசு தனக்கு சாதகமாகவே பயன்படுத்திக் கொண்டுள்ளது. இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில், ராவ் அரசு நீடிப்பதற்கு 'மார்க்சிஸ்டு'களின் ஆதரவு அதற்குத் தேவை. வரவு - செலவு அறிக்கையைத் தாக்கல் செய்யும் நேரத்தில் மேலும் எந்த சிக்கலும் நேராமல் 'மார்ச்சிஸ்டு'களே கோரியுள்ள இத்தள்ளிவைப்பை செயல்படுத்தியதன் மூலம் அதனை சாந்தப்படுத்தி தன் பக்கம் இழுத்துக் கொண்டுள்ளது ராவ் அரசு.

திரிபுராவில் ஆளுநர் ஆட்சியை நிறுவக்கோரி போலிக்கம்யூனிஸ்டுகள் டில்லியில் நடத்திய பேரணி – ஆர்ப்பாட்டம்




1972 நடைபெற்ற தேர்தலக்குப் பின் திரிபுராவில் காங்கிரஸின் செல்வாக்கு தேய்பிறையாகத்தான் இருந்துள்ளது. 1977 தேர்தலில் முன்னைய தேர்தலில் தான்பெற்ற இடங்களில் ஒரு இடத்தைக் கூட அதனால் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. 1988 தேர்தலில் கலவரங்களைத் தூண்டிவிட்டும், மாநிலம் முழுவதையும் கலவரப் பகுதியாக அறிவித்தும், துணை ராணுவப் படைகளைக் குவித்தும் ஒரு பாசிசத் தேர்தலை நடத்தி கூட்டணி அரசாங்கத்தை ஏற்படுத்தியது. கடந்த ஐந்து ஆண்டுகளில் கோஷ்டி பூசல்களினாலும், நிர்வாக முறைகேடுகளினாலும் அதன் செல்வாக்கு மேலும சரிந்தே சென்றுள்ளது. இப்படிப்பட்ட நிலையில் 1988-ஐப் போலவே அரசு எந்திரத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றிபெற்றிருந்தால். பாராளுமன்றத்தில் அது எதிர்விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும். எனவே, மத்தியில் தன்னைத் தக்க வைத்துக் கொள்வது என்ற ஆதாயக் கணக்கு போட்டுத்தான் இந்த ஒத்திவைப்பை அங்கீகரித்துள்ளது.

எதிர்க் கட்சிகள் கோரும் ஜனாதிபதி ஆட்சியின் கீழ் கோஷ்டிப் பூசலற்ற, முறைகேடுகளற்ற நியாயமான, சுதந்திரமான தேர்தலை நடத்தி விட முடியுமா? நிச்சயமாக முடியாது. ஏனெனில் ஜனாதிபதி ஆட்சியென்பதே மறைமுகமான காங்கிரஸின் ஆட்சிதான். இவ்வுண்மையை இக்கட்சிகள் திட்டமிட்டே மூடி மறைக்கின்றன. இருந்தும் இவை ஜனாதிபதி ஆட்சியைக் கோரக் காரணம்: அதன்மூலம் காங்கிரஸில் மேலும் கோஷ்டிப்பூசல் அதிகமாகி அதன் வெற்றியைப் பாதிக்கும். மறுபுறம் 'மார்க்கிஸ்டு'களைப் பொருத்தவரை தனது கோஷ்டிப்பூசலை - நிருபன் சக்ரவர்த்தியின் அதிகாரத்துவப் போக்கிற்கு எதிராக எட்டு உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விலகி முற்போக்கு ஜனநாயக முன்னணி எனும் பெயரில் போட்டியிடுகின்றார். இப்பிரச்சினையெல்லாம் இக்கால அவகாசத்தில் தீர்த்துவிடலாம் என நம்புகிறது.

ஓட்டுக்கட்சிகள் என்றாலே கோஷ்டி மோதல்களும், பணபலம், அதிகார பலம், ஆள் பலம் கொண்டு எதிர் கோஷ்டியினரை விலை பேசுவதும், தனக்கு சாதகமில்லையென்றால் எதிர்ப்பதும், சாதகமென்றால் முடங்கிக் கொள்வதும், முறைகேடுகளில் ஈடுபடுவதும் சர்வ சாதாரணமாகி விட்ட காலமிது. தேர்தல் காலக் கட்டங்களில் இக்கிரிமினல் நடவடிக்கைகள் இன்னும் கூடுதல் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆளுங்கட்சி என்றால் அரசு இயந்திரத்தின் அனைத்து துறைகளையும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது. எனவே, ஓட்டுக் கட்சிகள் 'நேர்மையான, சுதந்திரமான தேர்தல்' பற்றி வடிப்பது முதலைக் கண்ணீரே. இவர்களிடம் அதற்கான அடிப்படையும் கிடையாது. அருகதையும் கிடையாது என்பதே நிதர்சனமான உண்மை.

படிப்பகம்

www.padippakam.com





# இதுதான் இன்றைய இந்தியா

ஜெயா மகா காளியின் 45-வது பிறந்தநாள் (பிப்-24) விழா இந்த ஆண்டும் பகட்டு குறையாமல் நடந்தது. ஆனால் கடந்த ஆண்டில் மகாமகப் படுகொலைகளை மறைத்து மக்களை கவர்வதற்காக நடந்த அன்னதானம், இலவச வேட்டி, சேலை, லட்டு, சீருடை, நோட்டு சிலேட்டு போன்றவை வழங்குவது குறைந்துபோய், 'அம்மா'வை திருப்திப்படுத்துவது - கவர்வதோடு நின்று கொண்டது. ஒரு நாளைய செய்திதாள்களையே குத்தகைக்கு எடுத்து முழுக்க விளம்பரங்கள்; பனை உயர சுவரொட்டிகள்; கோயிலில் விசேச பூஜைகள், நடு ரோட்டில் அங்க பிரதட்சணம், இலவச திருமணம் நடத்துவது என எதுவும் பாக்கி வைக்கவில்லை. அமைச்சர் இந்திரா குமாரி பால் குடம் எடுத்தார். வளர்மதி தீச்சட்டி ஏந்தினார்; செங்கோட்டையன் தேரிழுத்தார். அரங்கநாயகம், செல்வகணபதி முதலானோர் குழந்தை பெற்றவர்கள், திருமணமானவர்களை எல்லாம் எண்ணிக்கைக்கு 45 பேரை பிடித்து 'மறுமணமும்', இரண்டாவது மணமும் செய்துவைத்தார்கள். கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதில் 10 வருட கைதிகளையா 12 வருட கைதிகளையா என நிர்வாக குளறுபடி செய்து கைதிகளின் எதிர்ப்பை சம்பாதித்தார்கள். ஒருவாறாக பல லட்சங்களை கொட்டியழித்து கூத்தாடி முடித்தார்கள்.

இதோ இன்னொருபுறம் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைப் பாருங்கள். நிதம் கஞ்சிக்காக கடுமையாக உழைத்து வந்தும் கையில் காசு தங்குவதில்லை. அரிசி, கோதுமை, சர்க்கரை விலையும் பிற அத்தியாவசியப் பொருட்களின் விலையும் விண்ணில் பறக்கிறது! பாலுக்காக, தண்ணீருக்காக , மண்ணெண்ணெய்க்காக , வேலைக்காக நிற்கும் 'கியூ' வரிசை குறைந்தபாடில்லை. வாழ்வதற்கான கேள்விக் குறி பெரிதாகிக் கொண்டே போவதால் பொறுமையிழந்து போராடாவும் தொடங்கிவிட்டார்கள். மதுரையில் தலித் பேந்தர் இயக்கத்தின் பெண்கள் மார்ச் 23-ந் தேதி அரிசி, ரேஷன் பொருள் விலை உயர்வைக் கண்டித்து வெறும் பானை, அடுப்புகளுடன் முழக்கமிட்டு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய காட்சிதான் இது.

தனி ஒருத்தி மகிழ்ச்சிக்காக, தமது பதவி - சுயநலத்திற்காக ஊதாரி செலவழித்து கொட்டமடிக்கும் இம்மந்திரி பிரதானிகள் கூட்டம் எவ்வளவு நாளைக்கு நீடிக்கும்? இது போன்ற பெண்களின் போராட்டக் கரங்கள் ஒட்டுமொத்தமாக உயர்ந்தால் தீச்சட்டி ஏந்தும், பால்குடம் சுமக்கும் ஜெயாவின் 'எடுபிடிகள்' ஓடி ஒளியத்தானே வேண்டும்?



படிப்பகம்